

ஜென்ம ஸாபல்யம் அளிக்கும்
மஹாசித்தர் கோடிதாத்தாஸ்வாமி
ஆசியுடன்



உலகின் 13வது ஜோதிர்லிங்கம்
ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத
ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரர்

# உத்பவ மஹாசரித்திரம்



ஜோதிர்லிங்க மஹத்துவம்
மஹா சிவராத்திரி வைபோகம்
சென்னப்பமலை ஸ்தலபுராணம்

**ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரர் ஜோதிர்லிங்க தேவஸ்தானம்**

சென்னப்பமலை, பாட்டூர் கிராமம், ஆம்பூர் அருகில்,
வேலூர் மாவட்டம், தமிழ்நாடு - 635 811.

(2019, மார்ச் 4, மஹாசிவராத்திரி அன்று வெளியிடப்பட்டது)

# 13 ஜோதிர்லிங்கப் புண்ணிய ஸ்தலங்கள்




| | | |
|---|---|---|
| 1. | கேதார்நாத் (இமயமலை), உத்திரப்ரதேசம் | கேதாரேஸ்வர் |
| 2. | வாரணாசி (காசி), உத்திரப்ரதேசம் | விஸ்வநாத் |
| 3. | ராமேஸ்வரம், தமிழ்நாடு | ராமநாதேஸ்வர் |
| 4. | நாசிக், மஹாராஷ்டரம் | திரியம்பகேஷ்வர் |
| 5. | ஸ்ரீ சைலம், ஆந்திரப்ரதேசம் | மல்லிகார்ஜுனேஸ்வர் |
| 6. | ஸௌராஷ்ட்ரம், குஜராத் | சோம்நாதேஸ்வர் |
| 7. | உஜ்ஜைன், மத்யப்ரதேசம் | மஹாகாலேஸ்வர் |
| 8. | சிவபுரி, மத்யப்ரதேசம் | ஓம்காலேஸ்வர் |
| 9. | பீமஷங்கர், மஹாராஷ்ட்ரம் | பீமாஷங்கர் |
| 10. | தேவஸரோவர், மஹாராஷ்ட்ரம் | க்ரீஷ்னேஸ்வர் |
| 11. | தாருகாவனம், குஜராத் | நாகேஸ்வர் |
| 12. | தியோகர், பீஹார் | வைத்யநாத் |
| 13. | ஆம்பூர்-சென்னப்பமலை, தமிழ்நாடு | பொன்முடி சூரியநந்தீஸ்வர் |

மஹாசித்தர் கோழிதாத்தாஸ்வாமி தரிசனம் : அமாவாசை, பௌர்ணமி நாட்கள் மற்றும் எல்லா ஞாயிற்றுகிழமைகளிலும் ஆசீர்வாதம் - காலை 10-12 வரை

**ஜென்ம ஸாபல்யம் அளிக்கும்**

**மஹாசித்தர் கோடிதாத்தாஸ்வாமி ஆசியுடன்**

## உலகின் 13 வது ஜோதிர்லிங்கம்

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத

# ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரர்

# உத்பவ மஹாசரித்திரம்

ஜோதிர்லிங்க மஹத்துவம்

மஹாசிவராத்திரி வைபோகம்

சென்னப்பமலை ஸ்தலபுராணம்

**(2019 மார்ச் 4, மஹாசிவாராத்திரி அன்று வெளியிடப்பட்டது)**

*இந்தத் தொகுப்பில் விவரிக்கப் பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் எங்கள் எண்ணத்துக்குள் பிரதிபலித்த விஷயங்கள். எங்கள் குருவின் உதவியுடன், அவர்மேல் எங்களுக்குள்ள நம்பிக்கையின் அடிப்படையில், அனுபவப் பூர்வமாக உணர்ந்தவை. மற்றும் நேரில் கண்டவை.*

*அவைகளைப் புரிந்துக் கொண்டு ஏற்றுக்கொள்வது படிப்பவர்களின் நம்பிக்கையையும், அவர்களது மனநிலைப் பக்குவத்தையும் பொறுத்தது.*

***காண்பது பொருளாகும், காணாதது இமையாகும்!***

**ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வர ஜோதிர்லிங்க தேவஸ்தானம்,**
**சென்னப்பமலை, பாட்டூர் கிராமம், ஆம்பூர் அருகில்,**
**வேலூர் மாவட்டம், தமிழ்நாடு- 635811**

9443813658, 9080551366, 9443096714, 9994215036

**நாடி வந்தால் கோடி நலம்**

**குரு அருள் பொருள் தரும்**

**ஆதவனைத் தொழுதால் ஆயுள் பெருகும்**

# முன்னுரை

மனித சரித்திரத்தில் இடம் பெற்ற ஒரு அற்புத ஆன்மிக நிகழ்ச்சி, தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள வேலூர் மாவட்டம் ஆம்பூர் அருகில் அமைந்துள்ள சென்னப்பமலை திருத்தலத்தில் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள், மஹாசிவராத்திரித் திருநாள் அன்று, இந்த உலகமே அதிசயக்கும் வகையில் நடந்தேறியது.

தமிழ் மாதக் கணக்குப்படி இது விஷு வருஷம் மாசி மாதம் 28 ஆம் நாள் ஆகும். யுகங்கள் தோன்றிய நாள் முதல் கொண்டு உருவாகி உள்ள ஜோதிர்லிங்கங்களின் வரிசையில் இந்த உலகின் 13 வது ஜோதிர்லிங்க உத்பவம் அன்றுதான் இங்கே, ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் அதிவிமர்சியாக, ஆகம நியதிகளுடன் மங்களம் சூழ நடந்தேறியது.

இந்த ஜோதிர்லிங்க உத்பவம், பக்தர்களுக்கு ஜென்ம ஸாபல்யம் அளிக்கவும், இறை நம்பிக்கையுடன் கலந்த அமைதி, ஆனந்தம், பாதுகாப்புகொண்ட வாழ்க்கை பயணத்துக்கு ஏற்ற நெறிமுறைகளை அவர்களுக்கு போதிக்கும் புண்ணிய பூமியாக சென்னப்பமலைத் திருத்தலத்தை இந்த வையகத்துக்கு அடையாளம் காட்டியுள்ளது என்றால் அது மிகையாகாது.

பதினாறு ஆண்டுகள் நகர்ந்துள்ள நிலையில் இந்தக் கையேடு இந்த அதிசய வைபவத்தை விளக்கும் வகையிலும், ஜோதிர்லிங்க உத்பவதத்துவத்தை இந்த உலகிற்கு அறிமுகம் செய்யவும் நாங்கள் எடுத்துக்கொண்ட ஒரு முயற்சி.

இந்த கையேட்டில் இரண்டு அதிசயங்களை விவரித்துள்ளேன்.

ஒன்று எங்கள் குரு கோடிதாத்தாஸ்வாமி(தாத்தா). முக்காலமும் உணர்ந்த பிரம்மஞானி இவர். அருவமாக சஞ்சரிக்கும் இந்த ஜகத்குரு தனது சீடர் ஸ்ரீ ராமநாதஸ்வாமி அவர்களின் உடலில் ஐக்கியமாகி, உருவம் கொண்டு, சென்னப்பமலைத் திருத்தலத்தில் தன்னை நாடி வரும் பக்தர்களுக்குக் கோடி நலம் புரிந்து வருகிறார். குருவே சீடராகி சீடரே குருவாகும் ஒரு புதிய குருகுல சமஸ்தானம் உருவாகிவிட்டது இங்கே.

இரண்டாவது, இங்கே உத்பவமாகியுள்ள ஜோதிர்லிங்கம். காண்பவர்களுக்கு லிங்கம்மாகவும், உணர்பவர்களுக்குப் பரமனே ஜோதி வடிவிலும் காட்சி தந்து அருள் பாலிக்கும் அதிசயம். இந்த இரண்டு அதிசயங்களுமே இந்தத் திருத்தலத்தின் தனிச் சிறப்பு.

இங்கே கொடுக்கபட்டுள்ள பல விஷயங்கள், இந்த ஜோதிர்லிங்க உத்பவத்துக்கு ஆதிகாரணமாக விளங்கிய எங்கள் குரு தாத்தாஸ்வாமி அவர்களிடமிருந்து பல நாட்கள் பக்தி ஸ்ரத்தையுடன் கேட்டுப் பெற்றவை. உணர்ந்தவை. நேரடியாகவும் பார்த்தவை. அத்தகைய அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த அவருக்கும், அவரின் சீடர் ஸ்ரீ ராமநாதஸ்வாமி அவர்களுக்கும் என் நன்றிக்கடன் கலந்த கோடி வந்தனம்.

இந்தக் கையேடு வெளிவர உதவி செய்த தேவஸ்தான நிர்வாகிகளுக்கும், பல வகைகளில் உதவி தந்து பக்கபலமாக நிற்கும் மற்ற நண்பர்கள் பலருக்கும் மனம் கனிந்த நன்றி.

இந்தியாவில் பல புண்ணிய ஸ்தலங்களில் ஏற்கனவே உத்பவமாகி உள்ள 12 ஜோதிர்லிங்கங்களும் பல யுகங்களுக்கு முன்னர் தோன்றியவை. அந்த அற்புத நிகழ்வுகளை நேரில் கண்டவர் தற்போது நம்மில் எவர் உளர்?

நாம் தெரிந்துகொள்வதெல்லாம் சரித்திரத்திலும் புராணத்திலும் பதிவு செய்யப்பட்ட ஒரு சில தகவல்களே! அவையும் ஞானிகள் தங்களது

ஞான த்ரிஷ்டியால் சூட்சுமத்தில் உணர்ந்து தங்களை நாடி வருபவர்களுக்கு சொல்லிச்சென்றவை.

இந்தகைய பெரும்பாலான தகவல்களும் ஜோதிர்லிங்கங்களின் பின்னணியாக கருதப்படும் ஸ்தலபுராணகளே தவிர உத்பவம் எப்போது, எப்படி, யார் வழியாக நிகழ்ந்தது என்பது பற்றிய விளக்கங்கள் கொண்டப்பதிவு நம்மிடையே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நிச்சயமாக இந்த ஒவ்வொரு நிகழ்வும் சாதாரணமாக நடந்திருக்க வாய்ப்பில்லை. இதற்கான தெய்வ சங்கல்பம், முன்னேற்பாடு நடவடிக்கைகள், வழிகாட்ட ஒரு பிரம்மகுரு போன்ற அமைப்பு ஒவ்வொரு ஜோதிர்லிங்க உத்பவத்துக்கும் பின்னணியாக உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இத்தகைய விஷயங்கள் வெளிச்சத்துக்கு வராமலேயே போய்விட்டன, அல்லது மனிதகுலம் தெரிந்துகொள்ள முடியாமலே போய்விட்டது என்பது என் கருத்து.

இந்த ஒரு பெரிய குறையை நீக்கவும், லிங்கோத்பவ மஹத்துவத்தை இந்தத் தலைமுறையினர் நேரில் கண்டு அதிசயக்கவும், இதன்வாயிலாக இந்த வையகமே பலன் பெறவும், எங்கள் குரு இந்த வையகத்தின் 13வது ஜோதிர்லிங்க உத்பவத்தை எல்லோர் முன்னிலையிலும் (என்னையும் சேர்த்து) நடத்திக்காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வு இங்கே நடப்பதற்கான அவசியம், தெய்வீக பின்னணி, முன்னேற்பாடுகள் பற்றிய பல விளக்கங்களையும் முதலிலேயே அளித்துள்ளார். எனக்குத் தெரிந்து பல யுகங்களிலும், காலகட்டங்களிலும் நடந்த வெவ்வேறு சரித்திர புராண நிகழ்வுகளை பற்றிய ரகசியங்களை ஞானத்தால் உணர்ந்து நமக்குத் தெளிவுபடுத்தக்கூடிய, மீண்டும் அவைகளை நிகழ்த்திக்

காட்டக்கூடிய அளவுக்கு இன்று நம்மிடம் உள்ள ஒரே ஆன்மிகக் காலச்சங்கிலி இவராகத்தான் இருக்கமுடியும்!

இங்கே பதிவுசெய்யப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தையும் முடிந்தவரை முழுமையாகவும் கோர்வையாகவும் சொல்ல முயற்சி மேற்கொண்டுள்ளேன்.

இந்தத் தொகுப்பில் விவரிக்கப் பட்டுள்ள அனைத்துத் தகவல்களும், எங்கள் குருவின் ஆசியுடன், எங்கள் எண்ணத்துக்குள் பிரதிபலித்த, விஷயங்கள். நம்பிக்கையின் அடிப்படையில், அனுபவப்பூர்வமாக உணர்ந்தவை. நேரிலும் கண்டவை. எங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்வது படிப்பவர்களின் நம்பிக்கையைப் பொறுத்தது, ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் மனநிலையையும் பொறுத்தது.

என்னைப் பொறுத்தவரை இந்தத் தொகுப்பு ஒரு சிறிய ஆரம்பமே. தோண்டத் தோண்ட மேலும் புதையல் கிடைக்கும். வாய்ப்பு கிடைத்தால், கிடைக்கும் அப்புதிய புதையலை இன்னொரு பதிவு வழியாக உங்களுக்கு அளிக்க முயற்சிக்கிறேன்.

இந்தப் பதிவு வெளிவர பெருமுயற்சி எடுத்துக்கொண்ட அன்பர்கள் அனைவரும் இந்த உத்பவத்தை நேரடியாகக் கண்டு பரவசம் கொண்டவர்கள். அவர்களது அனுபவம் மற்றும் அவர்கள் உணர்ந்த உண்மைகளை உணர்ச்சி பூர்வமாக இங்கே என்னுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்கள். அத்துணைத் தகவல்களையும் மெருகு மாறாமல் உள்ளபடியே பதிவு செய்துள்ளேன்.

இங்கே பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ள தகவல்களை கவனமாக படியுங்கள். பெரும்பாலான விஷயங்கள் இதுவரை மனிதகுலமே கேட்டிராத, கேள்விப்படாத அதிசயத் தகவல்கள் என நான் கருதுகிறேன். இவை அனைத்தும் எங்குமே இதுவரை பதிவுசெய்யப்படாத உண்மைத் தகவல்கள். நாம் அனைவருமே தெரிந்துகொள்ளவேண்டிய வாழ்வியல் ரகசியங்கள்.

முதல்முறையாக, இந்தப் பொக்கிஷத்தை வெளிஉலகத்துக்கு கொணர்ந்து அறிமுகம் செய்வதில் பேரானந்தம் கொள்கிறேன். வாசகர்கள் தயை கூர்ந்து இந்த பொக்கிஷத்தை படித்து, உணர்ந்து, தங்கள் ஆனந்தத்தை தங்களுக்கு வேண்டியவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

நினைத்தாலே நிம்மதியையும், பார்த்தாலே பரவசத்தையும், ஜென்ம ஸாபல்யத்தையும் அளிக்கும் ஜோதிர்லிங்க திவ்ய தரிசனம் பெற வாருங்கள் சென்னப்பமலைக்கு!

## ஜோதிர்லிங்கத் தத்துவங்கள்: ஒரு அறிமுகம்!

தெய்வ ஆலயங்கள் தொன்று தொட்டு மனிதர்களின் நம்பிக்கை சின்னமாக விளங்கிவருகின்றன. மன அமைதியை நாடும் மக்களுக்கு சாந்தி அளிக்கும் ஒரு வாழ்வாதார பொக்கிஷங்கள் அவை. கலை, பண்பாடு, இயற்கை சாஸ்திர நெறிமுறைகளைக் கற்றுத்தரும் சமுதாய கல்விக்கூடங்கள்.

மக்களை நல்வழிப்படுத்தும் அமைதி பூங்காவாகவும் அவை விளங்கி வந்தன. ஒரு காலத்தில் மஹேசனே மன்னர்கள் கனவில் வந்து, அவர்கள் சிந்தனையை தூண்டி, ஆலயங்களை நிர்மாணம் செய்யப் பணித்ததாக புராணங்கள் கூறுகின்றன. இதை ஏற்று, மக்கள் நன்மைக்காகவும், இயற்கை வளம் மேம்படவும், தர்ம நெறிமுறைகளைக் கட்டிக் காக்கவும், முன்னர் ஆண்ட மன்னர்கள், 'எண்ணம் பொழுதும் ஈசனுக்கு' என்று உணர்ந்து பல பெரும் கோவில்களை, 'வழிப்போக்கர்களாக' வரும் சித்தார்களின் துணைகொண்டு நிர்மாணம் செய்து சென்றுள்ளனர். மக்களை காப்பது மட்டுமின்றி தேசத்தை காக்கும் சமுதாய அரணாகவும் கோவில்கள் விளங்கின.

பிற்காலத்தில் செயற்கையாக நிர்மாணம் செய்யப்பட்ட லிங்கங்கள் கொண்ட கோவில்கள் பல கட்டப்பட்டாலும், அவை வேதங்களில் விவரிக்கப்பட்டுள்ள ஆகம விதிப்படி நிர்மாணம் செய்யபட்டவை. மந்திரங்களாலும், பூஜை புனஷ்டாரங்களாலும் தொடர்ந்து தூய்மை படுத்தப்படுபவை.

பண்டைய ஆலயங்களின் அமைப்பே, வழிபடும் பக்தர்களின் எண்ணச்சிதைவுகளை சூட்சுமத்தில் சீர்செய்து அவர்களை நல்வழிப்படுத்தவல்ல அற்புத சக்தி கொண்டவை. இந்த சக்தி தொடர்ந்து நிலைபெறவும் ஆலயங்கள் புத்துணர்வு பெறவும்

பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை புனராருத்ர வேதசடங்குகள் செயல்படுத்தப்படும்.

இதை தவிர ஆலயங்களுக்கு, நேரடியாகவோ, மறைந்தோ அவ்வப்போது விஜயம் செய்யும் சித்தர்களும், ஞானிகளும், ஆலய வளாகம் தொடர்ந்து ஆற்றலும் புத்துயிரும் பெற, பெரும்வரத்தை அருளிச்செல்வார்கள்.

வேத ஆகம நெறிமுறைகள் குறைந்து, மறைந்து வரும் இக்காலத்தில் சில செல்வந்தர்கள் கோவில்களைக் கட்டி லிங்க பிரதிஷ்டை செய்யும் தெய்வீகப் பணியில் ஈடுபட்டடுள்ளதை நாம் சமீப காலங்களில் காண முடிகிறது.

அத்தகைய இந்த நவீனக்கோவில்கள் படைப்பில் சிறந்து விளங்கினாலும், பண்டைய நெறிமுறைகளை காக்கும் வகையில் மக்களை நல்வழிபடுத்தி அவர்களது ஆன்மிக சிந்தனையை தூண்டும் வல்லமை படைத்தவையா என்பது தெரியவில்லை. ஆனாலும் பண்டைய நம்பிக்கை கலாசாரத்தை கட்டிக்காத்து வருகின்றன.

ஆனால் ஜோதிர்லிங்கங்கள் மாறுபட்டவை. தோற்றத்தில் லிங்கத்தைப்போல உருவ ஒற்றுமை கொண்டிருந்தாலும், அவை வெவ்வேறு வடிவங்களில் உத்பவம் கொள்பவை. இந்தியாவில் தோன்றியுள்ள ஒவ்வொரு ஜோதிர்லிங்கங்களும் வெவ்வேறு வடிவங்களில் வித்யாசமாக உத்பவித்துள்ளன. அந்த ஸ்தலங்களுக்குச் சென்று தரிசித்தால் புரியும். உதாரணமாக, கேதார்நாத் ஜோதிர்லிங்கம் ஒரு குட்டி இமய மலையைப்ப போலவேத் தெரிகிறது. நமக்கு பழக்கப்பட்ட கூம்பு வடிவமோ, ஆவுடையோ இல்லை. அதே போல நாசிக்கில் உத்பவித்துள்ள திரியம்பகேஷ்வர் ஜோதிர்லிங்கம் தன் கூம்பு வடிவத்தை பூமிக்குள் உட்புறமாக கொண்டுள்ளது!

ஜோதிர்லிங்கங்கள் தொடர் உயிரோட்டம் கொண்டவை. ஜீவகாந்த சக்தி கொண்டவை. பஞ்சபூதங்களை தன்னுள் அடக்கி, வழிபடும் பக்தர்களுக்கு சூட்சுமத்தில் ஆதிரூபமான ஜோதியாக காட்சி தந்து, எண்ணங்களை செம்மை படுத்தி, ஆசியாக பிரதிபலிக்கும் அற்புத சக்தி கொண்டவை. பஞ்சபூத பரிமாண சக்தியுடன் அண்டசராசரங்களிலும் வியாப்பித்து இருப்பவை.

நினைத்தாலே நிம்மதி தருபவை, பார்த்தாலே பரவசம் தருபவை.

பூமிக்குள் மறைந்திருக்கும் நீரோட்டம் கொண்ட அதிசய கல்லில் உயிரோட்டம் கொண்டு மேலெழுந்து, ஜோதி வடிவில் காட்சி தர பரமனே ஜோதிர்லிங்கங்களில் நிரந்தரமாக குடியிருப்பதாக நம்பிக்கைப் பிரகடனப் படுத்துபவை. இந்த உலகம் தோன்றிய நாள் முதற்கொண்டு இந்தியாவில் ஏற்கனவே பன்னிரெண்டுத் திருத்தலங்களில் ஜோதிர்லிங்கங்கள் உத்பவித்துள்ளதாக சரித்திரங்களில் பதிவு பெற்றுள்ளன. புராணசரித்திரங்கள் இந்த நிகழ்ச்சிகளை ஓரளவுக்குப் பதிவு செய்திருந்தாலும், பலத் தகவல்கள் இன்றளவும் சூட்சுமமாக மறைந்துள்ளன.

சென்னப்பமலையில் நிகழ்ந்த 13வது ஜோதிர்லிங்க உத்பவம் பற்றிய சரித்திரம் இப்போதுதான் முதல்முறையாக இந்த பதிவு வழியாக வெளிவருகிறது.

பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் வாசுகி சர்ப்பத்தை கயிறாகவும், மேரு மலையை மத்தாகவும் கொண்டு கடைந்தபோது வெளிவந்த அமிர்தத்தை அசுரர்களே பறித்துசென்றார்கள். அப்படி செல்லும்போது பூமியில் சிதறிய அமிர்தத் துகள்களே பின்னர் ஜோதிர்லிங்கங்களாக வெவ்வேறு கால கட்டங்களில் உத்பவித்தன என்று புராணங்கள் கூறுகின்றன.

ஸ்தலபுராணங்கள் இவைகளின் பெருமைகளை ஓரளவு பறைசாட்டினாலும் உத்பவ ரகசியங்கள் பல மறைந்துள்ளன. ஆனாலும் தலைமுறை தலைமுறையாக சொல்லபட்ட தகவல்களை

சுமந்து ஜோதிர்லிங்கங்கள் இப்போதும் மனித குலத்துக்கு வழிகாட்டியாக, ஆன்மிகக் கோலோச்சி வருகின்றன. இத்தகைய அதிசய ஜோதிர்லிங்கம்தான் இந்த பூவுலகின் 13வது ஜோதிர்லிங்கமாக சென்னப்பமலையில் 2002 ஆம் ஆண்டு உருவாகிஉள்ளது.

இயற்கையாக, பஞ்சபூதத் தத்துவங்களின் அடிப்படையில், தானாக, தன்னிச்சையாக, ஏற்கனவே நிர்மாணம் செய்ய பட்ட இடத்தில், உலகமே வழிபடும் மஹாசிவராத்திரி அன்று ஏற்கனவே கணிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட புண்ணிய திதியில், சர்வ வேதநியமங்களோடு, யாகங்களும், ஹோமங்களும், மந்திரங்களும் முழங்க, முப்பத்துமுக்கோடி தேவர்கள் வணங்க, பரம்பொருளே சித்தனாகி, சித்தனே சிவமாகி, அருவமே உருமாகி, குருவாகி, பூமியையும் விண்ணையும் ஜோதியாக இணைத்து, நீரோட்டம் கொண்ட கல்லுக்கு உயிரோட்டம் தந்து, அந்த அதிசய கல் பூமியைப் பிளந்துகொண்டு ஜோதிர்லிங்கமாக வெளிவந்தது!

இந்த தெய்வீக நிகழ்வை ‘லிங்கோத்பவம்’ என்கிறோம். ஜோதியாக வெளிப்பட்ட இந்த அசாதாரண இயற்கை லிங்கத்தை ‘ஜோதிர்லிங்கம்’ என்கிறோம். உத்பவம் என்ற சொல்லே அசாதாரணமானது. இயற்கையாகவே, இயல்புக்கு எதிராகச் செயல்படும் அபார சக்தி இது! உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் ஒரு சிசு உருவாக எவ்வளவு உத்வேகம் தேவைபடுகிறது? எவ்வளவு அதிசயங்கள் புதைந்துள்ளது?

ஆண் விந்து உயிர்பெற்று பெண் கருவறையில் உத்பவித்து,வளர்ந்து, இதுநாள் வரையில் தன் ஜீவகாந்த பிணைப்பில் இருந்த கருவை, காலம் கனிந்ததும் எப்படி ஓர் தாய், தன் உடல் காந்த சக்திக்கு எதிராக வெளியேற்றி, அந்த சிசுவை பிரசவிக்கிறாளோ அதுபோல இந்த தேவாம்ஸம் கொண்ட கல் உயிர் பெற்று, ஜீவகாந்த சக்தி பெற்று,

பிரபஞ்ச சக்தியால் ஈர்க்கப்பட்டு பூமிக்கருவையை விட்டு பிளந்து பஞ்சபூதங்களை உள்ளடக்கிய ஜீவஜோதியாக உத்பவிக்கிறது.

நம் உடலுக்குள் நடக்கும் இது போன்ற பல அதிசயங்கள்தான் நம்மை சுற்றிலும் நடக்கின்றன. நம்மைச் சுற்றி நடக்கும் இயற்கை தத்துவங்கள்தான் நம் உடலுக்குள்ளும் நடக்கின்றன. அந்த வகையில் ஜோதிர்லிங்கங்களும் உத்பவங்களும் நமக்கு கிடைத்துள்ள மாபெரும் வாழ்க்கைத் தத்துவங்களை போதிக்கும் இயற்கை ரகசியங்கள்!

ஆனால் கற்களுக்கு உயிர் இருக்கிறதா? என்று நீங்கள் கேட்பது புரிகிறது. உயிர் இல்லாவிட்டால் அவை எப்படி உயிருள்ள நீரோட்டத்தை தனக்குள்ளே பிணைத்து வைத்துக்கொள்ள முடியும்? ஒரு யுகத்தில் ஸ்ரீ ராமபிரான் தன் குரு விஸ்வாமித்ர மாமுனியுடன் மிதிலையை நோக்கி செல்லும்போது, கவுதம முனி ஆசிரமம் அருகில் ஸ்ரீராமனின் கால்பட்டு, கவுதமமுனியின் சாபத்தால் கல்லாகி உறைந்திருந்த அவரது மனைவி அகலிகை உயிர்பெறவில்லையா? இந்த நிகழ்வை புராணங்கள் பதிவு செய்திருக்கவில்லையா?

நவீன விஞ்ஞானமும் இந்த அசாதாரண நிகழ்வுகளுக்கு விளக்கம் அளிக்கத்தான் செய்துள்ளது. பல நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு குறிப்பிட்ட வேளையில், பூமி தன் புவிஈர்ப்பு விசையை இழந்து கற்களை மிதக்கசெய்யும் தன்மையைப் பெறுகிறது. அத்தகையத் தருணங்களில்தான் பூமிக்குள் மறைந்திருந்த அமிர்தத் துகள்கள் ஜோதிர்லிங்கங்களாக உத்பவிக்கின்றன. புவிஈர்ப்பு விசை இழக்கும் தத்துவ அடிப்படையில்தான் அக்காலத்தில் பிரம்மாண்ட கற்கோவில் கோபுரங்களும் மண்டபங்களும் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்ற விளக்கமும் நாம் ஏற்றுக்கொள்ளும் வகையில்தானே உள்ளது.

இந்தத் தத்துவங்களை விளக்கும் வகையில் தேவாம்ஸம் வாய்ந்த, நீரோட்டம் கொண்ட கல் உயிரோட்டம் பெற்று, ஜீவகாந்த பிரபஞ்ச சக்தியால் ஈர்க்கப்பட்டு, ஜோதிர்லிங்கமாக உத்பவம் ஆகிறது. இது

ஒரு விஞ்ஞானமும் மெய்ஞானமும் கலந்த ஒரு இயற்கையான நிகழ்வு என்று நமக்கு புரிகிறது அல்லவா?

ஏற்கனவே இந்தியாவில் காணப்படும் மற்ற ஜோதிர்லிங்கங்களின் பின்னணியும் கிட்டத்தட்ட இவ்வாறுதான் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவை தோன்றிய இடங்களும், காலங்களும், யுகங்களும், விதங்களும் வேறு.

உண்மையில் ஒவ்வொரு ஜோதிர்லிங்க உத்பவத்துக்கும் பின் பல தெய்வீக சரித்திரங்கள் புதைந்துள்ளன. இதன் பின்னனியில் ஒரு ஜகத்குரு முன்னின்று நடத்திக் காட்டியுள்ளார் என்று நான் நம்புகிறேன்.

அந்த வகையில் பதினாறு ஆண்டுகளுக்கு முன் சென்னப்பமலையில் நடந்தேறிய இந்த ஜோதிர்லிங்க உத்பவம், இந்த அற்புத வைபவம், பல புராண, சரித்திர நிகழ்வுகளின் ஒரு தொடர்ச்சியாகவே நிகழ்ந்துள்ளது என நான் கருதுகிறேன். இக்காலச் சந்ததியினர் புரிந்துகொள்ளவும், அவர்கள் தாங்களே நேரடியாக கண்டு பரவசப்படும் வகையில் மீண்டும் இந்த உலக அரங்கில் நடத்தப்பட்ட ஒரு தெய்வீக நிகழ்ச்சி.

அகில உலகமே வியக்கும் வகையில் இந்தத் திருத்தலத்தில் ஐக்கியம் கொண்டுள்ள, பரமனின் உதிரத்தில் பூத்த மஹாபுருஷர், பலயுகங்கள் கண்ட கோடிதாத்தாஸ்வாமிகள் இங்கே பிரம்மகுருவாக முன்னின்று இந்த உத்பவ நிகழ்ச்சியை நடத்திக்காட்டினார்.

ஏற்கனவே உத்பவமான பன்னிரெண்டு ஜோதிர்லிங்க உத்பவமும் இவரது முன்னிலையில்தான் நடந்தேறியிருக்கவேண்டும் என்றும் நான் நம்புகிறேன். மெய்சிலிர்க்கவைக்கும் இந்த அதிசய நிகழ்வை, சென்னப்பமலையில் நேரடையாக கண்டு பேரானந்தம் பெற்ற ஆயிரக்கணக்கான பக்தர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் இந்த நிகழ்வை பெருமையுடன் இங்கே பதிவுசெய்கிறேன்.

## மஹாசிவராத்திரி மஹத்துவம்

மஹாசிவராத்திரி ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் ஒரு அற்புத நாள். அன்றுதான் மஹேசனே மனித உருவில் பூலோகம் இறங்கி வந்து, தன் பக்தர்களோடு கலந்து, உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் ஜென்ம ஸாபல்யம் அளிக்கும் நாள்.

மக்களை நல்வழிபடுத்த, ஜீவ காருண்யத்தை பறைசாற்ற, வாழ்க்கை ரகசியத்தை அறிய, மனதால் நல்ல எண்ணங்கள் ஊற்றெடுக்க, பரம்பொருளால் ஏற்படுத்தபட்ட தெய்வீக அமைப்பு இது.

'அறிதலையும், தெரிதலையும், புரிதலையும்' அன்று பரமேஸ்வரன் அனைவருக்கும் வாரி வழங்கும் தருணம். 'வேகம், விவேகம்' என்ற இருதுருவமும் ஒன்றாகி எண்ணங்கள் பவித்திரமாகும் சமயம். அப்போது இந்த ஆதிகுருவின் அருளே பொருளாகும்!

தன்னை அன்புருக வழிபடும் அனைத்து ஜீவராசிகளுக்கும் ஜென்ம சாப விமோசனம் கிடைக்கப்பெற பரமேஸ்வரன் ஆசீர்வதிக்கும் புண்ணிய நாள். 'தன்னைப் படைத்தவனை பவித்திரமாக நினைப்பவன் இந்த ஒரு நாளில் பரமாத்வாவை அடையலாம்' என்பது சாஸ்திரம். சகல தோஷ நிவர்த்தியும் ஜென்ம ஸாபல்யமும் அன்று அனைவரும் பெறலாம்.

மஹாசிவராத்திரி அன்றுதான் எல்லா ஜோதிர்லிங்கங்களும் உத்பவமாகி உள்ளன என்று புராணங்கள் கூறுகின்றன. மனமுருகி பவித்திரமாக ஜோதிர்லிங்கங்களை வழிபடும் அனைத்து ஜீவராசிகளும் இயற்கையாகவே பரமனை அடைந்து முக்தி பெற பரமனே நமக்கு உருவாக்கித் தந்துள்ள ஒரு அற்புதப் படைப்பு இது.

'எதைக்கண்டு எதை நாம் கேட்கிறோமோ' அதைத்தான் அன்று அவன் தருகிறான். இந்த வரப்பிரசாதம் அன்று ஒரு நாள் நமக்கு

குறையின்றிக் கிடைக்கிறது. இது காலம் காலமாக நம் கலாசாரத்தில் வேரூன்றி நிற்கும் நம்பிக்கை.

சிக்கல்களிலும், சங்கடங்களிலும் உழன்றுத் துன்பப்படும் பெரும்பாலோர் தனக்கும் தன்னை சார்ந்தவர்களுக்கும் நல்லது நடக்க பரம்பொருளிடம் வரம் கேட்பார்கள். யாரோ ஒரு சிலரே தன்னைப் படைத்தவனையும், தன்னையும் அறிந்துகொள்ள வரம் கேட்பார்கள்!

மஹாசிவராத்திரி அன்று அத்தகைய அசாதாரண ஞானமார்க்க மானிடர்களுக்கு விடை கிடைக்கும் அற்புத நாள். அப்படி விடை தெரிந்துக் கொள்பவர்கள் மஹான்களாவர்கள் என்பது மஹாசிவராத்திரிக்குள்ள சிறப்பு.

அன்று தேடிப்போனால் பரமனே தென்றலாய், காற்றாகி நமக்குள்ளேயே சுவாசிப்பான். நீராகி, நிலமாகி, வானாகி, வளியாகி, ஒளியாகி, அண்டசராசரமாகி, ஜீவஜோதியாக நமக்குள்ளே ஐக்கியமாகி நம் ஆன்மாவோடு இரண்டறக் கலப்பான்.

மெய்ஞானம் என்கிற சித்தாந்தத்தை நம் ஆன்மாவில் பரிபூரணமாகப் பதிப்பான். இது இல்லாமல் இந்த ஜீவாத்மாவுக்கு ஜென்ம ஸாபல்யம் கிடைக்காது. படைத்தவன் மட்டுமே செய்யும் விந்தை இது.

இந்த நம்பிக்கையை, தெய்வீக ரகசியத்தை இந்த உலகிற்கு எடுத்தியம்பவே அமையப் பெற்றவை ஜோதிர்லிங்கமும் மஹாசிவாத்திரி வைபோகமும்.

## சென்னப்பமலை ஸ்தல வரலாறு

முன்னொரு காலத்தில் பரமேஸ்வரனின் உடலில் அங்கம் வகிக்கும் அகிலாண்டேஸ்வரி(அம்பிகை), 'தென் கைலாயம்' என்று போற்றப்படும் பனங்காட்டுப் பிரதேசமாக விளங்கிய சென்னப்பமலைத் திருத்தலத்தில் தவமிருந்தாள்.

இந்தப் பூவுலகில் உள்ள 84 லட்சம் ஜீவராசிகளுக்கு மட்டுமல்லாமல், சூரியன், சந்திரன், தேவேந்திரன், குபேரன் ஆகிய தேவர்களுக்கும் சாப விமோசனம் அளிக்கும் வகையில் சென்னப்பமலைத் திருத்தலத்தில் அருள் பாலிக்க பரமேஸ்வரனிடம் வேண்டினாள்.

அம்பிகையின் வேண்டுகோளை ஏற்று, இதே ஸ்தலத்தில் பின்னொரு காலத்தில் பிரம்மகுரு ஒருவரால் மஹாசிவராத்திரி அன்று 'தானே ஜோதிர்லிங்கமாக இங்கே உத்பவமாகி, தன்னை வழிபடும் அனைத்து ஜீவராசிகளும் ஜென்ம சாப விமோசனம் பெறலாம்' என்று வரம் அருளினார் என்று ஸ்தலபுராணம் கூறுகிறது.

அதன்படி ஈசன் விண்ணிலும் மண்ணிலும் ஜோதியாகத் தோன்றி, தெய்வீகக் கல்லில் இறங்கி, ஜோதிர்லிங்கமாக தோற்றமெடுத்து, அனைத்து உயிரினங்களுக்கும் சாப விமோசனம் அளிக்க இத்திருத்தலம் உருவானது. சகல உயிரினங்களோடு தேவர்களையும், தேவகணங்களையும் இங்கே பாகுபாடின்றி இணைத்து சாப விமோசனம் அளிப்பது இந்த ஸ்தலத்துக்கு மேலும் சிறப்பு.

எந்தக் குறையுமின்றி, அமைதியும் ஆனந்தமும் மட்டுமே நிலைத்துள்ள தேவலோகத்துக்கே அதிபதி தேவேந்திரன். அனைத்து லோகங்களிலும் உள்ள அனைத்து ஆஸ்திகளுக்கும் அதிபதி குபேரன். மனச் சாந்தி அளித்து உயிரினங்களின் எண்ணங்களை நிலை படுத்துபவன் சந்திரன். உலகத்துக்கே உயிரையும், ஒளியையும்,

வண்ணங்களையும், உருவங்களையும், உத்வேகத்தையும் கொடுப்பவன் சூரியன்.

அப்படி இருக்க, இவர்கள் இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் தங்கள் சாபம் நீங்க தினமும் வழிபடுவது என்பது எவ்வளவு பெரிய தெய்வ சங்கல்பம்! அவர்களோடு சேர்ந்து இங்கே வழிபடும் பக்தர்களும் அல்லவா பயனடைகிறார்கள்?

நல்லதும் கெட்டதும் ஒருங்கே இருப்பதுதானே இயற்கையின் நியதி? சிலருக்கு நல்லது என்பது வேறு சிலருக்கு தீங்காக அமைவதும் இயற்கைதானே? நிறை இல்லா வாழ்க்கையும் சிலருக்கு குறைதானே?ஆஸ்தி இருந்தாலும் மனக்குறை தீருவதில்லையே?

சந்திரனின் தொடர்நிலைமாற்றம், உயிரினங்களுக்கு மன மாற்றத்தை அல்லவா அளிக்கிறது? ஒளிதந்து உயிர் தரும் சூரியன் சுட்டெரிக்கவும் அல்லவோ செய்கிறான்? மானிடர்களாகட்டும் தேவர்களாகட்டும் நல்லது செய்தாலும் அதன் பின்னே சில தீங்குகளும் நேருகின்றனவே!

அனைத்து உயிரினங்களுக்குமே பல நிலைகளில் நன்மை செய்யும் தேவர்களுக்கே இந்த நிலை என்றால், நாமெல்லாம் எம்மாத்திரம்? சாபங்களின் தத்துவம் அனைவருக்கும் பொதுவானவை என்பது நியதி. எப்படி இந்த நிலையிலிருந்து விடுதலை பெறுவது? எப்படி விமோசனம் பெறுவது? சாபங்கள் வராமல் தடுப்பது எப்படி?

இந்த தத்துவபோதனைகளை இந்த உலகத்துக்கு வெளிச்சம் போட்டு காட்டவேதான் இந்த தெய்வீக நிகழ்வு, ஜோதிர்லிங்க உத்பவம் வழியாக சென்னப்பமலையில் நடந்துள்ளது.

5,426 வயதுள்ள இந்த கலியுகத்தில் நடந்துள்ள மிகப்பெரிய அதிசயம் இது. இந்த ஜோதிர்லிங்கம் அனைத்து உயிரினங்களுக்குமே ஒரு

வரப்பிரசாதம். இங்கே தோன்றியுள்ள இந்த அற்புத ஜோதிர்லிங்கம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று இப்போது புரிகிறதா?

இந்த பூவுலகிலுள்ள அனைத்து உயிரினங்களையும் தாண்டி, மனித உயிர்களுக்கு உதவி செய்யும் தேவர்களுக்கே இங்கே சாப விமோசனம் தினமும் நடை பெறுகிறது என்றால் இந்த ஸ்தலம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கவேண்டும்!

அதுமட்டுமல்லாமல், சாபம் நீங்கப் பெற்ற இந்த நான்கு தேவர்களும், தாங்கள் பெற்ற இன்பம் இந்த வையகமே பெற்று மகிழ, இந்தத் திருவாலயத்தை நாடி வரும் பக்தர்களையும் ஆசீர்வதிக்கிறார்கள். இந்திரன் ஆனந்தமும், சந்திரன் மன அமைதியையும், குபேரன் தனம் பெறவும், சூரியன் சிந்தனைகள் செயல்வடிவம் பெறவும் ஆசீர்வதிக்கின்றனர்.

இங்குக் ஐக்கியம் கொண்டுள்ள ‘ஜோதியே வடிவான’ பரம்பொருள், பிறவிப்பயன் பெற ஜெ ன்ம சாப விமோசனம் அளிக்கிறான். ஒரு வழிபாடு, கோடி ஆசீர்வாதம்! இதன் பிரம்மாண்டம் இப்போது புரிகிறதா நண்பர்களே?

## சென்னப்பமலையில் ஜோதிர்லிங்கோத்பவ முன்னேற்பாடுகள்

இந்த ஜோதிர்லிங்கோத்பவத்தின் தெய்வீக பின்னணியையும் அதற்கான முன்னேற்பாடுகள் நடந்தவிதம் பற்றியும் நாம் தெரிந்துகொள்வது மிக அவசியம்.

ஸ்தலபுராணத்தில் குறிப்பிட்டபடி, ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்த இந்த அதிசய நிகழ்வை நடத்திக்காட்ட தெய்வ அம்சங்கள் பொருந்திய ஒரு சரியான மானிடன் தேவை என்று அகிலாண்டேஸ்வரி எண்ணினாள்.

தான் தீர்மானம் செய்திருந்த இதே பனங்காடு பிரதேசமான, தற்போது வேலூர் மாவட்டம் ஆம்பூர் அருகே பாட்டூர் கிராமத்தில் எல்லம்மாள்-குப்புசாமி தம்பதியருக்குப் பிறந்து வசித்துவந்த சுமார் 30 வயது மதிக்கத்தக்க ராமநாதன் என்கிற, ஒரு சாமானியாராகப் புலப்படும் ஒரு இளைஞனை தேர்வு செய்தாள்.

நடக்கவிருக்கும் தெய்வீக திருவிளையாடலைப் பற்றி இவரும் தெரிந்துக் கொண்டிருக்க வாய்ப்பில்லை. இவரோ இப்பிறப்பில் மிக சாதாராண குடும்பத்தில் பிறந்தவர். சாமானியர். தன் பிறப்பு ரகசியம் அறியாதவர். குரு பாரம்பரியம் அறியாதவர். ஆனால் தெய்வ நம்பிக்கை கொண்டவர். அமைதியும் சாந்த வடிவானவர். நிச்சயமாக முற்பிறப்புகளில் ஆழ்ந்த, தெய்வீக தீட்சைஷ கொண்டவராக இருந்திருக்கவேண்டும். இதன் தொடர்ச்சிதான் இங்கே தொடர்ந்து வருகிறது.

அடுத்து, தேர்வு செய்யப்பட்ட இந்த இளைஞருக்கு பிரம்ம தீட்சைஷ அளிக்க ஒரு சரியான குரு வேண்டுமே? இதற்கான முன்னேற்பாடுகள் ஏற்கனவே கணித்திருந்தபடி 1994 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 27 ஆம் நாள் தொடங்கியது.

அன்று இரவு, ராமநாதன் அவர்களுக்கு அம்பிகை சொப்பனத்தில் தீர்க்கதரிசனம் அளித்து அருள் பாலித்தார். அந்த ஆண்டே மஹாசிவராத்திரி அன்று ராமநாதன் குரு நிலை அடைய தெய்வக் காரியங்கள் துவங்க வேண்டும் என்றும் ஆணையிட்டாள். இந்த நிகழ்வு ஏற்கனவே நிர்மாணம் செய்யப்பட்ட சாஸ்திரம் என்றும் விளக்கினாள்.

அன்று முதல் ஒவ்வொரு இரவு நடுஜாமத்திலும் ராமநாதன் இதற்கான பயிற்சிகளையும், உபதேசங்களையும் பெற்றார். அடுத்த கட்ட நடவடிக்கையாக ராமநாதனுக்கு ஏற்ற குருவை அறிமுகம் செய்ய காலம் கணிக்கபட்டது.

1994 வரை கோயம்பத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி அருகே புரவிப்பாளயம் ஜமீன் அரண்மனையில் ஐக்கியம் கொண்டிருந்த, பலயுகங்கள் கண்ட, முக்காலமும் உணர்ந்த, ‘கோடிதாத்தா’ (கோடிசாமி) என்கிற ஞானகுருதான் இந்த பணிக்கு ஏற்ற குரு என்று முடிவு செய்து, அவரை நாடி, தான் தேர்வு செய்துள்ள சீடனுக்கு குருவாகி ஆட்கொண்டு தீட்சைஷ அளிக்க முன்மொழிந்துப் பணித்தாள்.

அதே வருடம் மாசி மாதம் 28 ஆம் நாள் மஹாசிவராதிரி அன்று இரவு 9.17மணிக்கு பதினெட்டு சித்தர்களும் சிவனாகி வாழ்த்த, கோடிதாத்தா என்கிற பிரம்மகுரு, தன் ஆன்ம வடிவில் ராமநாதன் அவர்கள் முன்னே தோன்றி, தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு, அவரை தன் சீடராக ஏற்றுக்கொண்டார்.

‘கூடுவிட்டு கூடு பாயும்’ (பரக்காயபிரவேசம்) தெய்வ சித்தாந்த அடிப்படையில், தன் சீடன் உடலுக்குள் ஐக்கியம் ஆகி, அருவம் உருவம் பெற்று, இந்த ஜெகத்குரு, இங்கே ‘தாத்தாஸ்வாமி’யாக, அந்த உடல் வழியாக முதன்முதலாக பேச ஆரம்பித்தார்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து உலக அனுபவமோ, ஆன்மிக அனுபவமோ இல்லாத இளம் சீடனுக்கு மிரட்சியும் பயமும் வாட்டிய நேரத்தில், தைரியத்தையும், ஆத்ம பலம் கலந்த உபதேசங்களையும், சூட்சும பிரம்மஞானத் தத்துவ தானங்களையும் தந்தார்.

முப்பத்து முக்கோடி தேவர்கள் வேதமந்திரங்கள் முழங்க, பதினெட்டு சித்தர்கள் ஐக்கியம் கொண்ட 'பரமேஸ்வரன் உடனுறை அகிலாண்டேஸ்வரி' ஆசியுடன், இந்த பிரம்மகுரு தீட்சைஷ அளிக்கத் தொடங்கினார்.

பஞ்சபூதத் தத்துவங்கள், பிரம்மசூத்திரங்கள், சூட்சும ரகசியங்கள், ஈரேழு லோகம், பதினான்கு காண்ட அடிப்படைகள், அண்டசராசர ரகசியங்கள் ஆகியவை குரு வழியாக இந்தப் புதிய சீடனுக்கு கிடைக்கப் பெற்றது. சிந்தையில் செவியோடு போதனைகள் தொடங்கப் பெற்றன.

அடுத்து வந்த நாட்களில் மேலும் அதிசயங்கள் தொடர்ந்தன. அன்றாட பொழுதில் ஆதவனை தொழுது தன்னை மறந்த நிலையில் தமையன் (ஈசன்) தனக்குள் வருவதை ஸ்ரீ ராமநாதன் உணர்ந்தார். அப்போது ஓங்கார ஒலியோடு சிந்தனையைத் தட்டி எழுப்பி குருதீட்சைஷ தொடர்ந்தது. 'இறைவனைத் தொழ அவனே தந்த நியதி இது' என்று சீடன் உணர்ந்தார்.

'அன்பே சிவம்', 'ஆற்றல் பெரிது, அமுதக்கனி சிறிது', 'சிந்தனை செயலாகும்', 'எண்ணம் பெரிதாகும்போது இறைவன் தனக்குள் வருவான்', 'உள்நோக்கி போகும்போதுதான் எண்ணத்துக்குள் பராபரங்கள் தென்படும்' போன்ற உண்மைகள் இந்த இளம் சீடருக்குப் புரியத் தொடங்கியது.

தினமும் இரவு பன்னிரெண்டேகால் மணியிலிருந்து மூன்றேகால் வரை தேவ ரகசியங்களையும், பிரம்ம ரகசியங்களையும் நித்தமும்

கற்றுக்கொண்டார். மூன்றேகால் மணியிலிருந்து நாலரை மணி வரை பரமன் சித்தர்களுக்கும், குருமார்களும் உபதேசம் செய்யும் நேரம். இது முடிந்ததும் பரம்பொருள் ஜீவஜோதியாக நின்று தேவர்களையும், சித்தர்களையும், அனைத்து ஜீவராசிகளையும் ஆசீர்வதிக்கும் நேரம். இதுவே வேத தத்துவங்கள் புதைந்த பிரம்ம முகூர்த்த நேரம்.

'கோடி முறை மந்திரங்களை ஓங்காரத்தோடு உச்சரிக்கும்போது தீராத வினைகள் எல்லாம் தீரும்' என்பது தெய்வ ரகசியம். 'கோடி என்பது பரமாத்மாவின் ஆசீர்வாதம். 'கோடி' என்பதுக்கு மேல் வார்த்தையே இல்லை. அதுதான் கோடிதாத்தா என்கிற தேவரகசியம்' என்ற தத்துவங்கள் சீடருக்கு புரியத் தொடங்கின.

மக்களை நல்லொழுக்கப் பாதையில் கொண்டு செல்லவும், பக்தியுடன் கலந்த இயற்கைத் தத்துவங்களை போதிக்கவும், அருவமும், உருவமும் கலந்த குரு-சிஷ்ய ரகசியங்களை உலகிற்கு கொண்டு வரவும், நாடிவரும் பக்தர்களுக்கு மஹாஆசீர்வாத பலன்களை அளிக்கவும், பாட்டூர் அருகில், பரமனே படுத்திருப்பது போல காட்சித் தரும் சென்னப்பமலை அடிவாரம் தேர்வு செய்யப்பட்டது.

சுற்று வட்டாரத்தில் உள்ள பக்தர்கள் சிலர் தாங்களாகவே முன்வந்து மலையடிவாரத்தில், குரு அடையாளம் காட்டிய, ஏற்கனவே நிர்மாணம் செய்யபட்ட, ஒரு புண்ணிய பூமியை விலைக்கு வாங்கித் தந்து இங்கே ஒரு அற்புத ஆன்மிக வளாகம் உருவாக வித்திட்டனர்.

1996 இல் 'ஶ்ரீ பொன்முடி கோடீஸ்வர ராமநாத மஹாமடம்' ஒன்றும் நிறுவப்பட்டது. இந்த உலகமே கண்டிராத மிகப் பெரிய, வித்யாசமான குரு-சிஷ்ய சகாப்தம், ஒரு புதிய குருகுல சமஸ்தானம் ஒன்று இந்த ஶ்ரீமடம் வாயிலாக இங்கே தொடங்கிவிட்டது.

அடுத்த சில ஆண்டுகளில், இந்த சீடர் தன் குரு வழியாக ஜோதிர்லிங்கம் பற்றித் தெரிந்து கொள்ளும் நேரமும் வந்தது. விஷு வருஷம் (2002 ஆம் ஆண்டு) மாசி மாதம் 28ஆம் நாள் மஹாசிவராத்திரி அன்று இங்கே 13 வது ஜோதிர்லிங்க உத்பவம் நிகழ இருப்பதையும் இது ஏற்கனவே நிர்மாணம் செய்த தெய்வ சங்கல்பம் என்ற தகவலையும் குரு தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட அனைத்துத் தகவல்களும், குருவும் சீடரும் அவ்வப்போது எங்களுடன் பகிர்ந்துகொண்டவையாகும்.

அந்தக் காலகட்டத்தில் ஜோதிர்லிங்கம் என்றால் என்ன என்றோ அது எந்த இடத்தில் எப்போது, எப்படி உத்பவம் ஆகும் என்றோ எங்கள் யாருக்கும் தெரியாது. ஆனால் தெரிந்து கொள்ள ஆவல் மேலோங்கி நின்றது.

எங்கள் குருவிடமிருந்தும், விஷயம் தெரிந்தவர்கள் என்று நாங்கள் நினைத்த ஒரு சில நபர்களிடமிருந்து, ஜோதிர்லிங்கம் பற்றிய அடிப்படை தகவல்களை அரைகுறையாக கேட்டுத் தெரிந்துகொண்டோம். முழுமையாக யாருக்கும் தெரியாத நிலையில் ஆச்சர்யத்துடன் காத்திருந்தோம்.

1996 க்கு பின், தாத்தாவைப் பற்றியும் அவர் நிகழ்த்திவரும் அதிசயங்களையும் கேள்விப்பட்ட சுற்றுவட்டார மக்கள் அவரை மொய்க்கத்தொடங்கினர். தன்னை நாடி வரும் அன்பர்களின் குறைகள் தீர்த்து, இன்னல் போக்கி, மருள் நீக்கி, பிரம்மகுருவின் ஆசீர்வாதம் ஒன்றே ஜென்ம ஸாபல்யம் என்ற இயற்கைத் தத்துவம் அவர்களை வெகுவாக ஈர்த்தது.

குறைகளும், சங்கடங்களும் தீர்க்கவல்ல திருத்தலம் என்ற நிலை அடைந்ததால் சென்னப்பமலை அபரிதமாக வளர்ச்சியைக் காணத்தொடங்கியது. தங்கள் முன்னே நடந்த விந்தைகளை கண்ட பக்தர்களும், சுற்றியுள்ள ஊர் மக்களும் தாங்கள் இதுவரை கண்டிராத குரு-சிஷ்யரை மனதார ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

இந்நிலையில், சென்னப்பமலையில் ஜோதிர்லிங்கம் உத்பவமாகப் போகும் இடம் தெரிந்த விதம் சுவாரிஸ்யமானது. இந்த வளாகத்தில் ஒரு பசுமடமும் உருவானது. அதில் ஒரு பசு சற்றே வித்யாசமானது. கெட்டியாகக் கட்டப்பட்டு இருந்தாலும், இரவு வேளையில் தன்னை விடுவித்து கொண்டு அருகில் உள்ள ஒரு மேட்டுப்பகுதியில் படுத்திருக்கும். காலையில் பார்த்தால் அதன் மடியிலிருந்து பால் சுரந்து வழிந்துகொண்டிருக்கும். இது தொடர்ந்து நடந்துவந்தது.

பசு பால் சுரந்த இடத்தில்தான் பரமன் தோன்றப் போவதாக குருவும் சிஷ்யனும் அடையாளம் கண்டார்கள். விஷு வருஷம் மாசி மாதம் மஹாசிவராத்திரி அன்று இந்த இடத்தில்தான் ஜோதிர்லிங்கம் உத்பவமாக உள்ளது என்றும் அதற்கான முன்னேற்பாடுகளை செய்யுமாறும் குரு தன் சீடனிடம் பணித்தார்.

இதற்கு முதல் கட்டமாக, தாத்தா தன் சீடனை பல க்ஷேத்ராடங்களுக்கும், மற்ற ஜோதிர்லிங்க ஸ்தலங்களுக்கும் அழைத்துச் சென்று நேரடிக் கல்வி அளிக்க முடிவு செய்தார். அவரோடு எங்களில் ஒரு சிலரையும் அழைத்து சென்றார்.

முதலில் பார்த்த ஜோதிர்லிங்கம் ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ள ஸ்ரீசைலம் மலையில் உள்ளது. அதன் பிறகு கேதார்நாத், சோம்நாத், உஜ்ஜைன், நாசிக், பீமஷங்கர், வாரணாசி, ராமேஸ்வரம் முதலான நகரங்களில் தோன்றியுள்ள ஜோதிர்லிங்கங்க ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்வித்தார்.

இந்த புனித யாத்திரைகள் வழியாக, ஒவ்வொரு ஜோதிர்லிங்கத்தின் பின்னணி, அவை உருவான விதம், இயற்கைத்தத்துவங்களை அவை நிலை நிறுத்திப் பாதுகாத்துவரும் விதம், லோகக்ஷேமத்துக்கு இந்த தெய்வீக அம்சங்களின் பங்கு, வழிபாட்டு முறைகள் போன்ற தகவல்களை குருவிடமிருந்து தெரிந்துகொண்டு மெய்சிலிர்த்து நின்றோம்.

## சென்னப்பமலையின் ஆன்மிக முக்கியத்துவம்

பல யுகங்களாக இந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு ஆன்மிக தொடர்பு இருந்து வந்துள்ளது ஸ்தலபுராணத்தில் பதிவாகி உள்ளது. இங்கே நடந்த ஜோதிர்லிங்கோத்பவம் ஏற்கனவே நிர்மாணிக்கபட்ட ஒரு நிகழ்வு என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்.

ஒரு காலத்தில் பாதரோம ரிஷியும், பாம்பாட்டி சித்தரும் இந்த மலையில் தவம் புரிந்து, இந்த ஜோதிர்லிங்கோத்பவ வரலாறு நடக்கபோவது பற்றிப் பல பாடல்கள் வழியாக எழுதி சென்றுள்ளனர் என ஸ்தலபுராணம் குறிப்பிடுகிறது.

ஒரு யுகத்தில் பாதரோம ரிஷி குதம்பை முனியாக இங்கே பசுக்களை மேய்த்து வந்தாராம். பின்னர் அவரே பாம்பாட்டி சித்தராக ஒரு காலத்தில் இங்கே தங்கி இருந்ததாகவும் அவரே பின்னொரு காலத்தில் வேறொரு உருவில், கோடிதாத்தாஸ்வாமியாக நடக்கவிருக்கும் ஜோதிர்லிங்கோத்பவத்துக்கு வழிகாட்டுவார் என்பதும் ஸ்தல வரலாறு.

சுமார் 1600 வருடங்களுக்கு முன், சைவசித்தாந்த சிற்பி ஆதிசங்கராச்சாரியார் ஒரு முறை கைலாயம் செல்லும் வழியில், இந்த சென்னப்பமலைத் திருத்தலத்தில் ஏழு நாட்கள் தங்கி, பரமனே படுத்து மோனத்தவத்தில் இருப்பது போல காட்சி தரும் இந்த மலையின்மேல் உள்ள பன்னீர் தீர்த்தம் குளத்திலிருந்து தீர்த்தம் கொணர்ந்து பூஜித்ததாகவும் ஸ்தலவரலாறு கூறுகிறது.

800 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சைவக்குரவர்களான சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் திருஞானசம்பந்தர் இந்த திருத்தலத்தை பற்றிப் பல பாடல்களில் விவரித்து உள்ளனர்:

**“காட்டூர் கடலே, கடம்பூர் மலையே, கானப்பேரூராய், கோட்டூர் கொழுந்தே, அழுந்தூர் அரசே, கொழுநல்கொல்லேரே, பாட்டூர் பலரும் பரவப்படுவாய்,பனங்காடு ஊரானே, மாட்டூர் அரவா மறவாது உன்னை பாட பணியாயே!”**

இன்னொரு பாடலில்,

**“செங்கயலோடு சேல்சேறுச்செய, சீரியாழ் முரல் தேனினத்தோடு பங்கயம் மலரும் புறவார் பனங்காட்டூர் கங்கையும் மதியும் கமழ்சடை கேண்மையாலோடு கூடிமான் மறி அங்கையாடலனே அடியார்க்கு அருளாயே!”**

இன்னுமொரு பாடலில்,

**“விடையின் மேல் வருவானை, வேதத்தின் பொருளானை,அடையில் அன்புடையானை யாவர்க்கும் அறிவொண்ணா மடையில் வாலைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர் சடையில் கங்கை தரித்தானை சாராதார் சார்வென்னே”**

இந்த இடம் கடம்பூர் மலைக்கு அருகில் பாட்டூர் என்ற இதே பெயரில் ஒரு காலத்தில் பனங்காடு நிறைந்த கானக ேக்ஷத்ரமாக இருந்துள்ளது. கடம்பூர் (தற்போது கடாம்பூர்)மலையும் இந்த இடத்துக்கு மிக அருகாமையிலேயே உள்ளது.

அப்போதே கங்கையையும் மதியையும் சுமந்த ஈசன் குடிகொண்ட ேக்ஷத்ரமாக இந்த ஸ்தலம் திகழ்துள்ளதாக இந்த பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. ‘வேத சாஸ்திரங்களுக்கு பொருள் தரவும், அனைத்து ரகசியங்களுக்கான விடை தரவல்லது இத்திருத்தலம்’ என்று அப்போதே வர்ணித்துள்ளார் சுந்தரர்.

ஆக, சென்னப்பமலையில் நிகழப்போகும் ஜோதிர்லிங்க உத்பவத்துக்கு பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே பலவிதமான தெய்வ காரியங்களும் முன்னேற்பாடுகளும்

நடந்துவந்துள்ளன. சித்தர்களும், ஞானிகளும் இங்கே தங்கி இங்கே ஒரு திருத்தலம் உருவாக வழிமுறைகளை செய்துவிட்டு சென்றுள்ளனர்.

இந்தத் திருத்தலம் தெய்வீக மணத்துடன் காலங்காலமாக திகழ்ந்து வந்துள்ளது என்பதும் தெரிகிறது. அன்றும் இன்றும் இந்த திருத்தலம் தென்கயிலாயமாக போற்றப்பட்டு வந்துள்ளதும் தெரிகிறது. கயிலையில் குடிகொண்டிருக்கும் பார்வதி பரமேஸ்வரன், இங்கே அகிலாண்டேஸ்வரி சமேத பொன்முடிசூரிய நந்தீஸ்வரன் என்று போற்றி அழைக்கப் படுகிறார்கள். உலகத்துக்கெல்லாம் ஒளிதந்து, உருவம் தரும் சூரியபகவானே இங்கே தன் சாபம் நீங்க நந்தி வடிவில் ஒவ்வொரு நாளும் வழிபட்டு செல்வதாக ஐதீகம்.

இந்த ஸ்தலத்தில் உருவாகியுள்ள லிங்கத்துக்கு 'பொன்முடி சூரிய நந்தீஸ்வரர்' என்ற புராணப் பெயர் நம்மை யோசிக்க வைக்கிறது. இந்த வையகத்தைக் காக்கும் பரமேஸ்வரன் பொன்முடி தரித்தவர். சூரியரும் நந்தியும் சேர்த்த பெயர் காரணத்தையும் அறிந்துகொள்வது அவசியம்.

**யார் இந்த நந்தி பகவான்?**

வழிபாட்டுக்கு ஒரு சிறந்த உதாரணம் நந்தி. ஒரு காலத்தில் ஷிலதமுனி புத்ரவரம் வேண்டி பரமேஸ்வரனைத் தொழுதார். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடும்தவம் புரிந்தார். அவரது பக்தியை மெச்சி, பரமேஸ்வரன் தோன்றி முனிக்கு புத்ரபாக்கியம் தந்தார். பிறந்த குழந்தைக்கு 'நந்தி' என்று பெயர் சூட்டி அவனுக்கு அத்துணை ஞானத்தையும் போதித்தார். ஒரு முறை இவர்கள் குடிலுக்கு விஜயம் செய்த இரு முனிவர்கள், நந்திக்கு ஆயுள் பலம் குறைவாக இருப்பதாக கணித்துச்சென்றனர்.

கவலையுற்ற தந்தைக்கு தைரியம் தந்து, நம்பிக்கையூட்டி ஈஸ்வரனை நோக்கி கடும் தவம் புரிந்தான் சிறுவன் நந்தி. மெச்சிய ஐயன் தன்

முன்னே தோன்றிய போது, 'நித்யமும் பரம்பொருளுடன் இருக்கும் பாக்கியம் தர' வேண்டினான். ஈசனும் மகிழ்ந்து வரம் தந்து, தன்னுடனேயே தன் குடும்பத்தில் ஒருவனாக வைத்துக்கொண்டார். நந்தியை ஒரு காளைமாடு வடிவமாக்கித் தன் வாகனமாகவும் வைத்துக்கொண்டார்.

ஆலயங்களில் கருவறையில் உள்ள லிங்கத்துக்கு எதிரில் நந்தி பணிவுடன் அமர்ந்து 'மோன' தவத்தில் இருப்பதாக சித்தரிக்கப் பட்டுள்ளார். இந்தத் தவநிலையோடு விழிப்பு, பணிவு, பொறுமை, பக்தி, அமைதி, சாந்தம், எதையும் எதிர்பார்க்காமல் தன் ஐயன் கட்டளைக்காகக் காத்திருப்பு போன்ற அரிய குணாதிசயங்களையும் கூடவே வெளிப்படுத்துகிறார்.

வழிபாட்டு முறைகளை நாம் நந்தியிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும் என்பதே இதன் தத்துவம். சமஸ்க்ருத மொழியில் நந்தி என்றால் 'ஆனந்தம்' என்று பொருள். தமிழில் 'நீக்குவது', பெருக்குவது' என்றும் பொருள்படும். பலம், ஆக்ரோஷம், வேகம், திறமை போன்றவை கலந்த காளைமாடு உருவமாக தோன்றினாலும், அமைதியும், பொறுமையும், ஆனந்தமுமே சக்தி என்பதை இந்த உலகத்துக்கு எடுத்துக் காட்டுகிறார் நந்தி. காளைமாடு உருவத்தில் இருந்தாலும் நந்தி அருவமாக தன் ஐயனை எப்போதும் தியானித்து வழிபட்டு வருகிறார்.

தன் ஐயன் ஈசனை வழிபடுவோருக்கு ஆனந்தத்தை அளிக்க நந்தி முன்மொழிவதாக ஐதீகம். பக்தர்களின் தீய எண்ணங்களை நீக்கி, பக்தியை பெருக்குகிறார் என்றும் எடுத்துக்கொள்ளலாம். நந்தியின் உருவகம் கவனிக்கவேண்டிய ஒன்று.

ஒரு பெரிய சக்திமான் அடக்கமாக, தன் நான்கு கால்களையும் மடக்கி பவ்யமாக அமர்ந்து, பாதி கண்களை மூடி, தியானதிலும், மோனத்தவத்திலும் இருந்தாலும், விழிப்புடன் இருந்து தன் ஐயன் இடும் கட்டளைக்காக காத்திருக்கிறார்.

இந்த நிலை நமக்கு பல அறிவுரைகளை தருகிறது. அவரது முன் இரண்டு கால்கள் சத்யத்தையும் தவத்தையும் பின் இரண்டு கால்கள் இரக்கத்தையும், தயாளத்தையும் குறிக்கின்றன. இந்த குணங்கள்தான் பக்திநெறியை வளர்க்கும் என்பதை நந்தி விளக்குகிறார்..

பிரார்த்தனைக்கும் தியானத்துக்கும் உள்ள வேறுபாடு பற்றியும் நாம் இங்கே தெரிந்துக் கொள்ள வேண்டும். அதற்கு நந்தியைப் பற்றி நன்குத் தெரிந்துக் கொள்ளவேண்டும். பிரார்த்தனை வழியாக கோரிக்கைகளுடன் பரம்பொருளுடன் நாம் மனஸால் பேசுகிறோம். தியானநிலையில் நாம் பரம்பொருளின் பதிலை கேட்பதற்காக அமைதியுடனும் பொறுமையுடனும் காத்திருக்கவேண்டும்.

அமைதியோடும், பொறுமையோடும் எப்படிக் காத்திருப்பது என்ற குணத்தை நந்தியிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். அதனால்தான் நம் முன்னோர்கள் கோவில்களில் நந்தி அருகில் அமர்ந்து, தியான நிலையில் பரமனின் பதிலுக்காக பொறுமையுடன் காத்திருக்க பழகிக்கொள்ளும் நடை முறையை கொண்டு வந்துள்ளனர்.

நந்தியை வணங்கினால், அவர் ஈசனுடன் நெருக்கமாக இருப்பதால் அவர் வழியாக நம் கோரிக்கைகள் ஈசனை வேகமாகவும் முன்னுரிமையுடனும் சென்றடையும் என்பது நம்பிக்கை.

ஞானத்தின் வடிவாகவும், நம்பிக்கைச் சின்னமாகவும், வழிபாட்டு வழிமுறைகளுக்கு முன்உதாரணமாகவும் விளங்கும் நந்தியை இந்த உலகத்துக்கு மீண்டும் பிரதானப்படுத்தும் வகையில்தான் சென்னப்பமலையில் உத்பவமாகி உள்ள பரமேஸ்வரன் 'ஸூர்யநந்தீஸ்வரர்' என்று அழைக்கப் படுகிறார். எந்த கோவிலிலும் இல்லாத ஒரு தனி சிறப்பு இங்கே நந்திபகவானுக்கு.

'அன்றாடம் ஆதவனைத் தொழுதால் ஆயுள் பலம் பெருகும்' என்பதும் இங்கே பிரதானம். உயிரினங்கள் நச்சு நீங்கி பூத்துக் குலுங்க உயிர் சக்தி தருகிறார் சூரிய பகவான். சந்திரன் மனதுக்கு இதம் தந்து

தூக்கம் தருகிறான். சூரியன் காலையில் உயிரினங்களைத் தூக்கத்திலிருந்து தட்டி எழுப்புகிறான்.

தினமும் சூரியனே நந்தி வடிவில் இங்கே வந்து ஈசனை வழிபட்டு சாப விமோசனம் பெறுவதாகவும், தனக்கே சக்தியை பெற்றுக்கொள்வதாகவும் கூறுகிறது ஸ்தலபுராணம். அப்படிபட்ட சூரியனுக்கு அப்படி என்ன சாபம் இருக்கக்கூடும்?

அவர் தரும் ஒளி உயிரினங்களுக்கு உயிர்சக்தி தருகிறது. ஆனால் சிலவற்றை சுட்டெரிக்கவும் அல்லவா செய்கிறது. அப்படி பாதிக்கப்படும் உயிரினங்கள் சூரியனுக்கு சாபம் இடுகின்றன. நல்லது செய்வதில் சில கெடுதலும் சேர்ந்துவிடுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்த சாபங்களை ஒவ்வொருநாளும் களைந்து புத்துயிர் பெறவே அவர் இங்கே தினமும் வழிபாடு செய்கிறார்.

அன்றாடம் ஆதவனைத் தொழுதால் சர்வ மங்களம் கிடைக்கும்,
அனைத்து பாபங்களும் விலகும், சோக சிந்தனைகளை அகற்றி
செம்மைபடுத்தப்டும், ஆயுள் பெருகும் என்பது இங்கே பிரதானம்.

**‘சர்வமங்களம் மாங்கல்யம், சர்வபாபவிநாசனம்,**
**சிந்தா சோகப்ரசமனம், ஆயுர்வர்தனமுத்தமம்’**

என்கிறது அகஸ்தியர் அருளிய ‘ஆதித்ய ஹ்ருதயம்’.

सर्वमङ्गलमाङ्गल्यं सर्वपापप्रणाशनम्।
चिन्ताशोकप्रशमनम् आयुर्वर्धनमुत्तमम्॥

சூரியனும், நந்தியும் இந்த உண்மையைதான் நமக்கு எடுத்துக் காட்டுகின்றனர். தேவ வழிபாட்டுக்கு மட்டுமல்லாது அனைத்து உயிரினங்களுமே வழிபட, சாப விமோசனம் பெற, தோஷங்கள் நிவார்தி பெற, சங்கடங்கள் தீர, தீமைகள் அகல, சந்தோஷமும்

சந்ததியும் பெருகவும் சற்குருவின் ஆசி பெற இந்த அரிய வாய்ப்பை, எளியவகையில் சென்னப்பமலை நமக்குத் தந்துள்ளது.

இதில் இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். சென்னப்பமலையில் உள்ள ஜோதிர்லிங்கமும், நந்தியும், 'அருவமும் உருவமும்' கலந்த உன்னத நிலையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அதே போல இங்குள்ள ஜகத்குருவும் அவரது சீடரும் 'அருவமும் உருவமும்' கலந்த நிலையில் பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

***உருவமோடு அருவமும் சேர்ந்த உன்னத நிலையை வழிபட்டு பிறவிப்பயன் அடைதலே இங்கே பிரதானம். இதுவே சென்னப்பமலையின் சிறப்பு. எங்குமே காணமுடியாத தனிச் சிறப்பு!***

## பரவசமூட்டும் பொன்முடி சூரியநந்தீஸ்வரர் உத்பவ வைபோகம்

ஜோதிர்லிங்கோத்பவம் நிகழபோவதைப் பற்றி பிரம்மகுரு தாத்தாஸ்வாமிகள் 1995 முதலே சொல்லிவந்தாலும், 1999 ஆம் ஆண்டு, 'நேரம், காலம்' குறிப்பிட்டுச் சொல்லத் துவங்கினார். அடுத்த 36 பௌர்ணமி கழித்து ஜோதிலிங்கம் உத்பவமாக இருக்கிறது என்றும், அதை ஒட்டி சிறப்பு பூஜைகளை சென்னப்பமலை வளாகத்தில் நடத்தவும் துவங்கினார்.

தாத்தாஸ்வாமிகளைக் காண வரும் பக்தர்களுக்கு இது பெரிய ஆச்சர்யத்தை தந்ததாலும் நிகழவுள்ள அதிசய லிங்கோத்பவம் பற்றிய தகவல் சுற்றுவட்டாரங்களில் வேகமாகப் பரவியது. நாள் நெருங்க நெருங்க இதற்கான முன்னேற்பாடுகளில் முழுமையாக இறங்கிவிட்டோம்.

அந்த செவ்வாய் கிழமையை நிச்சயமாக மறக்கமுடியாது. 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் சென்னப்பமலை வளாகமே திருவிழாக்கோலம் பூண்டது. மஹாசிவராத்திரியான அன்று இரவு உத்பவமாக இருக்கும் ஜோதிர்லிங்கம் பற்றிய தகவல் மற்றும் எதிர்பார்ப்பு சுற்றுவட்டார கிராமங்களில் பெரும் ஆர்வத்தையும் எழுச்சியையையும் ஏற்படுத்தியிருந்தது. இப்போது இருப்பது போல நவீன தகவல் தொடர்பு வசதிகளோ அல்லது போதிய விளம்பரமும் இல்லாதபோதிலும் அன்று காலையிலிருந்தே சென்னப்பமலை வளாகத்தில் மக்கள் பல இடங்களிலிருந்து வந்து குவியத்துவங்கினர்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பிருந்தே இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்ய, இரவு பகல் பாராது நாங்கள் தொடங்கியிருந்தாலும் சிறு சிறு புதிய மாற்றங்களும் ஏற்பாடுகளும் அவ்வப்போது தேவைப் பட்டது. ஆனாலும் தைரியமாக வேலைகளை தொடர்ந்தோம்.

மஹாசிவராத்திரிக்கு ஒரு வாரம் முன்பு காஞ்சீபுரத்தில் உள்ள ஸ்ரீ சங்கரமடம் சென்று அங்கே சங்கராச்சாரியார் அவர்களை சந்தித்து நிகழவிருக்கும் ஜோதிர்லிங்க உத்பவம் பற்றிய தகவல்களை சொல்லி, உத்பவ நிகழ்வின்போது ருத்ர பாராயணம் மற்றும் ஹோமங்கள் செய்வதற்கு ஏற்றவகையில் சிவாச்சார்யார்கள் கொண்ட ஒரு குழுவை அனுப்பும்படி கேட்டுக்கொண்டோம். அவரும் அதற்கு ஏற்ற உதவி செய்வதாக உறுதி அளித்தார்.

அங்கிருந்து சென்னை சென்று அங்கே யாக பொருள்கள், பூஜை சாமான்கள், கோவில் கலச பொருட்கள் போன்றவைகளை வாங்கிக்கொண்டோம். உத்பவ பூஜைக்காக பல புண்ணியநதித் தீர்த்தங்களை ஏற்கனவே கொண்டுவந்திருந்து சேர்த்திருந்தோம்.

இவ்வளவு பெரிய நிகழ்சியை ஆயிரக்கணக்கான மக்கள் காண வருவார்கள் என்பதற்காக ஓர் பிரம்மாண்ட திரையில் நேரடி ஒளிபரப்பு செய்யவும் ஏற்பாடும் செய்தோம். மாலை நெருங்கத் துவங்கியதும் மக்கள் கூட்டம் அலை மோதியது.

வந்திருந்த சிவாச்சாரியார்கள் வேதகோஷம் துவங்கினர். யாகங்களும் 108 கலசபூஜைகளும் தொடங்கியது. ஏற்கனவே இந்த நிகழ்வுக்காக மாவட்ட நிர்வாகம் சார்பாக அப்போது இருந்த மாவட்ட வருவாய் அலுவலர் (டீஆர்ஓ) திரு. பாரதிதாசன் வந்திருந்து நிகழ்ச்சியை முன்னிருந்து நடத்தினார். மாவட்ட காவல்துறை சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை அளித்திருந்தனர்.

நடுஜாமம் 12 மணி 7 நிமிடத்துக்கு பிரம்மகுரு தாத்தாஸ்வாமிகள் லிங்கம் உத்பவமாகப் போகும் ஸ்தலத்துக்குத் தன் முட்டிக்காலால் தவழ்ந்து சென்று, தன் ஒற்றைக்காலில் நின்று தவம் புரிய ஆரம்பித்தார். அந்த இடத்தை சுற்றிலும் நெய் விளக்குகள் ஏற்றப்பட்டன.

சிறிது நேரத்தில், பூமிக்குள் இருந்து சிறிய லிங்கம் ஒன்று மெல்ல உத்பவமாகத் தொடங்கியது. உத்பவமான ஜோதிர்லிங்கத்தை தாத்தா மயில் இறகு கொண்டு மெல்ல வருடினார். லிங்கத்தின் எதிரே

ஒரு நிலைக்கண்ணாடியை காட்டி அதன் பிம்பத்தை அதில் கண்டு வணங்கினார். ‘தன் பாலை சுரந்து’ பரமனை அடையாளம் காட்டிய பசுவையும் லிங்கத்துக்கு தரிசனம் செய்வித்து, உத்பவமான லிங்கத்தை பாரம்பரிய முறையோடு இத்திருதலத்துக்கு வரவேற்றார்.

உத்பவம் நிகழத் துவங்கியதும் சிவாச்சாரியார்கள் வேத கோஷத்துடன் ருத்ரஹோமங்கள் செய்யத்தொடங்கினர். யாகபூஜைகளில் கலந்துகொண்ட 108 தம்பதியர்கள் கலசத்தை சுமந்து வரிசையாக உத்பவ ஸ்தலதுக்கு சென்றனர். வாத்தியங்கள் முழங்க, இந்த வையகமே வாழ்த்த கலச தீர்த்தங்களை வாங்கி தான் நின்ற இடத்தில் அருகில் உத்பவமாகியிருந்த ஜோதிர்லிங்கத்துக்கு தாத்தா அபிஷேகம் செய்ய ஆரம்பித்தார். தம்பதியர்களையும் அபிஷேகம் செய்யவைத்தார். அனைத்து கலச தீர்த்தங்களாலும் அபிஷேகம் முடிந்தபொது ஜோதிர்லிங்கம் முழுமையாக தெரிய ஆரம்பித்தது. திவ்ய தரிசனம் கண்டு அந்த ஸ்தலமே ஆனந்தத்தில் மூழ்கியது.

இதுகாலம் வரை அமைதியுடன் இந்த நிகழ்வை கூர்ந்து கவனித்து வந்த பக்தர்கள் பரவசத்தில் ஆர்ப்பரித்தனர். வேத கோஷங்களும், பஜனைகளும் தொடர்ந்தன. ஒரு சிலர் தாங்கள் கண்ட அற்புதத்தை தாங்க முடியாமல் மயங்கி விழுந்தனர். மற்றும் சிலர் தங்கள் அனுபவங்களை அருகில் உள்ள நண்பர்களுடன் பகிர்ந்து மகிழ்ந்து கொண்டனர். சென்னப்பமலை வளாகம் ஒரு தேவலோகமாகவே காட்சி அளித்தது.

இத்தனை நிகழ்வுகளும் எங்கள் கண் முன்னே நடந்தது. எங்கள் வாழ்நாளில் முதல் முறையாக ஒரு ஜோதிர்லிங்கோத்பவத்தை நேரடியாகக் காணும் பாக்கியம் பெற்ற நாங்கள் பக்திப் பரவசத்தில் மெய்மறந்து நின்றோம்.

இயற்கைத் தத்துவங்களுக்குக் கட்டுப்பட்டு ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே நிர்ணயிக்கப்பட்ட முகூர்த்ததில், நிர்ணயிக்கப்பட்ட விதத்தில், எங்கள் குரு முன்னிலையில்

ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டுகளிக்க, இந்த 13 வது ஜோதிர்லிங்கம் உத்பவமாகியதை கண்டு பூரித்தோம். 'பொன்முடி சூரிய நந்தீஸ்வரர்' என்று தாத்தா நாமகரணம் செய்தார்.

இந்த ஜோதிர்லிங்கோத்பவத்தின் வழியாக அம்பிகையின் நெடுநாளைய கோரிக்கையும் தவப்பயனும் அன்று நிறைவேறியது. மனித குல சாப விமோசனம் நீங்க மட்டுமின்றி தேவர்களின் சாபங்களையும் தீர்க்க ஒரு புண்ணிய ஸ்தலம் இங்கே 13 வது ஜோதிர்லிங்க வடிவில் உருவாகிவிட்டது.

சிறப்பாக நடந்தேறிய இந்த லிங்கோத்பவ நிகழ்வை எண்ணி லயித்துப் போயிருந்த அனைவரும் மிக அமைதியாக, பய பக்தியுடன், நடந்து முடிந்த நிகழ்சிகளை மெய்மறந்து கவனித்தனர். வந்திருந்தவர்களில் ஒரு சிலரின் அனுபவங்களை மட்டுமே ஓரளவு கேட்டுக்கொள்ள முடிந்தது.

இன்ப அதிர்ச்சியிலிருந்து மீளாத ஒரு பெண்மணி தன் நான்கு வயதான மகள், இதுநாள் வரையில் பேச முடியாமல் இருந்தவள், திடீரென்று பேச ஆரம்பித்துவிட்டதாகவும் அந்த குழந்தை லிங்கம் வெளிவந்தபோது ஒரு பேரொளியைக் கண்டதாகவும் விவரித்ததாம். விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே ஒரு பெரிய ஒளி தோன்றி மறைந்ததாக நிறைய பேர் சொல்லிக்கொண்டனர். நடக்கமுடியாத ஒரு சிலர் திடீரென்று தாங்களே நடந்ததாவும் மகிழ்ச்சி பொங்க கூறினர்.

அனைவரின் முகத்திலும் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சியை, மனநிறைவைக் காணமுடிந்ததது. ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு ஒரு முறை மட்டுமே நடக்கும் இந்த தெய்வீக நிகழ்வை தாங்கள் காண நேர்ந்த அதிசயத்தைச் சொல்லி வியந்தனர். தாங்கள் எவ்வளவு புண்ணியம் செய்திருக்கவேண்டும் என்றும் அவர்கள் அங்கலாய்த்துக் கொண்டனர்.

அடுத்த 27 நாட்களுக்குள் ஜோதிர்லிங்கத்துக்கு ஒரு மேற்கூரைத்தளம் அமைக்கபடவேண்டும் என்ற நியதிக்கு உட்பட்டு அதற்கான

வேலைகளில் இறங்கினோம். இதற்கான உதவி எப்படி வந்தது என்றே தெரியவில்லை. தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என எல்லோரும் தங்களால் இயன்ற பொருள், ஆள்பல உதவி என்று கொட்டத் துவங்கினர். யோசித்துப் பார்த்தால் இவை அனைத்தும் சொப்பனத்தில் நடந்தேறியது போல தெரிகிறது. 27 ஆம் நாள் காலையில் பார்த்தால் அழகான மேல்தளத்துடன், ஒரு தற்காலிக, சிறிய திருவாலய வளாகம் உருவாகிவிட்டது!

இதுவரையில் உத்பவமாகியுள்ள ஒவ்வொரு ஜோதிர்லிங்கமும் காலத்தை கடந்து மக்களிடையே தெய்வநம்பிக்கை ஊட்டும் புண்ணிய க்ஷேத்ரங்களாக விளங்கிவருகின்றன. அந்தவகையில், இந்த 13வது ஜோதிர்லிங்கத்தை வழிபடும் மக்களுக்கு எண்ணிலடங்கா நன்மைகளும், பலன்களும் கிடைப்பதாக பல பக்தர்கள் தங்கள் அனுபவங்களை என்னுடன் பகிர்ந்துகொண்டதை இங்கே பதிவு செய்யாமல் இருக்க முடியாது.

சிறப்பு பூஜைகளும், ஹோமங்களும், யாகங்களும் இந்த திருவாலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதில் பங்குகொள்ளும் அன்பர்கள் பலர் தங்கள் வேண்டுதல்கள் பலிதமாவதாகவும், தங்கள் வாழ்வு புதுப்பொலிவு பெற்றதாகவும் பெருமையுடன் சொல்லிக்கொள்கின்றனர்.

இங்கே வழங்கப்படும் பிரசாதமே சந்தான பாக்யம், மாங்கல்ய பேறு அடைய வழிசெய்கிறது என்கிற நம்பிக்கை நிதர்சனமாகி வருகிறது. இதை உறுதி செய்யும் வகையில் நூற்றுக்கணக்கான அன்பர்களுக்குத் திருமணங்கள் நடந்தேறியுள்ளன. நூற்றுக்கணக்கான தம்பதியர் குழந்தைப்பேறு பெற்றுள்ளனர். சங்கடங்கள் தீருவதாகவும், குறைகள் நீங்குவதாகவும், மனநிம்மதி கிடைப்பதாகவும், தன்னம்பிக்கை பெருகுவதாகவும் பலர் தங்கள் அனுபவங்களை உறுதியுடன் சொல்கின்றனர்.

## சூரிய நந்தீஸ்வர ஜோதிர்லிங்க வழிபாடு செய்வது எப்படி?

ஒவ்வொரு ஜோதிர்லிங்கத் திருவாலயமும் அந்த ஸ்தலத்துக்கு ஏற்றவகையில் ஒரு சிறப்பு வழிபாட்டு முறைகளையும், நியதிகளையும் கொண்டவை. அந்தவகையில் சென்னப்பமலை ஜோதிர்லிங்க வழிபாட்டு வழிமுறைகளும் எங்கும் இல்லாத தனிச் சிறப்பு வாய்ந்தவை.

இங்கே உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை பணக்காரன், கற்றவன், கல்லாதவன், ஆண், பெண், குழந்தைகள், வயோதிகர்கள், ஜாதி, மதம் போன்ற எந்த பேதமும் இல்லாமல், அனைத்து உயிரினங்களும் 'நாளும்,பொழுதும்' வளமும் பெற ஈசனே அமைத்துக்கொடுத்துள்ள தெய்வீக வரம்தரும் ஸ்தலம் இது.

இங்கே இருவிழி மூடி, மன விழி திறந்து ஈசனை நினைத்து வழிபட்டாலே போதும், நல்ல எண்ணங்கள் பிரதிபலித்து, செம்மை பெற்று செயல்வடிவம் பெற பரிபூர்ண ஆசீர்வாதம் பெறலாம். நினைத்த காரியம் கைகூடும். தமையன் (ஈசன்) தனக்குள் வந்து காதோடு ரகசியங்கள் சொல்வான்.

இந்த ஜோதிர்லிங்கத்தை ஒரு முறைத் தொட்டு வணங்கினாலே நம் அங்கமும், எண்ணங்களும் செம்மை படும். எண்ணங்கள் ஜீவகாந்த சக்தி கொண்டவை. இந்த பூமி ஒரு பெரிய காந்த சக்தி. ஜோதிர்லிங்கமும் ஒரு பிரம்மாண்ட ஜீவகாந்த சக்தி. இந்தத் திருவாலயத்தில் நாம் மனஸால் வணங்கும்போது, நம் எண்ண அலைகள் தூய்மைபடுத்தப்பட்டு, அவை உயிரோட்டம் கொண்ட ஜோதிர்லிங்கத்தின் மேல் விழும்போது, மீண்டும் நம்மில் பிரதிபலிக்கபட்டு நம்மை செம்மை படுத்துகிறது. ஜென்ம ஸாபல்யம் பெறுகிறோம்.

மலை போல சுமந்து வந்த சங்கடங்கள் பனிபோல கரைந்து மறைகிறது. சிந்தனைகள் செயல் வடிவம் பெறுவதற்கான நம்பிக்கை மலர்கிறது. திரை மறைகிறது. புதியவழி தெரிகிறது. மனம் லேசாகி நிம்மதி பிறக்கிறது. மாற்றங்கள் தெரிகிறது. பாதுகாப்பான வாழ்க்கை பயணத்துக்கான வழி தெரிகிறது. இருள் மறைகிறது, ஒளி தெரிகிறது. அதிசயம் நிகழ்கிறது. பார்த்தாலே பரவசம், நினைத்தாலே நிம்மதி கிடைக்கிறது!

நண்பர்களே, எந்த ஜோதிர்லிங்கத்துக்கும் இல்லாத தனிச் சிறப்பு இங்கே உண்டு. இந்தியாவில் உள்ள எந்த ஜோதிர்லிங்கத் திருவாலயத்துக்குள்ளும், ஏன் எந்த ஒரு திருவாலயத்துக்குள்ளுமே, பக்தர்கள் கருவறைக்குள் செல்லவோ அல்லது விக்ரகங்களை தொட்டு வழிபடவோ அனுமதிக்கப் படுவதில்லை. கருவறைக்கு வெளியில் நின்றுதான் வணங்கவேண்டும். இது காலங்காலமாக பின்பற்றிவரும் நடைமுறை.

ஆனால் சென்னப்பமலையில் பக்தர்கள் தாங்களே கருவறைக்குள் சென்று இந்த ஜோதிர்லிங்கத்தைத் தொட்டு வணங்கலாம். ஏழுமுறை தொட்டு வழிபடுவோருக்கு ஜென்ம சாப விமோசனம் அப்போதே கிடைக்கும். சகல தோஷமும் நிவார்தியாகும். சங்கடங்கள் தீரும்.

ஆடை சுத்தமாக வந்து இங்கே வழிபடுபவர்களுக்கு, அங்கமும் ஆன்மாவும் சுத்தியாகும். சத்குருவின் ஆசியும் கிடைக்கும் என்பது இங்கே சாஸ்திரம். பொருள் எட்டும் போதனைகள் கிடைக்கும். சிவன் எட்டும் சிந்தனைக்குள் வந்து, நல்ல எண்ணங்களை தந்து அவைகளை செயலாக்கி, நம்பிக்கை பாதையில் தைரியத்துடன் செல்ல ஒளி கிடைக்கும்.

இந்த வளாகத்தில் குடிகொண்டிருக்கும் பொன்முடி சூரியநந்தீஸ்வரர் உடனுறை அகிலாண்டேஸ்வரி அம்பிகையைத் தொழுபவர்களுக்கு, சந்தான பாக்கியம், சரஸ்வதி பாக்கியம், மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். முயல்வோருக்கு முக்தியும் கிடைக்கும்.

ஒன்பது பொழுதை மூன்றாய் பிரித்து பத்மாசனத்தில் அமர்ந்து இந்த ஜோதிர்லிங்கத் திருக்கோவில் வளாகத்தில் தியானமிருக்கும்போது, தன்னை மறந்த நிலையில் தமையன் தனக்குள் வந்து ஜென்ம சாப விமோசனம் தருவான் என்ற நம்பிக்கைக் கல்வியை இந்த உலகத்துக்கு பறை சாட்டும் ஸ்தலம் சென்னப்பமலை. வழிபாடு முடிந்து எதிரில் உள்ள மண்டபத்தில் இடப்புறம் தலைசாய்த்து உட்கார்ந்து நல்ல சகுனங்கள் தெரிவதை உணரலாம்.

இந்த திருவாலயத்துக்கு இன்னுமொரு தனி சிறப்பும் உள்ளது. நாட்டில் உள்ள எந்த கோவிலிலும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு. மஹாசிவராத்திரி அன்று மட்டும் ஜோதிர்லிங்கத்துக்கு பக்தர்கள் தங்கள் கைகளாலேயே பசும்பால் மற்றும் வில்வபத்ரம் கொண்டு அபிஷேகம் செய்து வழிபடலாம். தொட்டு பூஜிக்கலாம். அன்று நடக்கும் ஹோம, யாக வழிபாடுகளிலும் கலந்துகொள்ளலாம்.

## உலகின் முதல் நம்பிக்கைத் திருவாலயம் கட்ட முன்வருவோம்!

நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது போல பெரும்பாலான பண்டையக் காலத்துக் கோவில்களை நாம் கட்டிப் பார்த்ததில்லை. அக்காலத்தில் அரசர்கள் மட்டுமே அவைகளைக் கட்டியுள்ளனர். வரலாறுகளை புரட்டிப் பார்த்தோமானால் பல கோவில்களை ஒரே அரசனால் கூட ஒரு குறுகிய கால கட்டத்தில் கட்ட முடிந்ததில்லை. கட்டமைப்பு தொடங்கப் பெற்றாலும் அதை முடிப்பது அவனது சந்ததியில் வந்த யாரோ ஒருவனால்தான். ஒரு கோவில் கட்ட பல நூற்றாண்டுகள் கூட ஆகியிருக்கிறது.

கோவில்களைக் கட்டுவது சாமானிய, சாதாரண நிகழ்வு அல்ல. ஒவ்வொரு கோவிலுக்கு பின்னேயும் ஒரு இயற்கை தத்துவமும், ஒரு ஆன்மிக சரித்திரமும் அடங்கி உள்ளது. கோவில் கட்டவேண்டிய அவசியத்தை அரசனுக்கு உணர்த்த சாமானிய உருவில் ஒரு சித்தன். உதவிசெய்ய தேவ கணங்கள் போன்ற ஒரு தெய்வீக அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது. ஆக, தெய்வ ஆலயங்கள் காலம் காலமாக அழியாத நம்பிக்கையை இன்னமும் மக்களிடையே நிலை நிறுத்தி வருவதில் பெரும் பங்காற்றி வருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

பிற்காலத்தில் பெரும் செல்வந்தர்கள் மட்டுமே கோவில்களைக் கட்டியுள்ளனர். கிராமங்களில் கிராம தேவதை வழிபாட்டுக்கென்று சில சிறிய கோவில்களை மக்களே கட்டியிருந்தாலும், அவை ஆகம விதிகளுக்கு உட்பட்டோ சாஸ்திர ஸம்ப்ரதாயங்களின் அடிப்படையிலோ கட்டப் படுகின்றனவா என்பது தெரியவில்லை.

என்னைப் பொறுத்தவரை சென்னப்பமலையில் உத்பவித்துள்ள பொன்முடி சூரிய நந்தீஸ்வர ஜோதிர்லிங்க கோவில்தான் இந்த யுகத்தின் முதல் ‘மக்கள் கோவிலாக’ உருவாகி வருகிறது. ஜகத்குரு கோடிதாத்தாஸ்வாமி அவர்களின் நம்பிக்கைவழிகாட்டுதலுடன்

சாமானிய மக்களாலேயே கட்டப்பட்டு வரும் உண்மையான 'நம்பிக்கைக் கோவில்' இதுவாக மட்டுமே இருக்கமுடியும்.

இது சாதாரண கோவில் இல்லை. அத்துணை ஆகம விதிகளின் அடிப்படையில், மஹேசனே மக்களைக்கொண்டு மக்களுக்காக கட்டிவரும் முதல் 'நம்பிக்கைக் கோவில்' இதுவாகத்தான் இருக்கும்.

உதயமாகி இந்த பதினாறு ஆண்டுகளில் இதுவரையில் பல பக்தர்களே தாமாவே முன்வந்து இந்தக் கோவில் காட்டும் திருப்பணியில் பங்கேற்று வருகின்றனர். மனித சரித்திரத்தில் இடம்பெறும் ஒரு பிரம்மாண்ட கோவில் வளாகம் உருவாக ஏற்பாடுகள் வெகுவாக நடந்துவருகிறது.

நண்பர்களே, பண்டையக் கோவில்கள் கட்டப்படும்போது நாம் இருந்திருக்கவோ அல்லது பார்த்திருக்கவோ வாய்ப்பில்லை. இந்தப் புண்ணியப் பணியில் பங்கெடுக்கவோ வாய்ப்பிருந்ததில்லை. ஆனால் இதோ இப்போது வந்திருக்கிறது.

எப்படி நாம் இதில் பங்கேற்பது? நம்மால் முடிந்த பொருளுதவி செய்யலாம். தெய்வ காரிமான ஒரு திருப்பணிக்கு தானம் செய்வதால் நமக்கு புண்ணியம் கிடைப்பதோடு மட்டுமல்லாமல், அந்த கோவிலில் வழிபடும் பக்தர்களின் புண்ணியத்திலும் நமக்கு பங்கு பலமடங்கு கிடைக்கிறது. '**தானம் செய்தால் தனம் பெருகும்**' என்பது சாஸ்திரம்.

கோவில்கள் நமக்கு நம்பிக்கையையும், தைரியத்தையும் வளர்த்தாலும், அவை தர்மச் சிந்தனையையும், பற்றற்ற வாழ்க்கை நெறிமுறைகளையும் போதிக்கும் கல்விக்கூடங்கள். பலன்களை பகிர்ந்து கொடுக்கும் அக்ஷயப் பாத்திரங்கள்.

புண்ணிய காரியங்களுக்குக் 'கொடுப்பது' நம்மை பண்படுத்துகிறது. மேன்மேலும் கொடுக்க வைக்கிறது. தர்மம் நம்மை காப்பதோடு மட்டுமல்லாமல் நம் தர்ம சிந்தனையையும் வளர்க்கிறது, நம்

சந்ததிகளையும் காக்கிறது. அதையும்தாண்டி மற்றவர்களின் தர்ம சிந்தனையையும் தூண்ட வழிசெய்கிறது. நமக்கு தெரியாமலேயே பிறருக்கு நாம் செய்யும் மிகச் சிறந்த நல்ல காரியங்களில் இது பிரதானமாகும். கூடவே இதில் பலனும் உள்ளது.

பொருள் கொடுக்க முடியாதவர்கள் கலங்கவேண்டாம். அவர்களும் இந்தக் கட்டுமானப் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள பல வழிகள் உள்ளன. தொழில் வல்லுனர்கள் தங்களின் தொழில் சார்ந்த திறமைகளை கட்டுமானப் பணிகளுக்குக் கொடுத்து உதவலாம்.

எதுவும் இல்லாதவர்கள் தங்கள் உடல் உழைப்பு தந்து பயன் பெறலாம். இதுவும் முடியாதவர்கள் இந்தத் திருவாலயத் திருப்பணி பற்றிய தர்ம சிந்தனையை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம்.

தங்கள் அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு இந்த கோவில் கட்டுமான பணியில் அவர்களை ஈடுபடுத்தி கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தித் தரலாம். பிற்காலத்தில் இந்தத் திருப்பணியில் ஈடுபடும் வாய்ப்பு அவர்களால் நமக்கே கூட உருவாகலாம். நம் காலத்தில் நம் கண்முன்னே உருவான ஜோதிர்லிங்கத்தைக் கண்டு பரவசமடைந்த அன்பர்களும் மற்றவர்களும் இந்த கோவில் கட்ட வாய்ப்பு உருவாக்கி கொள்ள முயற்சிசெய்யலாம்.

இந்த வாய்ப்பு அனைவருக்கும் சாதாரணமாகக் கிடைப்பதில்லை. யாராலும் சுலபமாக தர்மம் செய்ய முடியாது. நினைத்த நேரத்தில், நினைத்த விதத்தில் தர்மம் செய்யவும் முடியாது. அந்த நிலை எட்டுவதற்கு நமக்கு தெய்வ அனுக்ரகம் இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். ஆனால் அதற்கான முயற்சியை இன்றிலிருந்தே மேற்கொள்ளலாமே!

## பாகம் 2

### ஜோதிர்லிங்க யாத்திரைகள்

2002 ஆம் ஆண்டு 13 வது ஜோதிர்லிங்கோத்பவம் சென்னப்பமலையில் நடப்பதற்கு முன்பே பல ஜோதிர்லிங்க ஸ்தலங்களுக்கு விஜயம் செய்யும் வகையில் நாங்களும் ஜோதிர்லிங்கங்களைப்பற்றி தெரிந்துகொள்ளும் வாய்பை எங்கள் குரு ஏற்படுத்தித் தந்தார்.

1995 முதல் ஒவ்வொரு ஆண்டும் மஹாசிவராத்திரியின் போது இந்தியாவில் உள்ள ஒரு ஜோதிர்லிங்க தரிசனம் மேற்கொள்ளபட்டது.

இந்தியாவில் மொத்தம் பன்னிரெண்டு ஜோதிர்லிங்கங்கள்தான் உத்பவித்துள்ளன என்றுதான் இதுவரை எழுதப்பட்ட புராணங்களும் சரித்திர ஆதாரங்களும் கூறுகின்றன.

பதின்மூன்றாவது ஜோதிர்லிங்கம் ஆம்பூர் அருகில் உள்ள பாட்டூர் சென்னப்பமலை திருத்தலத்தில் உத்பவம் ஆகியுள்ளது என்ற தகவல் இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

வடமாநிலங்களில் நாங்கள் மேற்கொண்ட ஜோதிர்லிங்கங்க யாத்திரைகள் வருடத்தில் வைகாசிப் பௌர்ணமியை மையமிட்டு மேற்கொள்ளபட்டவை. தென்மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட யாத்திரைகள் மஹாசிவாராத்திரி திதியை மையமிட்டவை. ஆனால் சென்னப்பமலையில் ஜோதிர்லிங்கோத்பவமான பிறகு மஹாசிவாராத்திரி விழா ஒவ்வொரு வருடமும் அதிவிமரிசையாக இங்கேயே கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு யாத்திரைக்கு முன்னும் பின்னும் எங்களுக்கு ஒரு அபாரமான அனுபவம். குருவின் திருவருளோடு அந்த யாத்திரைகள் எளிமைபடுத்தபட்டவை. சில நேரங்களில் திக்கு தெரியாமால்

நாங்கள் தடுமாறும்போது தானாக வந்த உதவிகள் ஏராளம். பாதுகாப்பாக, அலுப்பே தெரியாத வகையில், எளிமையான வழியில் ஆச்சர்யம் கலந்து அலாதியாக அமைந்தவை எங்கள் பயணங்கள்.

திருத்தலங்களின் பின்னே புதைந்துள்ள அற்புத தகவல்களை, நியதிகளை, தத்துவங்களை எங்கள் குரு வழியாக தெரிந்துகொள்ள வாய்ப்பைத் தந்த மறக்கமுடியாத காவியங்கள். இதையும் தாண்டி, இந்த யாத்திரைகளுக்கு பின்னே பல ரகசியங்கள் புதைந்து இருக்கும். அவை பெரும்பாலும் அத்தலங்களின் இயற்கை தத்துவங்களை சீர் செய்யவோ, புதுப்பிக்கவோ அல்லது இயற்கை சீற்றத்தை தணிக்கவோ அமைந்தவை என்பதைத் திரும்பி வந்த பிறகுதான் உணர்த்துபவை.

இந்த வகையில் ஆன்மீகத்தோடு கலந்த இயற்கை வாழ்க்கை நெறிமுறைக் கல்வியும் இந்த யாத்திரைகள் வழியாக எங்களுக்கு கிடைத்துள்ளது. இதுவரை நாங்கள் பார்த்தவகையில் ஆறு நதிகள் புத்துயிர் பெற்றுள்ளன. பல சிதிலமடைந்த கோவில்கள் உயிர் பெற்றுள்ளன. ஆகம விதிகள் மாற்றபட்ட ஆலயங்கள் சரி செய்யபட்டுள்ளன. மக்களின் நம்பிக்கைப் பாதை செப்பனிடப்பட்டு, காப்பாற்றப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் செலவில்லாமல், சிக்கலில்லாமல், மிக எளிமையாக, தனக்கே உரிய பாணியில் எங்கள் குரு அமைதியான முறையில் விளம்பரமின்றி செய்துவருகிறார்.

இது வரையில் பத்து ஜோதிர்லிங்க ஸ்தலங்களுக்கு தாத்தாவுடன் பயணம் செய்யும் பாக்கியம் எங்களுக்கு கிடைத்துள்ளது. ஒவ்வொரு ஜோதிர்லிங்கத்துக்குப்பின் ஒன்பதாயிரம் புராணங்கள் இருக்கிறது. இந்த யாத்திரைகள் வழியாக அந்த இடங்களில் உத்பவமாகி உள்ள ஜோதிர்லிங்கங்களுக்கு பின்னணியில் உள்ள சிவபுராணங்கள், நாங்கள் பார்த்த, உணர்ந்து தெரிந்து கொண்ட எங்கள் பயண

அனுபவங்கள் பற்றிய தொகுப்பு உங்களுக்காக இங்கே தரப்பட்டுள்ளது.

## ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுன ஜோதிர்லிங்க தரிசனம்

சென்னப்பமலையில் ஜோதிர்லிங்க உத்பவ முன்னேற்பாடுகள் நடந்துவந்த நிலையில், எங்கள் குரு தாத்தாஸ்வாமி எங்களை அழைத்துசென்ற முதல் ஜோதிர்லிங்க ஸ்தலம் ஸ்ரீசைலம் ஆகும். இங்கேதான் முதன் முதலாக மஹாசிவராத்திரி திருவிழாவையும் காண வாய்ப்பு கிடைத்தது.

காணக்கண்கொள்ளாக் காட்சி. எண்ணிலடங்காத பக்தர்கள் கூட்டம். பிரமிப்புடன் பார்த்தோம். கடும் குளிரையும் பொருட்படுத்தாது நம்பிக்கையுடன் மக்கள் வந்து பிரார்த்தித்துச் செல்லும் அதிசயத்தைப் பார்த்து பூரித்து நின்றோம்.

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா நதியின் தென்திசையை ஒட்டி ரேஷபாகிரி மலைத் தொடரில் பரமேஸ்வரன் ஜோதியாக உருவெடுத்து லிங்கவடிவத்தில் மாறினார் இங்கே என்று சிவபுராணம் சொல்லுகிறது. இங்கே கிருஷ்ணா நதி இந்த லிங்கத்துக்கு கீழே ஒரு ஓடையாக ஓடுகிறது என்று நம்பப்படுகிறது.

ஸ்ரீசைலம் மிகவும் முக்கியமான க்ஷேத்திரமாகும். இங்கே ஈஸ்வரனின் பெயர் 'மல்லிகார்ஜுன' ஸ்வாமியாகவும் பார்வதி தேவியின் பெயர் 'பிரமராம்பா' ஆகும். புராணங்களின்படி ஒரு காலத்தில் ஈஸ்வரனும் பார்வதியும் தங்கள் பிள்ளைகளுக்கு மணம் முடிக்க விரும்பி, ஒரு போட்டி வைத்தார்களாம். யார் முதலில் இந்த உலகை சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கு முதலில் மணம். பூமியைச் சுற்றி தன் வாகனத்தில் வட்டமடித்து விட்டு சுப்ரமணியன் என்று அழைக்கபடும் கார்த்திகேயர் கைலாசம் சென்றார்.

ஆனால் அவர் வருவதற்கு முன்னரே மூத்த மகன் கணேசனோ, தாய், தந்தையே உலகம் என்று கருதி, அவர்களை ஏழு முறை சுற்றி வந்து

போட்டியில் வென்றார். ஈஸ்வரன் அவருக்கு புத்தி, சித்தி ரித்தி ஆகிய மூவரையும் மணமுடித்து வைத்தார். தன் சகோதரன் கணேசனின் திருமணம் பற்றி அறிந்த கார்த்திகேயன் கோபமடைந்து, தெற்கே ஸ்ரீசைலம் அருகே பர்வத மலையில் தங்க வந்துவிட்டார் என்று ஸ்கந்த புராணம் கூறுகிறது.

பின்னர் கார்த்திகேயனை சமாதானப் படுத்த ஈஸ்வரனும் பார்வதியும் இங்கே வந்து தன் இளைய மகனை திரும்பி வரும்படி கேட்டுக் கொண்டனர். ஜோதியாக காட்சி தந்து சாந்தப் படுத்தியதால் இந்த ஜோதிர்லிங்கம் முக்கியத்துவம் அடைந்தது.

ஸ்ரீ எனப்படும் பரம்பொருளே இந்த மலையில் (சைலத்தில்) குடி கொண்டதால் இது 'ஸ்ரீசைலம்' ஆனது. ஈஸ்வரனும் பார்வதியும் ஒவ்வொரு அமாவாசை மற்றும் பௌர்ணமி அன்று ஸ்ரீசைலம் பர்வதத்துக்கு வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பதாக ஐதீகம்.

மேலும், பின்னொரு யுகத்தில் இலங்கையிலிருந்து திரும்பிய ஸ்ரீராமபிரான் இந்தக் கோயிலுக்கு வருகை தந்ததாகவும் அந்தச் சமயத்தில் ஸ்ரீ ராமர் ஸஹஸ்ரலிங்கத்தை நிறுவியதாகவும் புராணம் சொல்லுகிறது. இங்கே 1001 சிறிய லிங்கங்களை உருவாக்கினார் என்ற பெருமையும் இந்த ஸ்தலம் பெறுகிறது.

ஸ்ரீசைலத்தை பற்றிய இன்னொரு கதையும் புராணங்களில் காணப்படுகிறது. சந்திரவதி என்ற இளவரசி ஒருநாள் இந்த காட்டிக்குள் வந்து கடும் தவம் இருந்தாள். தன் அருகில், ஒரு வில்வ மரத்தின் அடியில் ஒரு பசு தானாக பால் சுரந்து வந்ததை கண்டாள். அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபோது சூரியனை போல ஜொலிக்கும் ஒரு ஒளி பிழம்பு வெளிவந்ததாகவும் அதிலிருந்து ஒரு ஜோதிர்லிங்கம் தோன்றியதாகவும் சொல்லப்படுகிறது. இந்த இளவரசியே இந்த இடத்தில் கோவில் கட்டி வழிபட்டாள் என்றும் இந்த பெண்ணின் பக்தியை மெச்சிய ஈஸ்வரன் அவளுக்கு முக்தி அளித்ததாகவும் ஸ்தலபுராணம் கூறுகிறது. இந்தக் கோயிலில்

பிரமராம்பிகா தேவியின் சன்னதியும் ஒருங்கே இடம் பெற்றுள்ளது சிறப்பு.

இந்தக் கோயில் 1404 ஆம் ஆண்டில் ஹரிஹர ராயர் என்ற அரசனால் கட்டப்பட்டது. 27 அடி உயரத்தில் இந்தக் கோயிலைச் சுற்றி சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளது. முன்காலத்தில் அப்பகுதி மக்கள் தானாக தோன்றிய இந்த ஜோதிர்லிங்கத்தை மல்லிகை மலர்களால் பூஜை செய்து வந்தார்கள். அதனால் இந்த ஜோதிர்லிங்கம் மல்லிகார்ஜூனேஸ்வர் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. ஒரு காலத்தில் மராட்டத்தை ஆண்ட சத்ரபதி சிவாஜி இந்த கோவிலை புதுப்பித்தார். இதற்கு பின் இந்த பகுதியை ஆண்ட விஜயநகர அரசர்கள் இந்த கோவிலை மேலும் விரிவு படுத்தினர்.

இந்த புராணப் பின்னணியெல்லாம் அப்போது எங்களுக்கு தெரியாது. தாத்தாவுடன் சென்ற நண்பர் பாஸ்கர் தன் அனுபவத்தை விவரிக்கும்போது, முதல் நாளே யாத்திரைக்குழு சென்றதால் அருகில் தங்குவதற்கு ஏற்ற வகையில் எந்த இடமும் கிடைக்கவில்லை. மஹாசிவராத்திரி விழாவுக்கு வரும் பக்தர்கள் ஒரு வருடத்துக்கு முன்பே ஊரில் உள்ள எல்லா சத்திரங்கங்கள் மற்றும் தங்கும் குடில்களில் முன்பதிவுசெய்துவிடுகிறார்களாம்.

ஜோதிர்லிங்க கோவில் வளாகத்திலேயே ஒருபுறம் தங்கிக்கொள்ளலாம் என்று முடிவு செய்தோம். கிருஷ்ணா நதிக்கரையில் தாத்தா ஒரு யாகம் செய்தார். எதற்கு என்றெல்லாம் எங்களுக்கு கேட்கக்கூட தெரியவில்லை. யாகம் முடித்து அந்த கலச தீர்த்தத்தை நதியிலேயே கரைத்துவிட்டார். இரவு கோவிலுக்கு சென்றோம். இவ்வளவு பக்தர்கள் கூட்டத்தை எங்கள் வாழ்நாளில் பார்த்ததே இல்லை. நெருக்கி அடித்துக்கொண்டு போய் முதன்முதலாக ஒரு ஜோதிர்லிங்கத்தை பார்த்தோம்.

அந்த தரிசனத்தை மறக்கமுடியாது. இப்போது ஒப்பிட்டு பார்த்தால் சென்னப்பமலையில் உத்பவித்துள்ள ஜோதிர்லிங்கமும் ஸ்ரீசைலம் ஜோதிர்லிங்கமும் கிட்டதட்ட ஒரே மாதிரி உருவமும், ஒரே அளவாகத்தான் இருந்தது. ஸ்ரீசைலம் யாத்திரைக்கு ஒரு நாள்

முன்னர் மந்த்ராலயம் சென்றிருந்தோம். அங்கேயும் தாத்தா துங்கபத்ரா நதிக்கரையில் யாகம் செய்தார். அப்போது அந்த நதியிலும் சரி, கிருஷ்ணாவிலும் சரி ஓரளவு நீரோட்டம்தான் காணப்பட்டது. தாத்தா செய்த யாகங்கள் இந்த நதிகளுக்கு புத்துயிர் அளிக்கத்தான் என்பதை பின்னர்தான் தெரிந்துகொண்டோம். நாங்கள் திரும்பி வந்த பிறகு வரலாறு காணாத மழைப்பதிவு இந்த பகுதியில். மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள்! முதன் முதலாக தாத்தாவின் யாத்திரைகளின் பின்னணி தத்துவகங்கள் புரியத்தொடங்கியது.

**ராமேஸ்வரம் யாத்திரைகள்: ராமநாதேஸ்வரர் தரிசனம்**

ஸ்ரீசைலத்தைத் தொடர்ந்து நாங்கள் மேற்கொண்ட யாத்திரை ராமேஸ்வரத்துக்கு. 1997 ஆம் ஆண்டு மஹாசிவராத்திரி அன்று இந்த புண்ணிய ஸ்தலத்துக்கு தாத்தாவுடன் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. இதுவரை இந்த ஸ்தலத்துக்கு ஏழு முறை தாத்தாவுடன் சென்றுள்ளோம். ஒவ்வொரு முறையும் ஒரு புது அனுபவம். அமாவாசைக்கு தர்ப்பணம் விடும் இடமாக மட்டுமே கருதப்பட்டு வந்த ராமேஸ்வரம், தாத்தாவின் முதல் விஜயத்துக்கு பிறகு, மஹாசிவராத்திரி விழா பிரதானமாகியது இங்கே.

பல யுகங்களுக்கு முன்னே, த்ரேதா யுகத்தில் விண்ணில் இருந்து மண்ணுக்கு உயிர் பெற்று கடற்கரை மணலில் தோன்றிய ஜோதிர்லிங்கம் இங்கே பிரதானம். பகவான் ஸ்ரீ ராமனால் உருவாக்கபட்டது. 27 நட்சத்திர அடிப்படையில் 27 புண்ணிய தீர்த்தங்களை கொண்ட கோவில். ஒரு காலத்தில் வைணவமும் சைவமும் கலந்த ஆன்மிக ராஜ்யம். புராண, கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த புண்ணிய பூமி. இங்கிருந்து தான் ஸ்ரீராமன் லங்கைக்கு சேது(பாலம்) அமைத்து சீதாப்பிராட்டியை மீட்டதாக புராணம்.

இங்கே இயற்கை சீற்றத்துக்கு அரணாக அமைந்த கோவில். ஆழமான சரித்திர சுவடுகளை சுமந்து நிற்கும் அமைதியான கடல் பரப்பு. சூட்சும ரகசியங்களை அள்ளி வீசும் சுகமான காற்று. ஆரோக்கியமான மக்கள் கூட்டம். வருபவர்களை வசந்தத்தோடு

வரவேற்கும் சுத்தமான மணல் விரிப்பு. அருகில் தனுஷ்கோடி. இந்திய மஹாகண்டத்தின் கீழ் கத்திமுனை. புராண ராம சேதுவின் ஒரு கோடி. மறுமுனையில் லங்கா பட்டிணம்.

பிரிட்டிஷ் காலத்தில் தனுஷ்கோடி ஒரு முக்கிய துறைமுகம். வெள்ளையர்கள் ஸ்ரீலங்காவையும் ஆண்டதால், சென்னையில்ருந்து தளவாடங்களை கப்பல் வழியாக அனுப்ப இந்த துறைமுகத்தை வளர்த்தனர். பிரத்யேகமாக ரயில் பாதை ஒன்றையும் இதற்காகவே அமைத்தனர். அதனால் கிழக்காசிய வர்த்தகத்துக்கு ஒரு முக்கிய இணைப்புப் பாலமாக விளங்கியது இந்த துறைமுகம். வியாபாரிகளை தவிர சுற்றுலா பயணிகளும் கப்பல் வழியாக பல நாடுகளுக்கு இங்கிருந்துதான் சென்று வந்துள்ளனர்.

இரண்டு பெரிய கடல்கள் கலக்கும் முனையாதலால் பூமிக்கடியில் அரிப்பு அதிகம். இந்த வேகத்தைத் தணிக்கவும், இந்த இடத்தின் இயற்கை சூழலை பாதுகாக்கவும், கடல் போக்குவரத்து சீராக செயல்படும் விதமாக எங்கள் குரு தாத்தாஸ்வாமி இங்கே 48 ஆண்டுகள் தவம் செய்து 1964 வரை பாதுகாத்து வந்தார். பிறகு அங்கிருந்து தேசாந்திரங்களுக்கு கிளம்பிவிட்டார். கடல் பயணிகளுக்கு கலங்கரை விளக்கமாக, வழி காட்டியாக வானுயர அவர் ஒரு காலத்தில் நின்ற வரலாற்றை பறை சாட்டும் புண்ணிய பூமி. இன்றும் அந்த பகுதி மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றுள்ள சரித்திர நிகழ்வு இது.

ஒவ்வொரு முறை ராமேஸ்வரம் சென்ற போதும் தாத்தா அந்த ஸ்தலத்துக்கு சூட்சுமத்தில் ஆசீர்வாதம் செய்து வருவதை உணர முடிந்தது. அடுத்த முறை செல்லும் போதுதான் அதன் பலன் வெளிச்சத்துக்கு வரும். தாத்தா 15 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கே நடக்க இருப்பதாக சொல்லிய பல விஷயங்கள் படிப்படியாக

தொடர்ந்து நடந்தேறி வருகிறது என்பதை நாங்கள் கண்கூடாக காணமுடிகிறது.

இத்தகைய மாற்றங்கள், வளர்ச்சிகள், அதிசயங்கள் தாத்தாவுடன் நாங்கள் மேற்கொண்ட பல ஸ்தலங்களில் நிதர்சனமாகத் தெரிகிறது.

சிறிய கிராமமாக இருந்த ராமேஸ்வரம் இப்போது ஒரு பெரிய நகராட்சி. அகல சாலைகள், பயணிகளுக்கு புதிய தங்கும் வசதிகள், பாதுகாக்கபட்ட கடற்கரை. பக்தர்களின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்துள்ளதாக உள்ளூர் வியாபாரிகள் சிலர் பெருமை பட்டுக்கொண்டார்கள்.

2018 ஆம் ஆண்டு நாங்கள் மேற்கொண்ட பயணத்தின் போது ராமேஸ்வரம் கோவிலில் தற்போதைய தேவைகளை கருத்தில் கொண்டு நடைமுறை படுத்தியுள்ள சில மாற்றங்களின் தாக்கங்களை குறைத்து ஆகம சாஸ்திர நம்பிக்கையை நிலநாட்ட எங்கள் குருவால் சூட்சுமத்தில் சீர் செய்யபட்டது. பரமனே சித்தன் வழியாக சீர் செய்துக் கொள்ளும் தெய்வீகப்பணி இது!

இதை சரி செய்ய தனக்கு வந்த தெய்வீக அழைப்பிற்கிணங்கவும், இந்த புண்ணிய பூமியின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கை தொடரவும், இங்கே வரும் பக்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறவும், நாங்கள் சென்ற கார்த்திகை பௌர்ணமி அன்று இந்த கோவிலுக்கு சூட்சும வடிவில் புத்துயிர் அளித்ததாகவும் பின்னர் தாத்தா எங்களுக்கு விளக்கம் அளித்தார். தற்போது கோவிலில் கொண்டுவந்த மாற்றங்களால், ஆகம நியதிகளுக்கும், இயற்கை விதிகளுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாவண்ணம், தனக்கே உரிய பாணியில் சரி செய்தார். இதன் வெளிப்பாடு அடுத்த முறை அங்கே செல்லும் போதுதான் நிதர்சனமாக தெரியும்.

தனுஷ்கோடி கடற்கரையில் ஒரு யாகம் செய்ய வேண்டியிருக்கும் என்று தாத்தா ஏற்கனவே சொல்லியிருந்ததால் அதற்கான முன்னேற்பாடுகளுடன்தான் சென்றிருந்தோம். மாலை வேளை. அங்கிருந்த சில போலீஸ்காரர்கள் ஆரம்பத்தில் அனுமதி மறுத்தாலும், பிறகு என்ன தோன்றியதோ என்னவோ, 5 மணிக்குள் முடித்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி சென்றார்கள்.

தாத்தா சுமார் ஒரு மணி நேரம் யாகம் வளர்த்து லோக நன்மைக்காக சில பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்தது கண் கொள்ளாக்காட்சி. அமைதியான கடற்கரை, ஆர்பாட்டமில்லாத பெரிய நீர் பரப்பு. காற்றின் ஒலியைத்தவிர ஒன்றும் தெரியாத ஏகாந்தம். தூரத்தில் லங்கா பட்டிணம்.

தாத்தாவின் மந்திரங்களின் கணீர் உச்சரிப்பு. பூஜை மணியின் கிண்கிணி. கடற்காற்றையும் மீறி யாககுண்டத்தில் நிலையாகி நின்ற அக்னிப்பிழம்பு. மெய்மறக்க செய்யும் மாலை நேரம். தூரத்தில் முளைக்கும் சந்திரன். மற்றொரு பக்கத்தில் மறையும் ஆதித்யன்.

இரண்டு கிரகங்களும் சந்திக்கும் அருமையான முகூர்த்த நேரம். தான் எதிர்பார்க்கும் நிகழ்வுகள் நடக்கும் என்ற மன நிறைவோடு தான் பூஜித்த கலச தீர்த்தங்களை கடலிலேயே சங்கமித்து விட்டார். இது சீற்றத்தை தணிக்க என்று பின்னர் விளக்கம் அளித்தார். இந்த உலகை நிலைநிறுத்த ஒரு பெரிய சங்கல்பத்தை தாத்தா முடிக்க நாங்கள் எங்களான ஒரு சிறிய உதவி செய்ய முடிந்தது என்ற மன நிறைவுடன் நாங்கள் தங்கியிருந்த சத்திரத்துக்கு திரும்பினோம்.

ராமேஸ்வரத்தில் நாங்கள் தங்கியிருந்த அறையில் தாத்தா பேசும்போது, ‘மாறிப்போன சில ‘விஷயங்களை’ சரி செய்யவும், ஜோதிர்லிங்கத்துக்கு புத்துயிர் தரவும், அந்த ஜோதிர்லிங்கத்திலிருந்து பக்தர்களுக்கு புத்துயிர் பெறுவதை உறுதிசெய்யத்தான் இங்கே வந்திருப்பது’ என்று விளக்கம் அளித்தார். காசியிலும்

ராமேஸ்வரத்திலும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் உருவான ஜோதிர்லிங்கங்கள் பிரதானம். இந்த இரண்டு ஜோதிர்லிங்கங்களும் ஸ்ரீ ராம அவதார யுகத்தில் உருவானவை. இப்போது கடைசி என்று கருதப்படும் கலி யுகமே சுமார் 5000 வருடங்களுக்கு முன்னர் உருவானது. அப்படி பார்த்தோமானால் பல நூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்த ஜோதிர்லிங்கங்கள் உத்பவமாகி இருக்கவேண்டும்.

முதலில் இமய மலையில் உள்ள கேதார்நாத் திருத்தலத்தில்தான் முதல் ஜோதிர்லிங்கம் தோன்றியது (இது பல யுகங்களுக்கு முன்னால்) என்றும் அடுத்ததாக காசியிலும் பிறகு ராமேஸ்வரத்திலும் உத்பவமாகியுள்ளது என்று முதல் முறையாக, சரித்திரத்தில் பதிவு செய்யப்படாத ஒரு உண்மையை, ஜோதிர்லிங்கங்களை வரிசைப் படுத்தினார்.

வட முனையில் காசி ஷேத்திரத்தில் ஞானத்தில் சித்தியாகி ஜோதிர்லிங்கம் உருவானது. தென்முனையில் ராமேஸ்வரத்தில் சாப விமோசனம் காரணமாக உருவானது. ஒரு வருடத்தில் காசிக்கு போகிறவர்கள் அங்கிருந்து கங்கா ஜலத்தை கொண்டுவந்து இங்கே ராமேஸ்வரத்தில் அபிஷேகம் செய்யவேண்டும். இங்குள்ள மணலை கொண்டு சென்று காசியுள்ள கங்கையில் கரைக்கவேண்டும். இந்த வழிமுறைகள் செய்து சாப விமோசனம் பெறவேண்டும் என்பது ஐதீகம்.

இது சாமானியர்களுக்கு சொல்லப்பட்ட நியதி. ஆனால் தாத்தாவின் நிலை வேறு. அவர் இந்த புண்ணிய ஷேத்திரங்களுக்கும் செல்வது அந்த இடங்களுக்கு உயிரோட்டம் தருவதற்காக. மக்களின் நம்பிக்கையை நிலை நிறுத்தவும். அவர்களை நல்வழி படுத்தவும்.

ஒரு காலத்தில் ஆடி மற்றும் தை அமாவாசி அன்று முன்னோர்களுக்கு தர்ப்பணம் அளிக்கும் இடமாகவே ராமேஸ்வரம் இருந்து வந்ததது. ஆனால் தாத்தாவின் விஜயங்களுக்குப் பிறகு தற்போது மக்கள் மன

நிலயில் மாற்றம். மஹாசிவராத்திரி திருவிழா பிரதானம் என்ற நிலையை தாத்தா உருவாக்கியிருக்கிறார். நிலை தடுமாறும்போது மக்களுக்கு வழி காட்டுவது மஹேசன் கடமை அல்லவா?

உலகில் உள்ள 84 லட்சம் ஜீவராசிகளுக்கும் அடிப்படை ஜீவாத்மா. அழிவே இல்லாதது. மனமுருகி செய்யும் முறையான வழிபாடு ஜீவாத்மாக்களுக்கு போய் சேரும் என்கிற உண்மையை தாத்தா வெவ்வேறு விதமாக எடுத்துக்காட்டி வருகிறார்.

முதல் முறை சென்றபோது, மணல் வெளியாக காணப்பட்ட இந்தப் பகுதி சென்ற ஆண்டு தாத்தா ராமேஸ்வரம் சென்று வந்தபிறகு, தனுஷ்கோடி கடற்கரைக்கு ஒரு புதிய சாலை ஒன்று அமைக்கபட்டது.

சமீபத்தில் ரயில் அமைச்சகம் ஒரு அறிவிப்பை வெளியிட்டது. 1964 ஆம் ஆண்டு சுனாமியால் அடித்து செல்லபட்ட பாம்பன் ரயில் பாலம் மீண்டும் செயல்பட ஒரு புதிய பாலம் கட்ட ரூபாய் 250 கோடி ஒதுக்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக தனுஷ்கோடி துறைமுகம் மீண்டும் புத்துயிர் பெற உள்ளது!

## இமய கேதாரேஷ்வரர் ஜோதிர்லிங்க தரிசனம்

ராமேசவரத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட யாத்திரை ருத்ர இமயமலைத் தொடரில் இடம் பெற்றுள்ள கேதாரேஸ்வர் ஜோதிர்லிங்கஸ்தலம். உலகின் ஆதி லிங்கம் என்று கருதப்படும் இந்தத் திருக்கோவில் வருடத்தில் ஆறு மாதத்திற்கு மட்டும் திறக்கப்படுகிறது. மற்ற நாட்களில் மூடி வைக்கப்படுகிறது.

பார்வதிதேவி சிவபெருமானுடன் இணைந்து அர்த்தநாரீஸ்வரராக தோற்றமளிக்க கேதாரேஸ்வரரை பிரார்த்தனை செய்தாள். பார்வதியின் வேண்டுதலுக்காக இங்கு சிவபெருமான் கேதாரேஸ்வர ஜோதிர்லிங்கமாக உருவெடுத்தார்.

2000ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கேதார்நாத் யாத்திரையை பற்றி இங்கே கூறுகிறேன். அப்போது கேதார்நாத் எங்கு இருக்கிறது என்றோ எப்படி செல்வது என்றோ எங்களுக்கு தெரியாது. அங்கும் இங்கும் விசாரித்து ரிஷிகேஷத்தை அடைந்து கேதார் செல்வதற்கு காத்திருந்தபோது, எதேச்சையாக இரண்டு பஸ் நிறைய பயணிகள் ஆந்திர மாநிலத்திலிருந்து வந்திறங்கி கேதார் செல்லவிருந்த இன்னொரு பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தனர்.

ஐந்து இருக்கைகள் மட்டுமே காலியாக இருப்பதாகவும் நாங்கள் வந்தால், பஸ் நிரப்பப்பட்டு உடனடியாக புறப்படலாம் என்றும் தெரிவித்தனர். ஆச்சர்யத்துடன் பஸ்சில் ஏறி சென்றோம். தானாக முன்வந்து உதவி செய்த அந்த பயணிகளை மறக்கமுடியாது.

அந்த பஸ்ஸில் வந்த பயணிகள் முதலில் தாங்கள் கேதார்நாத் சென்றுவிட்டு பிறகுதான் பத்ரிநாத் போகபோவதாக சொன்னார்கள். அங்கே நடைமுறையில் உள்ள ஒரு பழக்கமும் இதுதான். முதலில் ஈஸ்வர தரிசனம் பிறகுதான் விஷ்ணு. இது காலங்காலமாக யாத்ரிகளால் பின்பற்றபடும் நடைமுறை.

ஆனால் நாங்களோ தாத்தா சொல்படி முதலில் பத்ரிநாத் தரிசனம் முடித்துவிட்டு பிறகு இரண்டுநாள் கழித்து வரவிருக்கும் வைகாசி பௌர்ணமி அன்று குறிப்பிட்ட திதியில் கேதார்நாத் தரிசனம் செய்ய வேண்டும் என்ற எங்கள் நியதியை எடுத்துக்கூறினோம். இதுதான் எங்கள் குரு எங்களுக்கு சொல்லியுள்ள விஸேஷம் என்பதையும் கூறினோம்.

இதைக் கேட்டு அத்துணை பயணிகளும் தாங்கள் ஏற்கனவே முடிவு செய்திருந்த பயணமுறைகளை மாற்றிக்கொண்டு எங்களுடனே பத்ரிநாத பயணத்துக்கு வந்துவிட்டனர். எங்களுக்கோ பெருத்த ஆச்சர்யம். இதுநாள் வரையில் நடைமுறையில் இருந்த பயண முறைகள் முதல் முறையாக எங்களுக்காக மாற்றம் செய்யப்பட்டது!

யாத்திரை கிளம்புவதற்கு முன்னரே தாத்தா தன்னை அங்கே காணலாம் என்று சொல்லியிருந்த போதிலும் இதை சுத்தமாக மறந்துவிட்டோம். பத்ரிநாத் தரிசனம் முடித்து கேதார் பயணம் மேற்கொண்டோம். கவுரி குண்டம் புஷ்கரிணியில் உள்ள தீர்த்தம் வெதுவெதுப்பாக இருக்கும் என்பது அந்த இடந்தின் சிறப்பு. இது அனைவருக்கும் தெரிந்த அதிசயம்.

ஆனால் அந்த கடும் குளிரிலும் அருகில் உள்ள கங்கை நதியில் தாத்தா நின்றுக்கொண்டு தன்னை சுற்றி ஒரு வட்டமிட்டு அந்த நீரை சுடுநீராக மாற்றி எங்களை அதில் குளிக்கச் செய்தார்!

கேதார் மலை அடிவாரத்தில் 14 கிமீ தூரம் நடந்துசெல்லவேண்டும். வழியில் நாங்கள் கேள்விபட்ட விஷயம் தூக்கிவாரி போட்டது. நாங்கள் வருவதற்கு ஒரு நாள் முன்புதான் அந்த மலையில் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. மின் கம்பங்கள் சில வளைந்து காணப்பட்டது. சில இடங்களில் நிலச்சரிவுகளையும் காண நேர்ந்தது.

பயம் மேலிட்டாலும், தாத்தாவுடன் செல்கிறோம் என்ற தைரியத்தில் பயணத்தை தொடர்ந்தோம். வழியில் கிட்டத்தட்ட புரவிப்பாளயத்தில் இருந்த தாத்தாவைபோலவே உருவ அமைப்ப கொண்ட ஒரு நபரை பார்க்க நேர்ந்தது. நீண்ட தாடி, பெரிய ஜிப்பா போல கோட்டு, தலையில் உல்லன்குல்லாய். எங்களுக்கு முன்னாலும் சிறிது நேரம் கழித்துப் பின்னாலும் நடந்து கொண்டிருந்தார்.

தொடர்ந்து வருகிறார் என்பது தெரிகிறது. சில நேரங்களில் மற்ற பயணிகளுடன் அளவளாவி வந்தார். சில நேரங்களில் எங்கள் அருகில் வந்தாலும் அவரை நாங்கள் முழுமையாக கவனிக்கத் தவறிவிட்டோம். மறுபடியும் அதே நபரை கேதார் கோவிலுக்கு உள்ளேயும் வெளியேயும் பார்க்க நேர்ந்தது.

கேதார் ஜோதிர்லிங்கத்தை சுற்றி வெளிவரும்போதுதான் எங்களுக்கு தாத்தா சொல்லிய விஷயம் நினைவுக்கு வந்தது. அரக்க பறக்க

ஓடிவந்து பார்த்தால் அந்த நபரைக் காணோம். எங்கு தேடினாலும் கிடைக்கவில்லை. யாத்திரை முடிந்து ஊர் திரும்பி வந்ததும், 'நேரில் தரிசனம் தந்தாலும் பார்க்க நீங்கள் யாரும் தயாரில்லை' என்று எங்களை பார்த்து எள்ளிநகையாடினார் எங்கள் குரு. ஒரு பெரிய இயற்கை பேரழிவின் தாக்கத்தை குறைப்பதற்காகத்தான் இந்த யாத்திரை என்ற தகவலையும் பின்னர் எங்களுக்கு சொன்னார். இது போல நடக்க இருப்பதை முன்னரே சொல்லியிருந்தால் நீங்கள் என்னுடன் வந்தேயிருக்கமாட்டீர்கள் என்றும் சொல்லி சிரித்தார்.

இதற்கு முன்னர் இமயமலை பகுதிக்கு நாங்கள் சென்றதில்லை. இவ்வளவு சாதாரணமாகவும், பாதுகாப்பாகவும், ஒரு பெரிய பிரம்மிப்புடனும் எங்களால் தனியாக சென்றிருக்கமுடியுமா என்று தெரியவில்லை. பெரிய புதிராக எங்களுடனே பயணம் செய்து அரிய ஆன்மிக விஷயங்களை எங்களுக்கு எங்கள் குரு எடுத்துக்காட்டிய விதம் மறக்கமுடியாத அனுபவம். 2012 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக தாத்தாவுடன் கேதார் யாத்திரை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது.

### சோமநாத் ஜோதிர்லிங்க தரிசனம்

இந்தத் திருத்தலத்துக்கு மேற்கொண்ட யாத்திரையை மறக்க முடியாது. மிகவும் பழைமை வாய்ந்த ஜோதிர்லிங்கங்களில் இதுவும் ஒன்று. பல யுகங்கள் கண்டது. ஸ்கந்த புரணத்தில் இந்த கோவில் ஸ்தல புராணம் சொல்லபட்டுள்ளது.

ஈஸ்வரன் தலையில் வாசம் கொண்டுள்ள சந்திரன், சூரியனை போன்று பிரகாசித்த ஈஸ்வரனை ஸ்பர்ஸ லிங்கமாக 'சோமா' என்று பெயரில் இங்கே வழிபட்டதாக சொல்லப்படுகிறது. ஒரு காலத்தில் அந்த சோமா என்கிற சந்திரன், அந்த பிரதேசத்தை ஆண்ட தக்ஷை பிரஜாபதியின் 27 மகள்களையும் மணந்ததாக இந்தப் புராணம் குறிப்பிடுகிறது.

சோமா தான் மிகுந்த ஒளியுடன் ஜொலிப்பதாக கர்வம் கொண்டான். தன் மனைவிகளில் எல்லாரையும் விட இளையவளான ரோகிணியை மட்டும் அதிகமாக நேசித்தாகவும் மற்றவர்களை கவனிக்காமல் விட்டதாகவும், இதை அறிந்த தக்ஷ மஹாராஜா அவனுக்கு ஒளி இழக்க சாபம் கொடுத்தார்.

சோமா (சந்திரபகவான்) ஒளியிழந்து தேயத் தொடகினார். சந்திரனின் மன்னிப்பை ஏற்றுக் கொண்ட தக்ஷன் 'ப்ரபாஸா' என்ற இடத்தில் சாபத்திலிருந்து விமோசனம் கிடைக்குமென்ற பரிகாரத்தையும் சொன்னார். அந்த இடத்திற்கு சென்ற சோமா, காலபைரவ லிங்கமாக உத்பவமாகியிருந்த ஜோதிர்லிங்கத்தை கடும் தவமிருந்து வணங்கி, சாபம் நீங்கி, ஒளியையும், தோற்றத்தையும் முழுமையாகப் பெற்றான்.

இங்குதான் 'மாதத்தில் பாதிநாள் பிரகாசமாகவும் மீதி நாட்கள் தேயவும்' ஆசி பெற்றான். சோமன் வணங்கி சாபம் நீங்கியதால் இந்த ஜோதிர்லிங்கம் சோமநாத் என்று பின்னர் பெயற்காரணம் பெற்றது.

சாபம் நீங்கிய சந்திர பகவான் ப்ரபாஸாவில், ப்ரம்மதேவனின் உதவியுடன் சிவபெருமானுக்காகத் தங்கத் தகடுகளால் ஜொலிக்கும் சோமநாதர் கோயிலைக் கட்டினார்.

அரபிக்கடலின் தென்மேற்கு திசையிலுள்ள குஜராத் மாநிலத்தில் கபிலா, ஹீரன்யா மற்றும் சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் இடத்தில் இந்த கோவில் அமைந்துள்ளது. எண்கோண வடிவில் அமைந்துள்ள இந்த கோவில் பிரகாரம் ஈஸ்வரனின் எந்த்ரமாக கருதப்படுகிறது. கோவிலின் ஒரு பகுதி அரபிக் கடலுக்கு அரணாக அமைந்துள்ளது.

இந்த கோவில் ஏழு அடுக்கு மாளிகையாக சுமார் 155 அடி உயரம் வரை பிரம்மாண்டமாக கட்டப்பபட்டுள்ளது. கோவிலின் கோபுர கலசம் சுமார் 10 டன் எடையுள்ளது. 27 அடி த்வஜஸ்கம்பம் கொண்டது. கோவில் கட்டப்பட்டுள்ள இந்த இடத்திலிருந்து கடல்

வழியாக பூமியின் தென் துருவம் அடைய, சுமார் 9936 கிமீ வழியில் எந்த இடையூறும் இல்லை என்பது இன்னொரு ஆச்சரியமான தகவல்.

சந்திரபகவானால், சத்யயுகத்தில் கட்டப்பட்ட சோமநாத் கோயில் சேதமடைந்து, பிறகு திரேதாயுகத்தில் இராவணனாலும், அதன் பிறகு த்வாபரயுகத்தில் கிருஷ்ண பரமாத்மாவாலும் அதன் பின் பாண்டவர்களில் ஒருவரான பீமனால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

1026ஆம் ஆண்டில் ஆப்கான் மன்னனான முகமது கஜினி படையெடுத்துப் பல முறை இந்தக் கோவிலை அழித்தான். அதன் பிறகு சோமநாத் கோவில் பல முறை புதுப்பிக்கப்பட்டது. சில வேத ஆராய்ச்சியாளர்களின் கணக்குபடி, இந்தக் கோவில் சுமார் ஏழு லக்ஷம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

தற்சமயமுள்ள சோமநாத் மந்திர் ஏழாவது முறையாக 1950ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. அப்போதிருந்த ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் இந்த கோவிலைப் புது பொலிவுடன் தொடங்கி வைத்தார்.

இவ்வளவு மகத்துவம் வாய்ந்த சோம்நாத் திருத்தலத்துக்கு 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 அன்று எங்கள் குருவுடன் யாத்திரை மேற்கொள்ள வாய்ப்பு கிடத்தது.

ரயிலில் புறப்பட்டு இரண்டு நாள் கழித்து சோம்நாத் சென்றடைந்தோம். கோவிலுக்கு அருகில் உள்ள 'கோடியார் தர்ம சாலா' என்ற ஒரு சத்திரத்தில் தங்கினோம். மாலையில் அருகில் உள்ள அரபிக் கடற்கரையில் நடந்தபோது ஆங்காங்கே லிங்கங்கள் முழுமையாகவும் சிதைந்தும் தென்பட்டது.

இருட்ட ஆரம்பித்ததால், அங்கிருந்து சத்திரம் நோக்கி நடக்க ஆரம்பித்தோம். அப்போது இன்னொரு அதிசயமும் நடந்தது. தாத்தா எங்களை முன்னால் போகச் சொல்லிவிட்டு, அவர் அங்கேயே நின்ற வண்ணம் யாரிடமோ கனிவுடன் பேசுவதை நாங்கள் கேட்டோம். சரியாகப் புரியவில்லை. சிறிது நேரம் அங்கேயே நின்ற தாத்தா அந்த இடத்தில் மணலில் ஒரு வட்டம் இட்டு தியானம் செய்யத் தொடங்கினார்.

பிறகு எங்களிடம் பேசும்போது தாத்தா கூறினார்: இந்த இடத்தில்தான் ஆப்கான் நாட்டின் மன்னன் முகமது கஜனி சௌராட்டிர பகுதியை ஆண்ட ஜட் மன்னர்களோடுப் போரிட்டான். ஆயிரக்கணக்கான வீரர்கள் இருதரப்பிலும் மடிந்தனர். 17 முறை இந்த போர் நிகழ்ந்தது. முகமது மற்றும் அவனின் வாரிசுகளால் சோம்நாத் கோவில் பத்து முறை தரை மட்டமாக்கபட்டது, ஜோதிர் லிங்கம் பின்னமாக்கபட்டது.

ஒருமுறை இந்த கோவிலைக் காக்க, தமிழ்நாட்டிலிருந்தும் படைகள் அனுப்பப் பட்டதாம். இந்தப்புண்ணிய ஸ்தலம் ரத்தகளமாக மாறியது. இரு தரப்பிலும், பல வீரர்களும் அரசர்களும் மாண்டுபோனார்கள்.

தாத்தா மேலும் விவரிக்கையில், முதல் முறையாக முகமது சோம்நாத் லிங்கத்தை பிளந்தபோது அது தானாகவே உயரக்கிளம்பி மறுபடியும் தானாகவே கூடியதை கண்டு பயத்தில் உறைந்து நின்றானாம். தன் நாட்டுக்கு திரும்பி தன் அமைச்சர்களுடன் ஆலோசித்தானாம்.

அடுத்தமுறை வரும்போது தன்னுடன் வெடிமருந்து கொண்டுவந்து லிங்கத்தை தகர்த்து அந்த துகள்களை கடலில் கொட்டிவிட்டானாம். அந்த துகள்கள் மறுபடியும் சேர்ந்து அங்கே மீண்டும் அவன் கண்ணில் படாமல் மறைந்து காணப்பட்டது. பின்னர் கோவில் புனரமைக்கபட்டபோது, வேறு லிங்கம் வைக்கப்பட்டது. இது போல ஒவ்வொரு முறை கோவில் தாக்கப்பட்ட போதும் லிங்கங்கள் மாற்றவேண்டியிருந்தது.

இந்த கோர நிகழ்வு பல நூற்றாண்டுகளுக்கு நடந்தேறிய அந்த இடத்தில்தான் தாத்தா வட்டமிட்டு நின்று, 'தங்கள் ஜன்ம பாப விமோசனத்துக்காக ஆன்ம வடிவில் அலைந்துகொண்டிருந்த முகமதும் அவனது சந்ததியினரும், தாங்கள் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு கோரி, ஜென்ம சாபல்யம் வேண்டி, தன் காலை பிடித்து அழுதாதகவும், அவர்களுக்கு தான் சாப விமோசனம் அளித்ததாகவும் அமைதியாக கூறினார். சூட்சுமத்தில் நிகழ்ந்த இந்த சம்பவம் எங்களை மெய்சிலிர்க்க வைத்தது.

இந்த கோவிலுக்கும், இந்த இடத்துக்கும், முகமது மற்றும் அவனின் பரிவரங்களுக்கும், கோவிலுக்காக உயிர் கொடுத்த வீரர்களின் சாபங்கள் நீக்கவே தான் இந்த பயணம் மேற்கொண்டதாகவும், வந்த வேலை முடிந்தாகவும் தாத்தா மகிழ்ச்சிபொங்க கூறினார். மேலும் இந்த இடம் இன்னும் பல மடங்கு வளர்ச்சி அடையும் என்றும், கோவிலுக்கு புத்துயிர் அளிக்கபட்டதால் லட்சகணக்கில் பக்தர்கள் வருவார்கள் என்றும் எங்கள் குரு ஆசீர்வதித்தார்.

**நாசிக் திரியம்பகேஸ்வரர் தரிசனம்:**

**கோதாவரி உயிர் பெற்ற அதிசயம்!**

2016இல் நாசிக் செல்லவேண்டும், அங்குள்ள ஜோதிர்லிங்க தரிசனம் செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள் என்றார் எங்கள் குரு. அவர் சொன்ன குறிப்பிட்ட நாளில் தாத்தாவுடன் நாசிக் நகரத்துக்கு பயணமானோம். எதற்காக போகிறோம் என்றெல்லாம் தெரியாது. 'கிளம்புங்க' என்று தாத்தா சொன்னார், கிளம்பிவிட்டோம்.

முதல் முறை இந்த நகரத்துக்குப் போகிறோம். அங்கே திரியாம்பகேஷ்வர் என்கிற ஜோதிர்லிங்கம் உத்பவம் ஆன ஸ்தலம் என்று தெரியுமே தவிர, அங்கே தாத்தா என்ன செய்யப் போகிறார்

என்று தெரியாது. ரயில் பயணத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தங்குவதற்கு அங்கே போனது பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நாங்கள் நினைத்துக்கொண்டு இருந்தோம்.

ஆனால், பிரயாணத்துக்கு ஒரு சில நாட்கள் முன்னர், என்னுடைய தூரத்து உறவினர், பல நாட்களுக்கு முன்னரே ஆம்புரை விட்டு வட நாட்டுக்கு சென்றவர், சற்றும் எதிர்பாராமல், என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டார். தான் நாசிக் நகரத்தில் இருப்பதாகவும், என்னுடைய தொலைபேசி எண் தற்செயலாக அப்போதுதான் கிடைத்ததாகவும், குசலம் விசாரிப்பதற்காக அழைத்தாகவும் கூறினார்.

என்னே ஆச்சர்யம்! உடனே நான் தாத்தாவோடு இன்னும் சில நாட்களில் அங்கு வர இருப்பதாகவும், நாசிக்கில் தங்குவதற்கு ஒரு நல்ல இடம் ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொண்டேன். அவருக்கு தாத்தா தெரியாது. ஆனாலும், தான் எல்லா வசதிகளையும் செய்து தருவதாக உறுதி அளித்தார்.

குறிப்பிட்ட நாளில் நாங்கள் ரயில் எறினோம். நாசிக் ரயில் நிலையத்தில் இந்த உறவினர் காத்திருந்தார். எங்களைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சி அவருக்கு. இங்கேயிருந்து நாசிக் சென்று பல ஆண்டுகள் ஆனபடியால், தமிழ் பேசும் நண்பர்களை கண்டதும் பூரித்து போனார். எங்களை கோவில் அருகில் உள்ள சத்திரம் ஒன்றில் தங்க வைத்து உணவுக்காகவும் ஏற்பாடு செய்தார். அன்று இரவு தங்கி மறுநாள் விடியகாலை கோவிலுக்கு சென்றோம்.

த்ரியம்பகேஷ்வர் லிங்கம் உத்பவமான நிகழ்ச்சியை தாத்தா விவரித்தார். ஒரு காலத்தில் திரியம்பகேஸ்வரத்தில் (அப்போது நாசிக் அவ்வாறு அழைக்கபட்டது) கடுமையான பஞ்சம் நிலவியது. அங்கு வாழ்ந்த கௌதம முனி தன்னுடைய தவவலிமையால் தன் ஆசிரம்

அருகில் ஒரு பண்ணை அமைத்து, ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நெல் விதைத்து, மதியவேளையில் அறுவடை செய்து, சமைத்து, தன்னை நாடி வரும் ரிஷிகளுக்கும் மற்ற வழிபோக்கர்களுக்கும் படைத்து மகிழ்வாராம்.

வருண பகவானும், முனியின் தர்ம சிந்தையை மெச்சி நாள்தோறும் மழை பொழிய செய்வாராம். நாளுக்கு நாள் பக்தர்கள் கூட்டம் அதிகரித்தது. அன்னதானம் பற்றி அனைத்து லோகங்களிலும் தகவல் பரவியது. இதைக்கண்டு பொறாமை கொண்ட இந்திரன் எங்கே அத்தனை புண்ணியங்களையும் கௌதம முனி எடுத்துக்கொள்ளபோகிறாரோ என்று பயந்து, அந்த பயிர்களை நாசம் செய்ய காட்டு விலங்குகளை அனுப்பினான்.

கௌதம முனி தன் கையிலிந்த ஒரு தர்பை புல்லை எடுத்த வீச, காட்டு விலங்கு ஒன்று பசுவாக தோற்றம் தந்து மாய்த்து போனது. அந்த விலங்கு முனிக்கு சாபமும் இட்டது. இதனால் அங்கே வரும் ரிஷிகளும் மற்றவர்களும் இந்த முனியின் அன்னதானத்தை தவிர்த்தனர்.

மீண்டும் அந்த பகுதிக்கு பஞ்சம் பீடித்தது. கோபம் கொண்ட கௌதம முனி, அங்கே உள்ள பிரம்மகிரி மலையில் ஒரு குகையில் தங்கி ஈஸ்வரனை வேண்டி பரிகாரம் தேடினார். பசு மடிந்த இடத்தில் கங்கை உருவாகி அந்த கங்கையில் நீராடினால்தான் அவரது சாபம் தீரும் என்று உணர்ந்து பல ஆயிரம் ஆண்டுகள் கடும் தவம் கொண்டார்.

முனிவரின் தவத்தை மெச்சி ஈஸ்வரன் எதிரில் பிரசன்னமானார். முனியோ தனக்கு ஈசன் தலையில் உள்ள கங்கையை தர வேண்டினார். ஈசனை விட்டு பிரிய மனமில்லாத கங்கை வருவது பொல வந்து அந்த மலையில் மறைந்து போனாள். கோபமுற்ற ஈசன்

தன்னுடைய சூலத்தால் இந்த மலைக்கு அருகில் பூமியை பிளந்து கங்கையை தங்க வைத்தார்.

ஆனாலும் கங்கை போக்கு காட்டி மறைந்தாள். இதனால் எரிச்சல் அடைந்த முனி மீண்டும் தர்பை புல் கொண்டு கங்கையை பிரம்மகிரியில் தக்கவைத்து கொண்டார். ஈசன் பிளந்த இடத்தில் ஜோதி உருவாகி மூன்று லிங்கங்களாக நின்றன. ஈசன், பிரம்மன் மற்றும் விஷ்ணு ஆகிய மூவரும் ஒன்றாக இணைந்து கௌதம முனிக்கு விமோசனம் வழங்கிய ஸ்தலமாக நாசிக் விளங்குகிறது.

'கோ'வை கொன்ற பாவத்தை நிவர்த்தி செய்ததால், கங்கை இங்கே கோதாவரி என்று பெயர் பெற்றாள். கௌதம முனியால் உருவானதால் இந்த நதிக்கு கௌதமி என்று இன்னொரு பெயரும் உருவானது.

நாங்கள் சென்றபோது, கோவில் எதிரில் உள்ள புஷ்கர்ணியில் சிறிது நீர் காணப்பட்டது. கோதாவரி வற்றி காய்ந்து காணப்பட்டது. தக்ஷிண கங்கையாக கருதப்படும் இந்த ஆறு ஒரு காலத்தில் வற்றாத ஜீவநதியாக இருந்தது. கடந்த 15 ஆண்டுகளாக இந்த நிலை. மாறிவரும் மக்கள் மன நிலைக்கு ஏற்ப மாரியும் தன் நிலை மாறிப்போகிறது.

மாரி பொய்த்ததால் இந்த நதி படுகையில் வறட்சி நிலவியது. சுமார் 1000 கிமீ தூரம் ஓடி வங்க கடலில் கலக்கும் இந்த நதி களைஇழந்து காணப்பட்டது. இந்த நதியை நம்பியுள்ள சுமார் 4 லக்ஷம் சதுர கிமீ நிலபரப்பும் விளைச்சல். நீரை நம்பியுள்ள லட்சக்கணக்கான மக்களின் அவதி பற்றி சொல்லவே வேண்டாம். இந்தத் தகவல்கள் எல்லாம் எங்களுக்கு தெரியாது. அங்கிருந்தவர்கள் சொல்லிதான் தெரிந்தது. ஆக தாத்தா என்ன செய்யப் போகிறார்? ஆர்வத்துடன் காத்திருந்தோம்.

கோவிலில் சிறிது நேரம் இருந்தோம். சாதாரணமாக நமக்கு பழக்கப்பட்ட லிங்க வடிவம் கூம்பு வடிவம் மேல்நோக்கியும் அதை தாங்கி நிற்கும் ஆவுடை கீழ்புரமும் காணப்படும். ஆனால் இங்கே அந்த ஜோதிர்லிங்கத்தில் கூம்பு வடிவம் ஆவுடைக்கு கீழ் புறம் பள்ளமாக உள்ளது. இந்த பள்ளத்தில் மூன்று சிறிய லிங்கங்கள் காணப்படுகின்றன. இவை சிவா விஷ்ணு பிரம்மா என்று வணங்கப் படுகிறது.

இந்த லிங்கத்தை சுற்றிலும் கோதாவரி நீர் ஓடைபோல் எப்போதும் போய்க்கொண்டிருக்குமாம். இதுதான் இங்கே விஸேஷம். ஆனால் நாங்கள் சென்றபோது எல்லாம் வறண்டு பொலிவிழந்து காணப்பட்டது. பக்தர்கள் கூட்டம் என்னவோ வந்துகொண்டுதான் இருந்தது.

மறுநாள் விடிய காலை அருகில் உள்ள பிரம்மகிரி மலைக்கு செல்லவேண்டும் என்றார் தாத்தா. அப்போதுதான் அந்த மலையையே கவனிக்கத் தொடங்கினோம். 'நடக்கலாமா' என்றார் தாத்தா. எங்களுடன் வந்த சிலர் வயதானவர்கள். அதில் ஒருவர் சமீபத்தில்தான் இதய அறுவை சிகிச்சை செய்துக்கொண்டிருந்தார்.

அவருக்கும் எங்களுடன் மலை ஏறி வர விருப்பம் இருந்தாலும் தயங்கினார். இதை கவனித்த தாத்தா அவரைத் தொட்டு ஆசீர்வாதம் செய்து நம்பிக்கையுடன் தைரியமாக வரச்சொன்னார். தூரத்திலிருந்து பார்க்க சிறிய மலையாக காட்சி தந்த பிரம்மகிரி அருகில் போக போக வானுயர வளர்ந்து நின்றது.

வழியெல்லாம் எங்களை குஷி படுத்த தாத்தா பல கதைகளை சொல்லிக்கொண்டு வந்தார். களைப்பு தட்டும் போதெல்லாம் எங்களுக்கு தாத்தாவின் ஆசீர்வாதம்தான் புத்துணர்வு தந்தது. அசதி தெரியாமலே பாதி மலை ஏறிவிட்டோம். அங்கே இன்னோர் அதிசயம் காத்திருந்தது.

‘தாத்தாசாமி குகை’ என்று ஒரு பெயர்ப்பலகை ஒன்று அங்கே தொங்கியதை கண்டு பிரமித்து போய் நின்றோம். பல யுகங்களுக்கு முன் இங்கேதான் சுமார் 2000 ஆயிரம் ஆண்டுகள் தான் தவமிருந்து கங்கையை இங்கே வரவழைத்தாக தாத்தா அடக்கத்துடன் கூறியதை கேட்டு மெய்சிலிர்த்து நின்றோம். இவர்தான் அந்த கௌதம முனியா?

இருட்டான குகைக்குள்ளே அழைத்து சென்று தான் அமர்ந்து தவம் செய்த ஒரு பீடத்தை காட்டினார். அங்கே ஒரு யாகமும் செய்தார். தாத்தா எங்கே சென்றாலும் யாகம் செய்யக்கூடும் என்று நாங்கள் எதிர்பார்த்ததால், கையோடு அதற்கு தேவையான பொருள்களையும் எடுத்து சென்று இருந்தோம்.

அருகில் இருந்த கற்களை பரப்பி யாககுண்டம் அமைத்து அங்கே கிடைத்த சமித்துகளையும் அடுக்கியபோதுதான் முக்கியமான ஒன்றை மறந்து விட்டோம் என்று தெரிந்தது. வத்திப்பெட்டி! என்ன செய்வது என்று முழித்தோம். தாத்தாவோ தனக்கே உரிய பாணியில் எங்களை கடிந்து கொண்டு, ‘அக்னி தேவா வா’ என்று கையை வேகமாக அசைத்தாரே பாருங்கள், சமித்துகள் உடனே பற்றிக்கொண்டுவிட்டது!

கொழுந்துவிட்டு எறிந்த அக்னி ஜ்வாலைகளில் லயித்து போய் நின்றோம். தன் யாக நியதிகளை முடித்துக்கொண்டு எங்களை மேலும் மலை உச்சிக்கு அழைத்து சென்றார் தாத்தா. போக போக கரடு முரடான பாதை. சில இடங்களில் மிக செங்குத்தான படிகள். சில இடங்களில் படிகளுக்கு பதிலாக இரும்பு கடப்பறைகளைப் பிடித்து ஏறவேண்டும்.

வழிநெடுக குரங்குகள் தண்ணீரைத் தேடி அலையும் சோகத்தைக் கண்டோம். மலை ஏறி வரும் பக்தர்களிடம் உள்ள தண்ணீர் பாட்டல்களை மட்டும் பிடுங்கி சென்று குடிப்பதைப் பார்த்தபோதுதான் அங்கு நிலவும் கடும் வரட்சியின் தீவிரம் புரிந்தது.

ஒரு வழியாக உச்சியை அடைந்தோம். ஒரே சிலரே இவ்வளவு உயரம் ஏறி வருகிறார்கள் என்று சொன்னார் அங்கே இருந்த ஒரு பூஜாரி. ஒரு சின்ன மண்டபம். நடுவில் ஒரு சிறிய குண்டம். இங்கிருந்துதான் கோதாவரி உத்பவம் ஆகிறது.

சாதாரணமாக இது எப்போதும் பொங்கி வழிந்து பிரம்மகிரி மலைச் சாரலில் மறைந்து மலை அடிவாரத்தில் நீர்வீழ்ச்சியாகக் கொட்டி, கோதாவரியாக பிரவகிக்குமாம். ஆனால் இந்த குண்டம் கிட்டத்தட்ட காய்ந்து போன நிலையில் காணப்பட்டது.

தாத்தா அங்கே மீண்டும் தன் அதிசயங்களை தொடர்ந்தார். குண்டத்தில் இருந்து தன் கையால் சிறிது நீர் மொண்டு, கண் மூடி, தியானத்தில் இருந்து மீண்டும் அங்கேயே ப்ரோக்ஷணம் செய்தார். 'இன்றிலிருந்து இந்த இடத்துக்கான சாபம் நீங்கியது. இந்த பகுதி மறுபடியும் கொழிக்கும். கோதாவரி உயிர் பெறும். மக்கள் சுபிட்சம் அடைவார்கள்' என்று மகிழ்ச்சியுடன் ஆசீர்வாதம் செய்தார்.

நாங்கள் மலையிருந்து இறங்கி வருவதுக்குள் இருட்ட தொடங்கியது. தட்டு தடுமாறி ஒரு வழியாக இறங்கிவிட்டோம். அன்று இரவு எங்களுக்கு அசதியே இல்லை நன்றாக தூங்கிவிட்டோம். மறுநாள் காலை, வெளியே கொட்டோ கொட்டு என்று கன மழை வெளுத்து வாங்கிக்கொண்டிருந்தது. சுதாரித்து கொண்டு வந்து பார்த்தால் ஊரெங்கும் வெள்ளம். கோவிலுக்கு எதிரே உள்ள புஷ்கர்ணியில் நீர் கரை புரண்டு ஓடியது. திரியம்பகேஸ்வர் ஜோதிர்லிங்கத்துக்கு கீழே பழைய நீரோடை ஜொலித்தது. அந்த ஊர் மக்கள் இந்த அதிசயத்துக்கான காரணம் புரியாமல் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர்.

## பீமாசங்கர் ஜோதிர்லிங்க யாத்திரை

நாசிக்கில் திரியம்பகேஸ்வரர் தரிசனம் முடித்தவுடன் அருகில் உள்ள இன்னொரு ஜோதிர்லிங்க ஸ்தலத்துக்கும் போகலாம் என்று தாத்தா சொன்னார். இது நாசிக்கிலிருந்து சுமார் 200 கிமீ தொலைவு உள்ள பீமாசங்கரம். நான்கு மணி நேர பயணம். அழகான சையாத்திரி மலைத்தொடருக்கு நடுவில் உள்ளது. அடர்ந்த காடும், வானுயர்ந்த சிகரங்களும், கிசுகிசுக்கும் பீமா நதியும் பீமஷங்கரை இறைவனின் அரிய படைப்புகளில் ஒன்றாக்குகின்றன. 13 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட கம்பீரமானக் கோவில். இங்கிருந்துதான் பீமா நதி உருவாகிறது. 17 கிளை ஆறுகளை கொண்ட இந்த நதி மஹாராட்டிர மாநிலத்தின் முக்கிய நதிகளில் ஒன்று. இந்த நதி, மஹாராட்டிரம், கர்நாடகம் மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு பயன் தரும் நதி ஆகும். வங்க கடலில் கலப்பதற்கு முன் இந்த நதி கிருஷ்ணா நதியோடு கலந்துவிடுகிறது. சுமார் 75000 சதுர கிமீ பரப்பளவில் விவசாயம் நடக்க உதவி செய்கிறது.

திரிபுரசுர அரக்கனின் தவத்தை மெச்சி சிவபெருமான் அவனுக்கு சாவில்லாத வரத்தைக்கொடுத்து கூடவே, ஆண்பாதி-பெண்பாதி உடல் கொண்டவரால் அவனுக்குச் சாவு என்று சொன்னார். சிவ பெருமானிடமிருந்து வரத்தைப் பெற்ற திரிபுரசுரன் மக்களைக் கொடுமைப் படுத்தினான். அவனுடைய கொடுமையை தாளமுடியாத மக்கள் சிவபெருமானிடம் முறையிட்டு கோரிக்கை வைத்தார்கள். கார்த்திகை பௌர்ணமியன்று பார்வதி தேவி சிவபெருமானின் உடலில் புகுந்து அர்த்தநாரீஸ்வரராக மாறி திரிபுசுர அரக்கனை கொன்றார். அவனோடு போராடும் சமயத்தில் பூமியைத் தொட்ட சிவபெருமானின் வியர்வைத் துளிகள் பீம நதியாக மாறியது. அந்த இடத்தில்தான் சிவபெருமான் பீமசங்கர்

ஜோதிர்லிங்கமாக காட்சி அளிக்கும் கோவில் இருக்கிறது. இது அங்கே சொல்லப்படுகிற ஸ்தலபுராணம்.

சையாத்திரி மலைப் பள்ளத்தாக்கில் பீமாஷங்கர் கோவில் அமைந்துள்ளது. மலையிலிருந்து நீண்ட படிக்கட்டுகள் வழி இறங்கிச் செல்லவேண்டும். பெரிய மண்டபம், சிறிய ஜோதிர்லிங்கம், கிட்டத்தட்ட சென்னப்பமலை ஜோதிர்லிங்கம் போலவே. அருகில் பீமா நதியில் ஆங்காங்கே சிறிது நீரோட்டம் தென்பட்டது. கோவில் வளாகத்தில் ஒரு தண்ணீர் தொட்டி. நாங்கள் மொண்டு குடித்தோம். அதுபோல நீரை நாங்கள் எங்கள் வாழ்நாளில் குடித்ததே இல்லை. அவ்வளவு சுவை. மறக்கமுடியாத சுவை. உண்மையான நீர் என்றால் இதுதானோ?

நாங்கள் சென்றபோது உச்சிக்கால பூஜைக்காக கோவில் நடை சார்த்தபட்டிருந்தது. மண்டபத்தில் அமர்ந்திருந்தோம். நேரம் ஆகிக்கொண்டிருந்தது. அன்று இரவே நாங்கள் நாசிக் திரும்பி ரயில் பிடிக்கவேண்டும். மழை வேறு அடிக்கடி பெய்துகொண்டிருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் காத்துகொண்டிருந்தோம். எதுவாயிருந்தாலும் தாத்தா பார்த்துக்கொள்வார் என்கிற தைரியம் இருந்தது. அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

நாங்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகில் ஒரு குடும்பத்தார் அமர்ந்து இருந்தனர். கணவன், மனைவி மற்றும் ஒரு ஐந்து வயது மகன். அவர்களும் எங்களை போல தரிசனத்துக்கு காத்திருந்தனர்.

சிவாச்சாரியார்கள் மந்திரம் முழங்க பூஜை செய்துக்கொண்டிருந்தனர். அப்போது அந்த சிறுவன் மெல்ல எழுந்து கோவில் கருவறையை நோக்கி நடக்க தொடங்கினான். அவனது பெற்றோர் இதை கவனித்தாலும் சிறுவனைத் தடுக்கவில்லை.

கருவறையை நெருங்கியவுடன் உள்ளே மந்திர முழக்கம் நின்றது. உள்ளே இருந்த சிவாச்சாரியார்கள் வெளியே வந்தனர். சிறுவன்

உள்ளே நுழைந்து ஓடிபோய் அந்த லிங்கத்தின் மேல் ஏறி நின்று எங்களைப்பார்த்து சிரித்தான். பிறகு லிங்கத்தைத் தொட்டு ஆசீர்வதிப்பதுபோல செய்து திரும்பி வந்துவிட்டான்.

சிவாச்சாரியார்கள் மீண்டும் உள்ளே சென்று பூஜையைத் தொடர்ந்தனர். பார்த்துக்கொண்டிருந்த எங்களுக்கு மகிழ்ச்சி கலந்த ஆச்சர்யம். எங்களுக்கு ஜோதிர்லிங்க தரிசனமும் கிடைத்தது, தாத்தா தான் செய்யவிருந்த தேவகாரியத்தை சூட்சுமத்தில் நடத்தியுள்ளார் என்பது எங்களுக்குப் புரிந்தது.

தாத்தாவின் நாசிக் விஜயத்துக்கு பிறகு, இது நாள் வரை ஒரு வருடம் கூட பருவ மழை இந்த பகுதியில் பொய்க்கவில்லை. கோதாவரி தொடர்ந்து பொங்கி வழிகிறது. சமீபத்தில் 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும், வெள்ளப்பெருக்கு புஷ்கர் விழாவும் ஆந்திர அரசு கொண்டாடியது.

யோசித்து பார்த்தால், இது என்ன சாமானிய காரியமா? ஒரு நதியை உயிர்பிக்க யாரால், எப்படி முடியும்? இதற்கு என்ன சக்தி அல்லது தொழிநுட்பம் இருக்கிறது? இது எப்படி சாத்தியம்? எந்த ஆர்பாட்டமும் இல்லாமல், விளம்பரமும் இல்லாமல், மிக எளிமையாக, செலவில்லாமல், ஒரு மிக பெரிய அற்புதத்தை, பல லட்சம் மக்களின் நன்மைக்காக, இந்த இயற்கை தத்துவத்தை நிலைநாட்டி சமநிலை படுத்த, தாத்தா எடுத்த இந்த முயற்சி வெற்றிகரமாக நிறைவேறியது.

இந்த வெற்றியின் பின் எங்கோ ஒரு மூலையில் நாமும் உதவியாக இருபதற்கு தாத்தா ஒரு அரிய வாய்ப்பு அளித்தார். இதற்கு என்ன புண்ணியம் செய்தோம் என்று தெரியாது. மனித குலத்தால் செய்ய முடியாத ஒரு பிரம்மாண்ட செயலை, இந்த புண்ணிய காரியத்தை ஒரு

ஜகத்குருவுடன் சென்று, செய்து முடிக்க துணையாக இருந்தோம் என்ற ஒரு சந்தோஷத்துடன், ஆத்ம திருப்தியோடு வீடு திரும்பினோம்.

எங்கள் குழுவில் வந்த வயதானவர்களும், இதய சிகிச்சையாளரும் இந்த பயணத்தின் அசதி தெரியாமல் தாங்கள் மலை ஏறிய அதிசயத்தை எண்ணி வியக்காத நாளே இல்லை என்று இன்னமும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

**காசிவிஸ்வநாதர் ஜோதிர்லிங்கம்-வாரனாசி எனும் காசி**

உலகின் இரண்டாவது ஜோதிர்லிங்க ஸ்தலமான காசிக்கு இதுவரை 10 முறை சென்றிருக்கிறோம். சென்னப்பமலைக்கும் காசிக்கும் ஒரு நெருக்கமான பந்தம் இருப்பதாகத் தெரிகிறது. 2001 இல் முதல் முறை இமயமலைக்கு சென்றபோது, ஹரித்வார் நகரத்தில், ஒரு அழகான பளிங்கு லிங்கம் ஒன்று வாங்கினோம். இது சென்னப்பமலையில் ஜோதிர்லிங்க உத்பவ நிகழ்வுக்கு முன்பு நடந்தது.

லிங்கத்தை கங்கையில் அபிஷேகம் செய்வித்து, பிறகு காசி விஸ்வநாதர் ஜோதிர்லிங்கத்துக்கு அறிமுகம் செய்விக்கவும் காசிக்கு கொண்டு சென்றோம். கங்கையில் அபிஷேகம் செய்வித்து அந்த லிங்கத்தை விஸ்வநாத் கோவிலுக்கு கொண்டு சென்று அங்குள்ள ஜோதிர்லிங்கத்துக்கு அருகில் வைத்து அபிஷேகம் செய்வித்தோம். ஹரித்வாரிலிருந்து காசி வரும் வரைக்கும் லேசாக இருந்த லிங்கம் சிறிது சிறிதாக கனக்கத்தொடங்கியது.

தாத்தா அந்த லிங்கத்தைத் தரையில் வைக்கக் கூடாது, அப்படி வைத்தால் அது அங்கேயே பிரதிஷ்டை ஆகிவிடும் என்று சொல்லிவிட்டபடியால், ஒருவர் மாற்றி இன்னொருவர் அந்த லிங்கத்தை கீழே வைக்காமல் சுமந்தே வந்தோம். ஆம்பூர் ரயில் நிலையம் வந்தடைந்ததும், கோலாகல வரவேற்பு காத்திருந்தது.

தாத்தாவின் பக்தர்களும் ஆம்பூர் மக்களும் வழி நெடுக லிங்கத்தை வணங்கி பூஜை செய்து வரவேற்றனர்.

லிங்கம் மேலும் கனக்கத்தொடங்கியது. மெல்ல சுமந்து வந்து சென்னப்பமலையில் சேர்த்தோம். தாத்தா இந்த லிங்கத்தை சென்னப்பமலையில் பிரதிஷ்டை செய்து, காசியை இங்கே கொணர்ந்து இணைத்துவிட்டார்.

சமீபத்தில் 2017 இல் காசி-அலகாபாத்-வைத்யநாத் யாத்திரை மேற்கொண்டோம். 54 வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சிறப்பு ஆருத்ரா தரிசனம்பெற தாத்தா அங்கே செல்லவேண்டும் என்று சொல்லியதால் அவரோடு ஒரு குழுவாக சென்றோம். சூரியனும் சந்திரனும் 54 வருடங்களுக்கு ஒருமுறை, காசி-அலகாபாத் திருத்தலங்களில் ஒரே நேர்கோட்டில் காட்சி தரும் அதிசயம்.

டிசம்பர் மாதம், வெடவெடக்கச்செய்யும் கடும் குளிர். அதிகாலையில், சூரியோதயத்துக்கு முன்னர் அலகாபாத் திரிவேணிசங்கம ஸ்தலத்துக்கு படகில் செல்லும்போது எதிர்பாரா வகையில் விசித்திர பறவைகளின் வரவேற்பு. நாங்கள் சென்ற படகைச் சுற்றிலும் பறவைகள் பல அணி வகுத்து வந்தன.

படகோட்டிகள் இந்த வகை பறவைகளை இது நாள் வரை இந்த குளிர் காலத்தில் இந்த பகுதியில் கண்டதே இல்லை என்று சொல்லி ஆச்சர்யப்பட்டனர். எங்களுடன் வந்திருந்த 'பாபாஜி' யார் என்று விசாரிக்கத்துவங்கினர். திரிவேணி சங்கம ஸ்தலத்தில் ஐஸ் போல இருந்த கங்கை நீரை எங்கள் குரு வெதுவெதுப்பாக்கி எங்களையெல்லாம் ஸ்நானம் செய்யவைத்தார். ஜென்ம சாப விமோசனம் எங்களுக்கு. அன்று மாலை காசி கங்கைக்கரையில் மீண்டும் சூரிய-சந்திர நேர்கோட்டு தரிசனம் செய்தவுடன் தாத்தா அங்கே ஒரு சிறப்பு யாகம் செய்தார். கண்கொள்ளாக்காட்சி. அருகில் நின்ற சுற்றுலா பயணிகள் பல பேர் தாத்தாவிடம் மெய்மறந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.

வாரண நதியும் ஆஸி நதியும் கங்கையில் சங்கமிக்கும் இடம் வாரணாசி. இங்கே உத்பவமாகி உள்ள ஜோதிர்லிங்கம் பற்றியும் தெரிந்து கொள்வது அவசியம். மூன்று கடவுளர்களில் யார் சிறந்தவர்கள்? என்கிற போட்டியில் உருவானதாக ஸ்தலபுராணம் கூறுகிறது.

ஆதியும் அந்தமும் இல்லா ஜோதியாக வானுயர நின்ற ஈசவரனின் உயரத்தை விஷ்ணுவும் பிரமனும் அளக்க வேண்டும் என்பது போட்டி. விஷ்ணு இது தன்னால் இயலாது என்று தோல்வியை ஒப்புக்கொண்டார் ஆனால் பிரம்மனோ, அளக்காமலேயே தான் ஒரு பக்கம் அளந்து விட்டதாக உண்மையை மறைத்துச் சொன்னாராம்.

கோபமடைந்த ஈஸ்வரன் வழிபாடுகளில் பிரம்மனுக்கு இனிமேல் இடமிருக்காது என்று சாபமிட்டடார். உண்மை பேசிய விஷ்ணுவுக்கு இந்த உலகம் அழியும் வரை வழிபாடு நடக்கும் என்றும் ஆஸி வழிங்கினார். விஸ்வத்தை (அகிலத்தை) தாண்டி ஜோதியாக நின்றாதால் இங்கே விஸ்வநாதராக அழைக்கபடுகிறார்.

ஆதி காலத்தில் இந்த பகுதியை கஸா என்கிற மலைஜாதியினர் ஆண்டு வந்ததால் இது பின்னர் காசி என்ற பெயர் பெற்றது.

18-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட காசி விஸ்வநாதர் கோயில் உத்திரப்பிரதேச மாநிலம் வாரனாசியில் இருக்கிறது. இந்தோரை ஆண்ட அஹில்யாபாய் ஹோல்கர் என்ற மஹாராணி இந்தக் கோயிலைக் கட்டியதாக சரித்திரம். கோயிலின் பிரதான சன்னதியிலுள்ள தங்கத் தகடுகள் மகாராஜா ரஞ்ஜித் சிங்கினால் வழங்கப்பட்டது.

இந்தக் கோயிலுள்ளே ஞானவியாபி கிணறு ஒன்று உள்ளது. விஸ்வநாதர் சன்னதியில் வைக்கப்பட்டுள்ள ஜோதிர்லிங்கமும் இந்தக் கிணற்றிலிருந்துதான் உத்பவமாகியது என்று சில புராணங்கள் சொல்லுகின்றன. தாமரை புஷ்பம், மந்தாரை புஷ்பம் ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்ட ஜோதிர்லிங்கத்திற்கு

தினந்தோறும் பாலாபிஷேகம் நடைபெற்று வருகிறது. காசியில் உயிர் துறப்பவர்களுக்கு முக்தி தரும் ஸ்தலமாக போற்றபடுகிறது.

**வைத்யநாத் ஜோதிர்லிங்கம்**

2017 ஆம் ஆண்டு காசி சென்றபொது, காசியிலிருந்து சுமார் 475 கிமீ தூரத்தில் உள்ள இன்னொரு ஜோதிர்லிங்க ஸ்தலமான தியோகர் நகரத்தில் உள்ள வைத்யநாத் தரிசனம் பெற மறுநாள் புறப்பட்டோம்.

அந்த ஸ்தலபுராணம்படி, சிவபக்தியுடைய இராவணன் ஜோதிர்லிங்கங்களுக்குள் ஒரு லிங்கத்தை இலங்கைக்கு எடுத்துச் செல்ல விரும்பிதித தவம் செய்தான். அவனுடைய ஆசையை நிறைவேற்றும் வகையில் பரமேஸ்வரன் நேரில் காட்சி கொடுத்து, அவனிடம் சக்தி வாய்ந்த லிங்கத்தைக் கொடுத்தனுப்பினார்.

அரக்கர்கள் நிறைந்த இலங்கைக்கு இராவணன் லிங்கம் எடுத்துச் செல்வதை தேவர்களுடைய மனம் ஒப்புக் கொள்ளவில்லை. இராவணனுக்கு தடங்கல்கள் உருவாக்க முடிவெடுத்தார்கள். திடீரென்று கங்கா தேவி இராவணன் வயிற்றுக்குள் புகுந்து கொண்டாள். தண்ணீர் நிரம்பிய வயிற்றின் பாரத்தை குறைக்க இராவணன் கையிலிருந்த லிங்கத்தை பிராமணனிடம் கொடுத்தான். இராவணன் அந்த பிராமணனை மஹாவிஷ்ணு என்று அறிந்து கொள்ளவில்லை.

இராவணன் திரும்புவதற்குள் மஹாவிஷ்ணு லிங்கத்தை பூமியில் ஆழமாக புதைத்து விட்டு மறைந்தார். மண்ணில் புதைந்த லிங்கம் ஜோதிர்லிங்கமாக உருவெடுத்தது. லிங்கத்தை எடுக்க முடியாததால் சலிப்படைந்த இராவணன் இலங்கையிலிருந்து இந்த இடத்திற்கு வந்து பூஜை செய்தான் என்று புராணங்கள் சொல்லுகின்றன. லிங்கம்

உத்பவித்த இந்த ஸ்தலத்தை வைத்யநாத் ஜோதிர்லிங்கம் என்ற பெயரால் அழைக்கிறார்கள்.

இந்தக் கோயிலைச் சுற்றி 22 கோயில்கள் இடம் பெற்றுள்ளன. சிவகங்கை குளமும் இந்தக் கோயிலில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் குளத்தில் நீராடினால் தீராத எந்த வியாதியும் மறைந்து விடும் என்ற நம்பிக்கையோடு பக்தர்கள் இங்கு அதிகமாக வந்து செல்லுகிறார்கள்.

**மஹா காலேஷ்வர் ஜோதிர்லிங்கம் கோயில் -உஜ்ஜயினி**

2014 ஆம் ஆண்டு உஜ்ஜைன் நகரத்தில் உள்ள மஹாகாலேஸ்வர் மற்றும் அதன் அருகில் உள்ள ஓம்காரேஷ்வர் ஜோதிர்லிங்கள் தரிசனம் செய்ய, தாத்தாவுடன் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள ஸ்தலபுராணம் படி, முன்னொரு காலத்தில் துஷானா என்ற அரக்கன் அவந்தி நாட்டு மக்களை கொடுமைப்படுத்தி வந்தான். அவனுடைய கொடுமையைக் கண்டு மிரண்ட அந்நாட்டு மக்கள் இங்கிருந்து வேறு நாட்டுக்கு செல்ல ஆயத்தமாகினர். ரிஷிகளும், தேவர்களும் ஈஸ்வரனிடம் முறையிட்டனர். அரக்கனை அழிக்க பூமியை பிளந்து கொண்டு பரமேஸ்வரன் பிரமாண்ட ரூபமெடுத்து, அரக்கனை அழித்து சாம்பலாக்கினார். துஷானாவைக் கொன்று அவந்தி நாட்டு மக்களை கொடுமையிலிருந்து விடுவித்தார். இந்த ருத்ர ரூபத்தைத் தணிக்க பிரம்மனும், விஷ்ணுவும் மற்ற தேவர்களும் ஓடிவந்து சமாதானப் படுத்தினர்.

அதன்பிறகு மக்கள் பரமேஸ்வரனை அங்கேயே நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்ட காரணத்தால் மஹாகால ஜோதிர்லிங்கமாக உருவெடுத்தார் என்கிறது ஸ்தலபுராணம்.

இந்த அவந்தி நகர் என்று அழைக்கப்பட்ட உஜ்ஜைன் ஷேத்திரத்தில்தான் முதல் முறையாக வேத குருகுல முறை தொடங்கியது இந்த இடத்துக்கு மேலும் சிறப்பு. மௌரிய அரசர்கள் காலத்தில் சமஸ்க்ரித மொழியை பிரபலமாக்கியதும் இந்த இடம்தான். இந்த வம்சத்தை சேர்ந்த விக்ரமாதித்யன் உஜ்ஜைன் நகரத்தை தன் சாம்ராஜ்யத்தின் தலைநகரமாக அறிவித்தான். ஆண்டுகளை வரிசைபடுத்தும் பஞ்சாங்க முறையும் இங்கேதான் உருவானது.

பெண்கள் தங்கள் வீடுகளுக்கு எதிரில் குங்குமம் கலந்த நீரை தெளித்து கோலம் போதும் வழக்கத்தை இந்த காலத்தில் தான் அறிமுகம் செய்ய பட்டதாக சரித்திர ஆய்வுகள் சொல்கின்றன. மத்தியப் பிரதேசத்திலுள்ள உஜ்ஜைன் மாநகரத்தில் இந்த மஹாகாலேஷ்வர் ஜோதிர்லிங்கம் கோயில் இருக்கிறது. இந்தக் கோயில் ஐந்து பிரிவுகளைக் கொண்டது. மாபெரும் சக்தியைக் கொண்ட ஜோதிர்லிங்கமாக தோன்றிய மஹாகாலலிங்கம் கோயிலின் அடித்தளத்தில் உள்ளது. இதற்கு மேல்தளத்தில் விநாயகர், பார்வதி, கார்த்திகேயன் சன்னதிகள் இடம் பெற்றுள்ளன. மூன்றாவது தளத்தில் நாக சந்திரேஷ்வரர் சன்னதி உள்ளது. இந்தச் சன்னதியின் கதவுகள் நாகபஞ்சமியன்று திறந்து வைக்கப் படுகின்றன.

### ஓம்காரேஷ்வர் ஜோதிர்லிங்கம் கோயில் - ஓம்ஹாரம்

ஒரு காலத்தில் அரக்கர்கள் தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், மக்களுக்கும் தொல்லை தர ஆரம்பித்தனர். பல லோகங்களைக் கைப்பற்றினர். இந்த தொல்லை தாங்காமல் தேவர்களும் ரிஷிகளும் ஈஸ்வரனிடம் முறை இட்டனர். இதை ஏற்றுக்கொண்ட ஈஸ்வரன் நர்மதை ஆற்றின் கரையில் அமரேஸ்வர் என்ற பெயரிளிலும், ஓம்காரேஷ்வர் என்று இன்னொரு பெயரிலும் இரண்டு ஜோதி வடிவங்கங்காக தோன்றி தேவர்களுக்கும் ரிஷ்களுக்கும் ஆத்ம பலத்தை வழங்கினார்.

அருள் பெற்ற தேவர்கள் அசுரர்களை வதம் செய்து தர்மத்தை நிலை நாட்டினர். அடிமைப்பட்ட லோகங்களையும் மீட்டனர். அரக்கர்களுக்கு பயந்து நர்மதை ஆற்றின் அருகில் ஈஸ்வரனோடு சேர்ந்து பிரஹ்மனும் விஷ்ணுவும் குடிகொண்டதால் இங்கே பிரம்மபுரி, விஷ்ணுபுரி மற்றும் ருத்ரபுரி உருவாகியது.

இந்த ஸ்தலம் திரிபுரி க்ஷேத்ரம் என்றும் அழைக்கபடுகிறது. உலகில் உள்ள அனைத்து உயிர்கள் உருவாக காரணமாயிருந்த ஓங்காரம் இங்கே உருவானதாகவும் சில புராணங்கள் சொல்கின்றன. ஒன்றல்ல, இரண்டு ஜோதிர்லிங்கங்கள் இங்கே மேலும் சிறப்பு.

விந்திய மலைதொடரில் உருவாகும் நர்மதை நதி ரேவா, (சங்கரன் குடியிருப்பதால்)சங்கரி என்றும் அழைக்கபடுகிறது. நர்மதை நதியில் இந்தூர் நகரத்துக்கு அருகாமையில் உள்ள மண்டதா தீவில்தான் இந்தக் கோயில் அமைந்துள்ளது.

ஓம் என்ற வடிவத்திலுள்ள இந்தத் தீவின் எந்த பக்கமும் ஓங்காரம் ரீங்காரிக்கிறது. இதனால் இந்த ஜோதிர்லிங்கத்துக்கு ஓங்காரீஸ்வர் என்ற பெயரும் உண்டு. ஜோதிர்லிங்கத்துக்கு அடியில் நர்மதையின் நீரோட்டம் ஊற்று வடிவில் எப்போதும் காணப்படுவது இங்கே விஸேஷம். ஆத்ம பலம் தரும் ஜோதிர்லிங்கங்கள் இவை.

இந்தக் கோவில்களில் அர்ஜுனன், பீமனின் மூர்த்திகளும் இடம் பெற்றுள்ளன. பத்தாவது நூற்றாண்டில் கட்டப்பட்ட சித்தநாத் கோயிலும் இந்தத் தீவில் இடம் பெற்றிருக்கிறது. நவராத்திரி, கார்த்திகை, பௌர்ணமி ஆகிய பண்டிகைகள் இங்கு கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த கோவிலையும் கஜினி முகமது அழித்ததாக சரித்திரம் பேசுகிறது.

ஓரளவுக்கு நீர் வற்றி வறண்டு காணப்பட்ட நர்மதா நதிக்கும், இந்த இரண்டு ஜோதிர்லிங்கங்களுக்கு தான் புத்துயிர் அளிக்கவும்தான் இந்த யாத்திரை மேற்கொண்டதாக தாத்தா கூறினார்.

கீழே குறிப்பிட்டுள்ள இரண்டு ஜோதிர்லிங்க ஸ்தலங்களுக்கு இன்னும் விஜயம் செய்யவில்லை.

**நாகேஷ்வர்ஜோதிர்லிங்கம்**

த்வாரகாபெட், த்வாரகா ஆகிய இரண்டு தீவுகளுக்கிடையே நாகேஷ்வரர் ஜோதிர்லிங்கம் கோயில் உள்ளது. சிவபக்தியுடைய சுப்ரியா மற்றும் அவளுடைய தோழிகளையும் தாருகா என்ற அரக்கன் திடீரென்று தாக்கி அவர்களைக் கடத்திச் சென்று தாருகா வனத்தின் சிறையில் வைத்துக் கொடுமை படுத்தினான். பரமேஸ்வரன் ஜோதிர்லிங்கமாக தோன்றி அந்த அரக்கன் தாருகாவை அழித்தார். அன்றிலிருந்து மக்கள் சிவபெருமானை நாகேஷ்வர ஜோதிர்லிங்கமாக பூஜித்து வருகிறார்கள்.

கோயிலின் கோபுரம் கிழக்கு திசையை நோக்கியிருந்தாலும் பிரதான சன்னதி தென்திசையை பார்த்திருப்பது இங்கு சேஷமானது. இதற்கு ஒரு புராணகக்கதையும் சொல்லப்படுகிறது.

சிவ பக்தியுடைய நாமதேவர் என்கிற மஹான் சிவபெருமானின் புகழை அந்தக் கோயிலில் தினமும் பாடி வந்தார். அவருக்கு வேண்டாத சிலர் நாமதேவரை கடவுளில்லாத இடத்தில் அமர்ந்து பாடச் சொன்னார்கள். நாமதேவர் கடவுளில்லாத இடத்தை காட்டும்படி மக்களிடம் கேட்டார். எரிச்சலடைந்த துஷ்டர்கள் நாமதேவரை தென்திசையில் தூக்கிச் சென்று அமர்த்தினார்கள். திடீரென்று கிழக்கு திசையை நோக்கியிருந்த நாகேஷ்வர ஜோதிர்லிங்கம் அன்றுமுதல் தென்திசையை நோக்கித் திரும்பியது என்று சொல்லப்படுகிறது.

**க்ருஷ்னேஷ்வர் ஜோதிர்லிங்கம்**

மகாராஷ்டிராவிலுள்ள ஔரங்காபாத் என்ற இடத்தில் க்ருஷ்னேஷ்வர் ஜோதிர்லிங்கம் கோயில் அமைந்துள்ளது. தேவகிரி

மலைத்தொடரில் சுதர்மா-சுதேஹா என்ற பிராமணத் தம்பதியர்கள் வசித்து வந்தார்கள். வேதங்களை அறிந்த சுதர்மா தம்பதியர்களுக்கு குழந்தை பாக்கியமில்லை. இதனால் வேதனையடைந்த சுதேஹா, தன் சகோதரி க்ருஷ்னாவை சுதர்மாவுக்கு மணம் செய்து கொடுத்தார்.

சிவபக்தியுடைய க்ருஷ்னா,101லிங்கங்களை உருவாக்கி பூஜைகள் செய்த பிறகு ஏல கங்கா நதியில் விசர்ஜனம் செய்தாள். அவளுடைய பக்தியை கண்டு மெச்சிய சிவபெருமான் அவளுக்கு ஆண் குழந்தையை வரமாகக் கொடுத்தார். பொறமை கொண்ட சுதேஹா அவளுடைய ஆண் குழந்தையைக் கொன்று ஏலகங்கா நதியில் தூக்கி வீசினாள். அனைத்தையும் அறிந்த க்ருஷ்னா சிவபெருமானால் கொடுக்கப்பட்ட குழந்தை அவரால் ரட்சிக்கபடுவான் என்று மன உறுதியோடு சிவலிங்க பூஜையைத் தொடங்கினாள்.

லிங்கங்களை நதியில் விசர்ஜனம் செய்யும் போது அவளுடைய ஆண் குழந்தை திரும்பி வருவதைக் கண்டாள். பரமேஸ்வரனும் அவள் முன் காட்சி தந்தார். தன் சகோதரியை மன்னிக்குமாறு ஐயனிடம் வேண்டிக் கொண்டாள். தன்னுடைய பெயரில் சிவபெருமான் ஜோதிர்லிங்கமாக உருவெடுக்க வேண்டுமென்று அவளுடைய ஆசையையும் தெரிவித்தாள். அவளுடைய ஆசையை நிறைவேற்றும் வகையில் சிவபெருமான் அங்கு க்ருஷ்னேஷ்வர் ஜோதிர்லிங்கமாக காட்சி கொடுக்கிறார். இந்தக் கோவிலில் மதிய வேளையில் பஜனைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## பாகம் 3

## புத்துயிர் பெற்ற எய்தனூர் கோவில்

சென்னப்பமலையில் ஜோதிர்லிங்க உத்பவத்துக்கு முன், நாங்கள் பார்த்த அதிசய நிகழ்வு, ஒரு பண்டைய கோவில் புத்துயிர் பெற்ற நிகழ்வு. 2001 ஆம் ஆண்டு திடீரென்று ஒரு நாள் தாத்தா ‘வேதபுரி’ என்ற ஸ்தலத்துக்கு செல்லவேண்டும் என்றார். தனக்கு அங்கே செல்ல அழைப்பு வந்திருப்பதாகவும் உடனடியாக செல்லவேண்டும் என்றும் விளக்கினார்.

அந்த இடம் எங்குள்ளது என்றெல்லாம் எங்களுக்கு தெரியாது. போகவேண்டும் என்றார், உடனே தேடத் துவங்கினோம். ஆனால் யாருக்கும் இந்த பெயரோ அல்லது இடமோ தெரியவில்லை. அப்போது இண்டெர்னெட் வசதியும் இப்போது இருப்பது போல் இல்லை. தேடிக் கிடைக்காததால் சோர்ந்து போனோம். எங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு தாத்தாவிடமே கேட்டோம். ‘முயற்சி செய், நாளை விடை கிடைக்கும்’ என்றார்.

அடுத்த நாள் காலை, இந்து ஆங்கில நாளேடை புரட்டிப் பார்த்துக்கொண்டு வந்தபோது, ஒரு மிக சிறிய செய்தி என்னைப் படிக்கத் தூண்டியது. கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் பகுதியை ஒட்டிய பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் அருகில் உள்ள எய்தனூர் என்ற கிராமத்தில் உள்ள ஒரு கோவில் சுற்றுப்புர வளாகத்தை சுத்தம் செய்தார்கள் என்பதுதான் செய்தி. மாணவர்கள் கோவில் பிரகாரத்துக்குள் செல்ல முடியவில்லை. ஏனென்றால் பல

ஆண்டுகளுக்கும் மேலாக அந்த பழமையான கோவில் பூட்டியே கிடக்கிறதாம்.

பொறி தட்டியது. ஒரு வேளை, இதுதான் தாத்தா குறிப்பிட்ட 'வேதபுரி'யா? இந்த கோவிலில்தான் ஏதாவது விசேஷமா?

அந்த நாளேடை எடுத்துக்கொண்டு தாத்தாவைப் பார்க்க ஓடினேன். என்னைப்பார்த்ததும் 'தகவல் கிடைத்திருக்குமே?' என்று சொல்லி புன்னகைத்தார். 'அந்த ஸ்தலத்துக்குதான் செல்லவேண்டும். ஏற்பாடு செய்', என்றார். உடனே அந்த செய்தியை பிரசுரித்த செய்தியாளர் திரு பாலகணேசன் அவர்களை தொடர்புகொண்டு, அந்த கோவில் பற்றி மேலும் விசாரித்தேன். அவர் அந்தக்கோவில் அதிகாரி திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களை அறிமுகம் செய்தார்.

அவரிடம் எங்கள் குரு அந்தக்கோவிலுக்கு விஜயம் வரவிருப்பதை சொல்லி அதற்கான ஏற்பாடுகளை செய்யக்கேட்டுக்கொண்டோம். 'கோவில் பலஆண்டுகளாக பூட்டியே கிடப்பதாகவும், உள்ளே செல்வது கடினம்' என்று அவரது கருத்தை சொன்னார். ஆனாலும் கிராமத்தினரிடம் சொல்லி அவர்களைக் கூட்டி குருவுக்கு வரவேற்பு அளிப்பதாகவும் சொன்னார்.

டிசம்பர் மாதம் 23ஆம் நாள் ஒரு பத்து பேர் கொண்ட குழு தாத்தாவுடன் அந்த கிராமத்தை அடைந்தோம். ஊரே திரண்டு வந்து வரவேற்பு அளித்ததை மறக்கமுடியாது. இந்த குரு யார் என்றோ அவர் என்ன செய்யப்போகிறார் என்றோ தெரியாத போதிலும், பக்திசிரத்தையுடன் வரவேற்றனர். பள்ளிக்குழந்தைகள் இந்த கோவில் சுற்றுப்ரகாரத்தை ஓராளவு சுத்தம் செய்திருந்தது தெரிந்தது.

ஊர் பெரியவர் ஒருவர், 'இந்த கோவில் திறந்து அந்த ஊரில் யாரும் இதுவரை பார்த்ததே இல்லை. பல தலைமுறைகளாக இது பூட்டியே

கிடக்கிறது' என்று சொல்லி ஒரு நீளமான சாவியை கொடுத்தார். அந்த காலத்து பெரிய பூட்டு. நெடு நாளாக திறக்கப்படாததால் துரு ஏறியிருந்தது. எங்களில் சிலர் திறக்க முயற்சித்தோம், முடியவில்லை. அந்த ஊர் மக்களும் முயற்சித்தார்கள். சிலர் அந்த பூட்டை உடைக்கலாம் என்றனர். பெரிய சுத்தியலை கொண்டு தட்டியும் பார்த்தனர். பூட்டு அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தபோது, தாத்தா தன் கைகளால் அந்த பூட்டை மெல்ல வருடி, ஒரு தட்டு தட்டினாரே பாருங்கள், அந்தப் பூட்டு திறந்து கொண்டது. பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த கோவிலின் வெளிவாயில் திறக்கப்பட்டது. பெரிய கதவு பயங்கர சத்தத்துடன் திறந்துகொண்டது.

அந்த ஊர் மக்களுக்கோ ஆச்சர்யம் தாங்கவில்லை. கைத்தட்டி ஆர்ப்பரித்தனர். ஆனாலும் பிரகாரத்துக்குள் நுழையத் தயங்கினர். தாத்தா அந்த வாயில் அருகில் சிறிது நேரம் தவம் இருந்து, சூட்சுமத்தில் சில பரிகாரங்களை செய்து, முதலில் உள்ளே நுழைந்தார். நாங்களும் அவர் பின்னே சென்றோம். இதுவரை தயங்கி நின்ற கிராம மக்களும் தைரியம் பெற்று எங்களைத் தொடர்ந்து வந்தனர். பல ஆண்டுகளுக்குப்பின் முதல் முறையாக அந்த கோவில் வளாகத்துள் ஆள் நடமாட்டம்!

இதுநாள் வரை ஆள் நடமாட்டமே காணாத உள்பிரகாரம் முள்ளும் புதர்களுமாக மண்டிக் கிடந்தது. அந்த இடமே விகாரமாக காட்சி அளித்தது. சுவர்களும் கோபுரங்களும் பாழடைந்து, களையிழந்து காணப்பட்டது. அங்கிருந்த வெளவால்களும் பறவைகளும் படபடத்துப் பறந்து சென்றன.

ஊர் மக்கள் சிலர் தாங்கள் கொண்டு வந்திருந்த கத்தி, கடப்பாறை கொண்டு அந்த இடத்தை சுத்தம் செய்ய ஆரம்பித்தனர். உள்ளே

பெரிய மண்டபம். பெரிய கருவறை. சுமார் நான்கு அடி உயர்த்தில் ஒரு அழகான லிங்கம். அடுத்த ஐந்து மணி நேரத்தில் ஊரே கூடி, அந்த கோவில் வளாகத்தை ஓரளவுக்கு நேர்த்தியாக சுத்தம் செய்தனர்.

எதிரில் இருந்த மண்டபத்தில் அமர்ந்து தாத்தா ஒரு யாகம் செய்தார். பிறகு கருவறைக்குள் சென்று அந்த லிங்கத்துக்கு சூட்சுமத்தில் புத்துயிர் கொடுத்தார். அவரே புஷ்பங்கள் கொண்டு பூஜையும் செய்தார். கண்கொள்ளாக் காட்சி அது. பிறகு அந்த ஊர் மக்களையும், கோவில் அதிகாரிகளையும் அழைத்து, 48 நாட்கள் தொடர்ந்து பூஜை செய்யுமாறும், வெகு விரைவில் இந்த கோவில் புனரமைக்கபட்டு, கும்பாபிஷேக ஆராதனைகள் நடக்கும் என்றும் ஆசீர்வதித்தார்.

இந்தக் கோவில் 1442 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகவும், செய்வக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஸ்தலமாகும் என்று தாத்தா தன் ஞானத்ருஷ்டியால் உணர்ந்து கூறினார். இந்த கோவிலைக் கட்டிய பல்லவ மன்னன் வீரபத்மநாபன் இந்த கோவிலைச் சுற்றியிருந்த ஒன்பது குளங்களில் ஒன்றில் தன் உயிரை மாய்த்துக்கொண்டதாகவும், அந்த சாபத்தால் இந்தக் கோவில் 400 ஆண்டுகளாக கவனிக்கப்படாமலும் 87 வருடங்களுக்கு மேலாகப் பூட்டிக் கிடப்பதாகவும் கூறினார்.

தான் இங்கே விஜயம் செய்ததே இந்த அரசனுக்கு சாப விமோசனம் அளிக்கவும், இந்த கோவிலுக்கும் புத்துயிர் அளித்து இந்த வளாகத்தை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரவும்தான் என்று எங்களுக்கு விளக்கம் அளித்தார்.

இந்தப்பயணத்தின் பின்னனியில் இவ்வளவு பெரிய அதிசயங்களும், முக்கியத்துவங்களும் இருப்பது புரியத் துவங்கியது. ஒரு பாழடைந்த கோவிலை உயிர்பிக்கும் அதிசயத்தை நேரில் காணும் பாக்கியம் எங்களுக்கு முதலில் கிடைத்த ஸ்தலம் எய்தனுர்தான். யோசித்துப்

பார்த்தால், ஒரு காலத்தில் வேதபுரியாக இருந்த இந்த ஸ்தலம் ஆதிபுரியாக மாறி, இந்தக் கோவிலில் குடிகொண்டிருக்கும் மூலவர் பத்மதளநாயகி உடனுறை ஆதிபுரீஸ்வரனாகவும் இங்கே ஆன்மிக கொலோச்சி வருகின்றனர் என்பதும் விளங்கியது. ஒரு மஹாசித்தனால் எப்படி ஒரு கோவிலுக்குப் புத்துயிர் கொடுக்கமுடியும் என்பதற்கான நேரடி விளக்கம் அளிக்கவே இந்த ஆன்மீகப் பயணம் என்பதையும் நாங்கள் புரிந்துகொண்டோம்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து பல கோவில்களுக்கும், நதிகளுக்கும் தாத்தா புத்துயிர் அளிக்கும் தெய்வீக நிகழ்வுகளை நேரில் காணும் பாக்கியம் எங்களுக்கு மேலும் பல முறை கிட்டியது. ஆனாலும் எய்தனூர் பயணம் ஒரு மறக்கமுடியாத அனுபவம்.

தாத்தா வாக்குபடி, அடுத்த இரண்டு ஆண்டுகளில் மாநில அரசு சுமார் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி அந்தக் கோவிலை புனரமைத்தது. பின். இந்தத் திருப்பணி 2003 ஆம் ஆண்டு தொடங்கி 2009 ஆம் ஆண்டு முடிவுற்று அப்போதிருந்த மாநில இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு பெரியகருப்பன் தலைமையில் கும்பாபிஷேகமும் நடந்தேறியது.

பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு மஹாசித்தர் கையால் புத்துயிர் பெற்ற சரித்திரத்தை தாங்கி நின்று எய்தனூர் திருக்கோவில் இன்றும் தாத்தாவின் புகழ் பாடி, நன்றியோடு பக்தர்களின் நம்பிக்கைச் சின்னமாக விளங்கிவருகிறது.

### பன்னிரண்டு ஆண்டுகளுக்கு பின் மீண்டும் தலகாவேரி யாத்திரை

ஐப்பசி மாதம் ‘துலா மாதம்’ என்று அழைக்கபடுகிறது. இந்த மாதத்தில்தான் ‘ஆகாச கங்கை’ என்று அழைக்கப்படும் ‘காவேரி’ நதி விந்திய மலை தொடரின் ஒரு முனையான தலகவேரியில் உருவானதாக தாத்தா குறிப்பிட்டார்.

அகஸ்திய முனி இந்த நதியை உருவாக்கி அங்கே ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்திருந்தாலும் சுமார் 1400 வருடங்களுக்கு முன்னால்தான் அந்த லிங்கத்துக்கு கோவில் கட்டப்பட்டுள்ளதாகவும் தாத்தா சொல்கிறார். பல யுகங்களாக வாழ்ந்து வருபவர் அல்லவா அவர் சொல்வது மிக சரியாகத்தான் இருக்கும்.

துலா மாதம் என்ற பெயர் ஏன் வந்தது? அதற்கும் தாத்தா விளக்கம் அளிக்கிறார். ஒரு காலத்தில் இந்த மாதத்தில்தான் வட காண்டத்தில் இருக்கும் கைலாசத்தை நோக்கி அனைத்து தேவர்களும், கந்தர்வர்களும், சென்றுவிட்டதால், தென் காண்டம் அந்த பளு தாங்காமல் உயர்ந்து விட்டதாகவும், இதை சரி செய்ய அகஸ்திய முனிவர் அனுப்பப் பட்டார். அவர் தலகாவேரியில் நின்றுகொண்டுதான் இந்த ஏற்றத் தாழ்வுகளை சரி செய்தார். தன் கையில் கொண்டுவந்த ஆகாசகங்கையை இங்கே உத்பவித்து அதை காவேரி என்று பெயரும் சூட்டினார். இது கலியுகம் தோன்றுவதற்கு முன்னால் நடந்த நிகழ்வு. ஒரு தராசு (துலாம்) தட்டில் இரு புறமும் சமன் செய்வது போன்று இந்த நிகழ்வு நடந்ததால், இந்த மாதம் துலா மாதம் என்று அழைக்கபடுகிறது.

கர்நாடகாவில் உள்ள குடகு மாவட்டத்தில், விந்திய மலைத்தொடரின் ஒரு அங்கமாக அமைந்துள்ள அழகான குடகு மலை சாரலின் மகுடமாக அமைந்துள்ளது தலகாவேரி. கடல் மட்டத்தை விட சுமார் 3000 அடி உயரம் இருப்பது இந்த திருத்தலம். கிட்டத்தட்ட 800 கிலோமீட்டர் நீளத்துக்குப் பாயும் காவிரி, தன் ஏழு கிளை நதிகளுடன் சுமார் 81 ஆயிரத்து 155 சதுர கிலோமீட்டர் ஆற்றுப்படுகையைக் கொண்டது. தமிழகத்தில் 43 ஆயிரத்து 856 சதுர கிலோமீட்டர் ஆற்றுப்படுகையைக் கொண்டிருக்கிறது. கர்நாடகத்தில் 34 ஆயிரத்து 273 சதுர கிலோமீட்டர், கேரளத்தில் 2 ஆயிரத்து 866 சதுர

கிலோமீட்டர் புதுச்சேரியில் 160 சதுர கிலோமீட்டர் ஆற்றுப்படுகையைக் காவிரி கொண்டிருக்கிறது. கிட்டதட்ட 50 ஆயிரம் ஹெக்டர் நிலங்களில் விவசாயம் செய்ய ஆதாரமாக உள்ளது. பல கோடி மக்கள் இந்த நதியை நம்பி வாழ்ந்து வருகிறார்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காவேரி வறண்டு போனது நம் அனைவருக்கும் தெரியும். மழை பொய்த்தது. வறட்சி தாண்டவமாடியது. இதனால் இங்குள்ள மாநிலங்களுக்கு இடையே நதி பங்கீட்டு பிரச்சனை தீவிரமடைந்தது. மாநில மக்களிடையே அமைதி குலைந்தது. இதை சரி செய்ய எங்கள் குரு தாத்தா முடிவு செய்து, 2006 ஆம் ஆண்டு தலகாவேரிக்கு எங்களையும் அழைத்து சென்றார். அபாரமான ஒரு அனுபவம் அது. ஒரு நதியை உயிர்ப்பிப்பது என்பது சாமானிய விஷயமா என்ன?

2006 ஆம் ஆண்டு தை மாதம் ‘போகி’ அன்று தாத்தாவுடன் நாங்கள் ஒரு குழுவாக சென்றோம். அன்று மகர பௌர்ணமி. அங்கே என்ன நடக்கபோகிறது, தாத்தா என்ன செய்யப்போகிறார் என்று எங்களில் யாருக்கும் அப்போது தெரிய வாய்ப்பில்லை. ஆர்வமுடன் சென்றோம். சூரியன் மறைந்த பிறகு இந்த மலையில் யாரும் தங்க அனுமதிக்கப் படுவதில்லை. சித்தர்களும் தேவ கந்தர்களும் இந்த பகுதியில் இரவில் நடமாடுவதாக ஒரு நம்பிக்கை.

தலகாவேரி மலை மேல், கோவில் தவிர ஒரு சின்ன ஆசிரமம் இருக்கிறது. பல ஆண்டுகளாக பெங்களூருவில் உள்ள ஒரு மடம் இதை நிர்வகிக்கிறது. இந்த ஆசிரமத்தை ஒரு பிரம்மச்சாரி தனியாகத்தான் நிர்வகிக்கிறார். அவர் மாத்திரம் அங்கே இரவிலும் தங்குகிறார். அந்த ஆசிரமத்தில் முதலில் எங்களை தங்க அனுமதிக்க தயக்கம் காட்டினாலும் பிறகு, தாத்தவை பார்த்ததும் அவர் மனம் மாறியது. அனுமதி கிடைத்தது.

தலகாவேரி மலையில் அகஸ்தியர் நிர்மாணம் செய்த ஒரு சிறிய கோவிலும் உள்ளது. அகஸ்தீஸ்வர் கோவில் என்று அழைக்கபடுகிறது. ஒரு சிறிய லிங்கம்தான் மூலவர். கோவிலுக்கு கீழே ஒரு சிறிய 'ப்ரம்ம குண்டம்'. அதற்கு அருகில் ஒரு பெரிய குளம். இந்த கோவில் குளம் அருகாமையில் 'ப்ரம்மகிரி' என்று அழைக்கபடும் ஒரு குட்டி மலை.

இந்த மலையில் அமர்ந்து தவம் புரிந்து காவேரியை அகஸ்தியமுனி உருவாக்கியதாக ஸ்தலபுராணங்கள் கூறுகின்றன. பிரம்மகிரிக்கு அடியில் உருவாகும் காவேரி, ப்ரம்ம குண்டத்தில் ஊற்றெடுத்து, பீறிட்டு எழுந்து அருகில் உள்ள குளத்தில் வழிந்து இந்த அற்புத மலையில் மறைந்து போகிறது. மலை அடிவாரத்தில் பல இடங்களில் வழிந்து பல கிளை ஆறுகளாக உருவெடுத்து, 'பாகமண்டல' என்ற இடத்தில் காவேரியாக பிரவாகிக்கிறது.

நாங்கள் சென்ற போகி அன்று இரவு, உலகமே நித்திரையில் மூழ்கியிருந்த சமயம். லோக நன்மைக்காகவும், இயற்கையை சீர் செய்யவும் தாத்தா எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் புறப்பட்டுவிட்டார். ஆசிரமத்தில் தங்கிய எங்களை, அந்த கும்மிருட்டில் அழைத்துக்கொண்டு அகஸ்தீஸ்வரர் கோவிலுக்கு அழைத்துசென்றார். நடுங்கும் குளிரில் நாங்கள் அனைவரும் அவர் பின்னால் சென்றோம். நிசப்தமான இரவில் மெய்சிலிர்க்கவைக்கும் ஓங்கார ரீங்காரம்.

குளத்தில் குளிக்கத் தயங்கி நின்றபோது, எங்களை தொட்டு ஆசீர்வாதம் செய்ததும் எங்கள் குளிர் மறைந்து விட்டது. குளத்தில் தண்ணீர் வெதுவெதுப்பாகப் பட்டது. பக்தியுடன் குளித்து விட்டு தாத்தா யாகம் நடத்துவதற்கு உதவி செய்தோம். சரியான முகூர்த்த நேரத்தில் தாத்தா ஒரு பிரம்மாண்ட யாகத்தை நடத்தினார். சுமார் ஒரு

மணி நேரம் தவமிருந்து பிறகு கலச தீர்த்தத்தை பிரம்ம குண்டத்தில் அபிஷேகம் செய்தார். கண் கொள்ளாக் காட்சி. மறக்க முடியாதது.

மறுநாள் காலை மீண்டும் எங்களை கோவிலுக்கு அழைத்துச் சென்றார். என்ன அதிசயம்! வறண்டு இருந்த குளம் பொங்கி வழிந்தது. பிரம்ம குண்டத்தில் நீர் பொங்குவதைக் காணமுடிந்தது. பழைய ஊற்றுக் கால்கள் உயிர் பெற்று விட்டன. இந்த குண்டத்தில் பூமிக்கடியில் தடை பட்டிருந்த ஊற்றுக்கால் மீண்டும் பழைய உத்வேகம் பெற்றது.

எங்களுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. பிறகு தாத்தா அருகில் உள்ள பிரம்மகிரிக்கு எங்களை அழைத்து சென்று அங்கே உள்ள ஒரு பாறை மீது அமர்ந்து இதில்தான் அகஸ்தியர் தவம் இருந்து காவேரியை உருவாக்கினார் என்று அந்த புராண நிகழ்வை விளக்கினார். மன நிறைவோடு தாத்தாவுடன் ஊர் திரும்பினோம்.

அன்றிரவிலிருந்து குடகு மலையில் கனமழை. சாதாரண மழை இல்லை, இதுவரை கண்டிராத மழை. சந்தோஷத்தில் ஆர்ப்பரித்து கொண்டு காவேரித்தாய் கடல் நோக்கி பிரவகிக்க தொடங்கினாள். மக்கள் அமைதி பெற்றனர். அன்றிலிருந்து இது நாள் வரை, இந்த பகுதியில் பருவமழை தவறவில்லை. காவேரி வடிகால் பகுதி மீண்டும் சுபிட்சமாகிவிட்டது.

எண்ணிப் பார்த்தால் இது மனிதனால் செய்ய முடிந்த காரியமா? யாருக்கும் சிக்கலில்லாமல், செலவில்லாமல், அமைதியாக, தீர்க்கமாக, எங்கள் கண் முன்னாலேயே ஒரு மாபெரும் நதியை தாத்தா உயிர்ப்பித்து விட்டார். இந்த உலகமே கண்டிராத பிரமிக்க வைக்கும் விஞ்ஞானம் அல்லவோ இது?

இந்நிலையில் 2018 ஆம் ஆண்டு மீண்டும் தலகாவேரி செல்ல வேண்டும் என்றார் தாத்தா. அதற்கான காரணம் எங்களுக்கு

தெரியவில்லை. ஏற்கனவே காவேரி நதியை சரிசெய்து விட்டாரே மீண்டும் எதற்கு? காரணம் கேட்டபோது, ‘வந்து பார்’ என்றார். இந்த முறை ஒரு பெரிய குழு இங்கிருந்து தாத்தாவுடன் புறப்பட்டது. துலா மாதத்தில் அப்படி என்ன விஷயம் தாத்தாவை வரவழிக்கிறது? ஆர்வம் மேலோங்க அவருடன் சென்றோம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தலகாவேரி சென்றிந்த போது, நதியுடன், அந்த இடமும் அடுத்த மூன்று வருடங்களில் பெரிய அளவில் வளரும் என்று தாத்தா எங்களுக்கு சொல்லியிருந்தார். அக்டோபர் 22 ஆம் அன்று இரவு சென்னப்பமலையில் இருந்து கிளம்பி தாத்தாவுடன் தலகாவேரி சென்றோம். மறு நாள் துலா பௌர்ணமி. அங்கே ஆச்சர்யம் காத்திருந்தது.

அந்தப் பகுதியில் கடந்த இரு தினங்களாக கன மழை. ஆனால் நாங்கள் சென்ற பொது, தாத்தாவை வரவேற்பது போல தற்காலிகமாக நிறுத்தபட்டு, ஒரு அமைதியான, சாதகமான சூழல் நிலவியது. அதிக குளிரும் இல்லை, வெயிலும் இல்லை.

பன்னிரண்டு வருடங்களில் அகஸ்தீவரர் கோவில் வளாகமே புதுப்பிக்கபட்டிருந்தது. சுற்றிலும் புதிய மண்டபங்கள் முளைத்திருக்கின்றன. குளம் சிறியதாக்கப் பட்டிருந்தது, ஆனால் நேர்த்தியாக கட்டப்பட்டிருந்தது. பக்தர்கள் வசதிக்காக உடை மாற்றும் அறை, அன்னதான கூடம், அகலமான படிக்கட்டுகள், வரவேற்பு வளைவுகள், காமரா கண்காணிப்பு, போலீஸ் பாதுகாப்பு, வாகன நிறுத்தங்கள், சிறிய கடைகள் போன்றவை அந்த இடத்துக்குப் புதிய பொலிவை அளித்தன.

பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் சந்தித்த அதே பிரம்மச்சாரி இப்போதும் அங்கே உள்ள ஆசிரமத்தில் இருந்தார். எங்களையும்

தாத்தாவையும் கண்டதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார். அங்கே தங்கவும் உணவு ஏற்பாடும் செய்தார்.

மறுநாள் காலை சூரியோதத்தில் தாத்தா முன்னிலையில் அகஸ்தீஸ்வரருக்கு சிறப்பு பூஜை ஒன்று நடத்தபட்டது. அப்போது தாத்தா சூட்சுமத்தில் அந்த புதிய லிங்கத்துக்கும் ஆசீர்வாதம் செய்து புத்துயிர் அளித்தார். பக்தியுடன், பாரம்பரிய நம்பிக்கையுடன் வரும் பக்தர்களுக்கு அகஸ்தியர் நிர்மாணம் செய்த லிங்கம் அருளியது போல இந்த புதிய லிங்கத்துக்கும் ஜீவகாந்த சக்தியை அளித்தார். பிரம்மகுண்டத்துக்கும் மீண்டும் ஒருமுறை ஆசீர்வாதம் செய்தார் தாத்தா. அங்கே வந்த பக்தர்கள், இதுவரை தாத்தாவை கண்டிராதவர்கள், தாத்தாவிடம் ஆசீர்வாதம் வாங்க முண்டியடித்துக்கொண்டு வந்தனர். பக்தி பரவசத்தில் அந்த ஆலய வளாகம் திளைத்ததை மறக்கவே முடியாது.

இந்த அதிசய நிகழ்வுக்கு பிறகு, தாத்தாவுடன் பல பயணங்கள் மேற்கொண்டோம். ஒவ்வொரு இடத்திலும் ஒரு புதிய அனுபவம். ஒரு சரித்திர, புராண நிகழ்வை சாமானியர்களாகிய எங்கள் முன்னே மீண்டும் நடத்திக்காட்டிய அற்புதம்.

கோதாவரி, நர்மதா, பீமா சங்கர், சிந்து, காவேரி, துங்கா, பத்ரா போன்ற நதிகளையும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் உயிர்பித்து இயற்கைத் தத்துவங்களை சமநிலைப்படுத்தி மனித குலத்துக்கே புது வாழ்வு அளித்து வருகிறார் தாத்தா. இந்த நதிகள் உருவாகும் இடங்களில் உள்ள ஜோதிர்லிங்கங்களுக்கும் புத்துயிர் அளித்திருக்கிறார். சர்வ சாதாரணமாக, எந்த விளம்பரமும் இல்லாமல், யாருடைய உதவியும் இல்லாமல், இவை நிகழ்த்தபட்டன. மஹேசனே மக்களுக்கு செய்த பெரும் சேவை இவை.

மக்களின் வாழ்வாதாரத்தையும், நம்பிக்கையையும் பாதிக்கும் எந்த தடையையும் நீக்க தாத்தா, மிக எளிமையாக, ஆனால் உறுதியுடன் தன் வழியிலேயே தீர்வு அளித்து வருகிறார். ஒவ்வொரு நிகழ்வும் வித்யாசமானது. ஆச்சர்யம் தருவது. அலாதியான அனுபவம் தருவது. தாத்தாவின் லாவகத்தையும் திறமையையும், அவரின் மாபெரும் சக்தியையும் வெளிச்சம் போட்டு காட்டும் அரிய நிகழ்வுகள்.

புராண காலங்களில் மட்டுமே நிகழ்ந்தாக சொல்லப்படுகிற இத்தகைய நிகழ்வுகளை நேரடியாகக் கண்டு வியந்து புளகாங்கிதம் அடைந்து வருகிறோம். இது ஒரு தொடர்கதையாகி எங்களை செம்மைப்படுத்தத் தொடங்கிவிட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை.

**முடியாவுரை**

சென்னப்பமலை ஜோதிர்லிங்க சரித்திரம் இந்தப் பதிவுடன் முடியவில்லை. தெரிந்துக்கொண்ட, உணர்ந்து பார்த்து அனுபவித்தத் தகவல்களை மட்டுமே இங்கே தர முயற்சித்திருக்கிறோம். இதன் தொடர்ச்சி இன்னும் பல பதிவுகளாக வரும்.

யோசித்துப் பார்த்தால், எவ்வளவு விஷயங்கள், தெய்வ காரியங்கள் இந்த 25 ஆண்டுகளில் எங்கள் கண்முன்னே நடந்துள்ளது! தொடர்ந்து நடந்தும் வருகிறது! நான் முன்னரே குறிப்பிட்டது போல இதற்கு முன்னர் தோன்றியுள்ள ஜோதிர்லிங்கள் உத்பவமாகும்போது நேரடியாக பார்த்தவர் தற்போது யாரும் இல்லை, எங்கள் குரு தாத்தாஸ்வாமிகளைத் தவிர. அவரது ஆசியுடன், புராண, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஜோதிர்லிங்க உத்பவ நிகழ்வு இங்கே சென்னப்பமலையில் எங்கள் கண்முன்னே நடந்ததைக் காணும் பாக்கியம் பெற்றோம் .

அந்தவகையில் இந்தப்பதிவு இந்த அற்புத நிகழ்வின் முதல் நேரடித்தகவல் பதிவு விளக்கம். அதனாலேயே உலக அளவில் முத்திரை பதிக்கும் சரித்திர முக்கியத்துவம் பெறுகிறது. இந்த நம்பிக்கை பயணத்தில் எனது அனுபவங்களையும் பதிவு செய்யும் ஒரு பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது.

ஜோதிர்லிங்கம் பற்றிய ஒரு சிறிய அறிமுகமும், அதை சுற்றியுள்ள புராண சரித்திர நிகழ்வுகளையும் இங்கே உலக மேடைக்கு கொணர்ந்துவரமுடிந்துள்ளது உண்மையிலேயே பெரிய விஷயம்.

நண்பர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்தத் தொகுப்பில் விவரிக்கப் பட்டுள்ள அனைத்துத் தகவல்களும், என்னுடைய மற்றும் ஏனைய நண்பர்களின் எண்ணத்துக்குள் பிரதிபலித்த விஷயங்கள். நம்பிக்கையின் அடிப்படையில், அனுபவப்பூர்வமாக உணர்ந்தவை. அதை ஏற்றுக்கொள்வது, படிப்பவர்களின் நம்பிக்கையைப் பொறுத்தது, ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் மனநிலையையும் பொறுத்தது. இந்தப் பதிவு பற்றிய உங்கள் கருத்துக்களை நான் பணிவுடன் வரவேற்கிறேன்.

இந்தப் பதிவு என்னால் சாத்தியமா என்று நான் பல சமயங்கள் தயங்கியதும் உண்டு. ஆனால், எழுதத் துவங்கியதும் என்னால் நிறுத்தமுடியவில்லை. என் குரு எனக்கு அளித்த உத்வேகமும், ஞானப் பிரசாதமும் எனக்கு இந்தப் பதிவு வெற்றிகரமாக வெளிவர உதவியது என்பதில் சந்தேகமில்லை.

**அக்ஞான திமிரானந்தஸ்ய ஞானாஞ்சன ஷலாகயா,**

**சக்ஷுரும் மீளிதம் ஏன, தஸ்மை ஶ்ரீ குரவே நமஹ!**

(அஞ்ஞானம் என்கிற வியாதியில் உழன்றுள்ள நமக்கு, ஞானம் என்கிற மருந்து கொண்டு நம் கண்களைத் திறந்து நல்வழிகாட்டும் மஹாகுருவே, உங்களுக்கு கோடிவந்தனம்!)

அன்புடன்

நாராயணமூர்த்தி

# உலகின் 13வது ஜோதிர்லிங்கம்
# ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வர் உத்பவ வைபோகம் 2002












தனுஷ்கோடி



எய்தனூர்



வாரணாசி



பால் சுரந்து ஜோதிர்லிங்க உத்பவ இடத்தை அடையாளம் காட்டிய பசு



பத்ரிநாத்



ரிஷிகேஷ்



கேதார்நாத்



தலகாவேரி



ஹரித்வார்

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வர் ஜோதிர்லிங்க தேவஸ்தானம்

# நித்ய பூஜைகளும் சிறப்பு பூஜைகளும்

- தினமும் பிரம்மமுஹூர்த்த பூஜைகள், கலசாபிஷேகம், தீபாராதனை, சூர்யாஸ்தமன கால தீபாராதனை.
- ஒவ்வொரு ஞாயிறு அன்று காலை 9 மணிக்கு மாங்கல்ய (திருமணம்) வரம், சந்தான (குழந்தைப்பேறு) வரம், சரஸ்வதி (படிப்பு, தொழில் வளம்) வரம் பெற சிறப்பு பூஜைகள், மதியம் 12 மணிக்கு அன்னப்ரசாதம்.
- ஒவ்வொரு மாதம் அமாவாசை மற்றும் பௌர்ணமி அன்று அதிகாலை 5 மணிக்கு மற்றும் காலை 10 மணிக்கு சிறப்பு பூஜைகள், அபிஷேகம், மஹாஹோமம்.
- ஒவ்வொரு பௌர்ணமி அன்று மட்டும் காலை பூஜைகளோடு சூர்யாஸ்தமன நேரத்தில் (மாலை நேரம்) மஹாஹோமம் மற்றும் அபிஷேக பூஜைகள்
- சித்திரை 1 ஆம் நாள் (தமிழ் புத்தாண்டு சிறப்பு பூஜைகள்) அதிகாலை 4 மணிக்கு
- சித்திரை பௌர்ணமி சிறப்பு பூஜை - காலை 5.30 மணி, 10 மணி மற்றும் சூர்யாஸ்தமன அபிஷேகம்
- ஆனி 31ஆம் நாள் - ஸ்ரீ ஆதிசங்கரர் குரு பூஜை : மாலை 5.30 மணி
- ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி சிறப்பு பூஜை - காலை 5.30 மணி மற்றும் மாலை 6 மணி
- ஐப்பசி பௌர்ணமி மட்டும் காலை 5 மணி மற்றும் சூர்யாஸ்தமன அன்னாபிஷேகம்
- மார்கழி 18 முதல் 25 வரை நவக்ரஹ சிறப்பு பூஜை காலை 7 மணி
- மார்கழி 27 ஸ்ரீ மஹாலட்சுமி சிறப்பு பூஜை மாலை 6 மணி
- மார்கழி பௌர்ணமி (ஆருத்ரா சிறப்பு பூஜை) அதிகாலை 5 மணி (ஆயுள் பலம் பெற) மற்றும் மாலை 7 மணிக்கு
- மார்கழி அமாவாசை (ஹனுமன் ஜெயந்தி சிறப்பு பூஜை) அதிகாலை அபிஷேகம், காலை 10 மணிக்கு மஹாஹோமம்
- தை பொங்கல் சிறப்பு பூஜை அதிகாலை 5 மணி
- **மாசி மஹாசிவராத்திரி பெருவிழா :** கலசபூஜை, கோபூஜை, மஹாஹோமம், கலசாபிஷேகம், பாலாபிஷேகம் (நாள் முழுதும் பக்தர்கள் தாங்களே ஜோதிர்லிங்கத்தை தொட்டு பால் மற்றும் வில்வ பத்ரம் கொண்டு பூஜை அபிஷேகம் செய்யலாம்). மதியம் 12 மணிக்கு சிறப்பு கால பூஜை, அன்னப்ரசாதம், மாலை பிரசங்கம், இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள். சூர்யாஸ்தமன பூஜை, இரவு 7 மணிக்கு உற்சவர் ஊர்வலம், இரவு 10.30 மணிக்கு ருத்ரஹோமம், கலசாபிஷேகம், சொர்ணாபிஷேகம், கனகாபிஷேகம், அன்னாபிஷேகம்
- **மஹா சித்தர் கோடிதாத்தாஸ்வாமி குருபூஜை :** புரட்டாசி 25 (அக்டோபர் 11) அதிகாலை முதல் கோபூஜை, பரிவாரமூர்த்திகளுக்கு அபிஷேகம், மஹாஹோமம், குருபூஜை, கனகாபிஷேகம், பாதபூஜை, அன்னப்ரசாதம்.

**இந்த பூஜை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் மற்றும் உபயதாரர்கள் முன்பதிவு செய்துக்கொள்ளவும்.**

## அன்றாடம் ஆதவனைத் தொழுதால் ஆயுள் பெருகும்



### நாடி வந்தால் கோடி நலம்
### குரு அருள் பொருள் தரும்
### தானம் தனம் தரும்

## உலகின் 13வது ஜோதிலிங்கம்
## ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரர்
# திருவாலயம் கட்டுவோம்!

ஏழு ஜென்ம சாபங்கள் நீங்கவும், சகல தோஷங்கள், மனக்குறைகள், கஷ்டங்கள் விலகவும் ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரர் ஜோதிலிங்க தேவஸ்தானத்தில் ஞாயிறுத்தோறும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. ஸ்ரீ பொன்முடி சூர்யநந்தீஸ்வரருக்கு வெண்தாமரை மலரை சமர்ப்பித்து, தொட்டு வணங்கி வழிப்பட்டால், சர்வேஸ்வரன் ஏற்றுக்கொண்டு, ஜென்ம சாப விமோசனமும், சகல தோஷமும் நிவர்த்தி செய்து, அஷ்ட ஐஸ்வரியம் அளிக்கிறார். வழிபடும்போது இந்த மந்திரத்தை மூன்று முறை மனதார பிரார்த்தனை செய்யவேண்டும்.

**“ஓம் நமச்சிவாயம் சிவ சிவா சர்வேஸ்வரா ஓம் பொன்முடி ஈஸ்வரா”**

பார்த்தாலே பரவசம் !

நினைத்தாலே நிம்மதி !!